
M.S. சுப்புலக்ஷ்மி பாடிய
குக சரவண பவ
(முருகன் ஸ்தோத்ரம்)
M.S. சுப்புலக்ஷ்மியின்-சாரீர இனிமை
ஒடியன் ரிகார்டிங்கின்-திறமை
பக்கவாத்தியத்தின்-மேன்மை
பாட்டின்—உயர்வு
ராகத்தின்—சிறப்பு
இவைகளின் அபூர்வ அமைப்பே
ஒடியன்
C.A. 1305 குகசரவண
ஸ்யாமசுந்தர
C.A 1306 நீது சரண
பாகம் 1 & 2
Odeon
S. Ahmed
KR
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ் மதராஸ்

### சந்தா விகிதம்

உள் நாடு

| | | | |
|---|---|---|---|
| வருடச் சந்தா | ... | ரூ. | 3 0 0 |
| 6 மாதம் | ... | „ | 2 0 0 |
| தனிப்பிரதி | ... | „ | 0 4 0 |

| | பர்மா | மலேயா |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூ. 4 0 0 | ரூ. 5 0 0 |
| 6 மாதம் | „ 2 4 0 | „ 2 12 0 |

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.


### "சக்தி" மாத வெளியீடு
### விளம்பர விகிதம்

அட்டை

| | | | |
|---|---|---|---|
| 2-வது பக்கம் | ... | ரூ. | 20 |
| 3 „ | ... | „ | 20 |
| 4 „ | ... | „ | 30 |

உள் பக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கம் | ... | ரூ. | 15 |
| ½ „ | ... | „ | 7-8 |

மற்ற விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "சக்தி",
51/C, 52, அரமனைக்காரத் தெரு,
சென்னை.


## ஆசிரியர் அறிவிப்பு

'சக்தி'க்குக் கதை, கட்டுரை, கவிகள் அனுப்புவோர், காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்ப வேண்டுகிறோம்.

கதை, கட்டுரை, கவிகளைத் திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரை, கவிகளைத் திரும்பப் பெற வேண்டுவோர், தங்கள் விஷயத்தை அனுப்பும்போது கூடவே போதிய தபால் தலை வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
'சக்தி'

# பொருளடக்கம்


அரசியல் கண்ணுமூச்சி ... 49
காலச் சுழல் ... 50
யுத்தம் எப்படி ? ... 52
ஸ்ரீ ரவீந்திர நாதர் — கு. ப. ராஜகோபாலன் ... 53
ஒதுங்கி நிற்கும் காந்தி — தி. ஜ. ர. ... 54
பாரதியின் மந்திரக் கவிகள் — ரா. நாராயணன் ... 55
நோயும் மருந்தும் ... 56
ஜனநாயக ரூஸ்வெல்ட் — 'ஸரவி' ... 57
வேம்பண்ணு பட்டணம் பார்க்கிறார் — கொத்தமங்கலம் சுப்பு ... 59
ரகஸ்ய ஆயுதம் — 'உல்லாவி' ... 61
ஓர் ஆசிரியர் காதல் — கே. ஸ்ரீனிவாசன் ... 63
எங்கள் பாட்டி — பண்டித முத்துசாமி ... 65
விதியை வெல்லும் வழி — ஸ்ரீ அரவிந்த கோஷ் ... 66
துயர கீதம் — ஆர். திருஞானசம்பந்தம் ... 67
காலத்தேர் — சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 69
எண்ணச் சுடர்கள் — வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ. ... 72
ஐந்து முட்டைகள் — 'குளவி' ... 73
தாய்நாடு : ராஜாங்கம் — லியோ டால்ஸ்டாய் ... 74
காதல் — ஆர். பி. மகாதேவ சிங் ... 74
பறித்த பூக்கள் ... 75
எதிரியைக் காட்டும் ஒலிக் கருவி — டாக்டர் ல. காமேசுவர சர்மா ... 77
பாரத சக்தி மஹாகாவியம் — சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 79
கூண்டுக் கிளி — ஹரீந்திரநாத சட்டோபாத்யாயா ... 82
பெண்கள் பார்லிமெண்டு — எஸ். விசாலாட்சி ... 85
அவதார மூர்த்தியின் படம் — சங்கு சுப்பிரமணியன் ... 87
ஆபீஸில் யுத்தம் — போத்தன் ஜோஸப் ... 89
காந்தி வாக்கு — ('ஹரிஜ'னி விருந்து) ... 91
துணுக்குகள் ... 92
புத்தக உலகம் ... 93
பாலர் பாட்டு : முத்தம் தா — தே. வி. ... 94
கதை : மூன்று மிட்டாய் ... 95
இந்த இதழில் ... 96

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் ௩ : இதழ் ௨ | விக்கிரம – ஆவணி


## அரசியல் கண்ணாமூச்சி!

"லண்டன் மாநகரிலா—உலகிலே அழகிய, ஆங்கில சாம்ராஜ்யத்தின் நடுநாயகமான லண்டன் மாநகரத்திலா—நூற்றுக் கணக்கான ஜெர்மன் விமானங்கள் வந்து குண்டு சொரிகின்றன! ஐயோ! அந்த ஜனங்கள் என்ன தவிக்கிறார்களோ! குழந்தை குட்டிகள் என்ன கண்கலங்குகின்றனவோ" என்று நாம் கண்ணீர்விடத் தேவையில்லை. பிரம்மாண்டமானதோர் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த அந்த வீர ஜாதியாரைப் பற்றி அடிமை இந்தியன் கண்ணீர் விடுவதற்கு அர்த்தமே கிடையாது. வீர பிரிட்டிஷ் மக்கள் இம்மாதிரி எத்தனையோ துன்பங்களைத் தாங்குவார்கள். ஜெர்மன் அரக்கத் தனத்தை பிரிட்டிஷ் மக்கள் இன்று தன்னந்தனியாக எதிர்த்து நிற்பதே அவர்களது இணையற்ற தீரத்தைக் காட்ட வில்லையா?

ஆனால், ஒன்றுதான் நமக்கு மிகமிக வருத்த மளிக்கிறது. இங்கிலாந்தின் அபாயம் அதிகரிக்க அதிகரிக்க, இந்தியா சந்தோஷிக்க வில்லை; இங்கிலாந்து தன்னைத்தானே காத்துக் கொள்ள அதிக ஜாக்கிரதையும் தயாரிப்பும் கொள்ள வேண்டிய இந்த நேரத்திலும், நம்மையும் கட்டிக்கொண்டு அழுகிறதே; "உன்னை நீயே காத்துக்கொள்ள உனக்கு யோக்கியதை கிடையாது. உன் ராணுவம் இன்னும் என் கையிலேதான் இருக்கவேண்டும்" என்றே இன்னும் சொல்கிறதே! இதுதான் சகிக்க முடியாத துயரமாயிருக்கிறது. தன்னைத்தானே காத்துக்கொள்ளத் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ள இங்கிலாந்து, நம்மை நாமே காத்துக் கொள்ளும்படி நம்மையும் சுதந்திரமாய் விட்டுவிடலாகாதா? இன்று இங்கிலாந்து வெளியார் படையெடுப்பினின்றும் நம்மைப் பாதுகாக்கத்தான் முடியுமா? சுதந்திர இந்தியாதான் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள முடியும்; அடிமை இந்தியா யாருக்காவது அடிமையாய் இருந்து கொண்டேயிருக்க வேண்டியதுதான். உன்னத லட்சியங்களைப்பற்றிய யுத்தமாயிருந்தாலும் சரி; அற்ப நோக்கங்கள் கொண்ட போர்களாயினும் சரி—அடிமை இந்தியாவுக்கு எல்லாம் ஒன்றுதான். கூண்டிலே அடைபட்ட கிளிக்கு, வெளியிலே நடக்கும் விவகாரங்களைப்பற்றி என்ன தெரியும்? தன் கூண்டை உடைத்துக் கொண்டு வெளியே கிளம்பும் ஒரே முயற்சிதான் அதற்குத் தெரியும். வீட்டிலே தீப்பிடித்துக் கொண்டால், தான் தப்பித்துப் பறந்தோடக்கூட அதனால் முடியாது. தான் தப்பித்தோட முயலும் ஒருவன், அந்தக் கூண்டைத் திறந்து விடுவதை விட்டு, அதையும் தூக்கிக்கொண் டோடுவதா அறிவுடைமை?

இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கத்தைப்பற்றி இந்திய வைஸ்ராய் லின்லித்கோவும் அவரைத் தாங்கி இந்தியா மந்திரி அமெரியும் பேசிவிட்டார்கள். அந்தப் பேச்சுக்களின் சாரம், புதிய மெருகு கொடுத்த பழைய கதைதான்:

(1) இந்திய வைஸ்ராயின் நிர்வாக சபையிலே, இதுவரை டாம், டிக், ஹாரிகளையே பூராவும் நியமித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, இரண்டு ஜின்னாக்கள், ஒன்றரை சவர்க்கார்கள், மூன்று புலாபாய்கள் முதலிய சில்லரையும் நியமித்துக்கொள்கிறோம். அவர்கள் நாலாயிரம் ஐயாயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டு பிரிட்டிஷ் சர்க்கார் கட்டளைப்படி ஹிட்லரை முறியடிக்க நம்மோடு ஒத்துழைக்கலாம்; இந்திய ஜனப் பிரதிநிதிகளடங்கிய சட்ட சபைக்கு அவர்கள் மீது அதிகாரம் கிடையாது.

(2) யுத்தம் முடிந்தவுடனே, இந்திய அரசியல்

கட்சிகளெல்லாம் ஒற்றுமைப் பட்டால், அவற்றின் பிரதி நிதிக ளடங்கிய ஒரு சபை கூடி, இந்திய அரசியலைத் தானே தயாரிக்கலாம். அந்தத் திட்டத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டு கவனித்து, தன் சில பொறுப்புகளை நிறை வேற்றுவதற்குக் குந்தக மில்லாத ஷரத்துக்களோடு, அங்கீகாரம் செய்யும். எந்த இந்தியச் சிறுபான்மை வகுப்பையும் அவர்களுக்கு இஷ்டமில்லாத ஒரு இந்திய சர்க்காரின் கீழே மட்டில் நாம் ஒப்படைக்கவே மாட்டோம்.

சுருங்கச் சொன்னால், இந்த இரண்டுந்தான் அமெரி—லின்லித்கோ அறிக்கைகளின் சாரமும் கருத்துமாகும்.

காங்கிரஸ், "தேசிய சர்க்கார் வேண்டும்" என்று கேட்டது. "வைஸ்ராயின் நிர்வாக சபையில் சிலருக்கு உத்தியோகம் தருகிறோம்" என்று சொல்லுகிறது பிரிட்டன்.

காங்கிரஸ், "இந்திய அரசியல் திட்டத்தை இந்திய ஜனப்பிரதிநிதிகளே யடங்கியதோர் சபை தயாரித்துக் கொள்ளும் உரிமை வேண்டும்" என்று கேட்டது. "இந்திய வகுப்புவாதிகளை யெல்லாம் சமரசப்படுத்தி, இந்தியர் முப்பத்தைந்து கோடிப்பேரும் ஒற்றுமையாய் வந்து கேட்டீர்களானால், எங்கள் முடிவான அங்கீகாரத்துக் குட்பட்டு, அந்தத் திட்டத்தைத் தயாரிக்க, உங்களுக்கு உரிமை யளிக்கிறோம்" என்கிறது பிரிட்டன்.

உலக நாகரிகத்தின் பரம சத்துருவான ஹிட்லர் வந்து தாக்கும்போதும், பிரிட்டன் இப்படி இந்திய விஷயத்தில் அரசியல் கண்ணாமூச்சி யாடுவதை, பிரிட்டனின் துர்ப்பாக்கியம் என்பதா? நமது துர்ப்பாக்கியம் என்பதா?

## காலச் சுழல்

### பிள்ளையார் வேஷமா?

தொண்டர் படைகள் ஒரே விதமான உடைகள் அணிந்து, அணி வகுத்து, பகிரங்கமான பயிற்சிகளோ, ஊர்வலங்களோ நடத்தலாகாது என்று இந்திய சர்க்கார் ஓர் தடை யுத்தரவு விதித்துள்ளது. இதனால், சுமார் இருநூறு தொண்டர் படை ஸ்தாபனங்கள் பாதிக்கப் படுகின்றன.

உத்திரவு இரண்டு காரணங்கள் சொல்லுகிறது: (1) வகுப்பு வாதத் தொண்டர் படைகளால் பொது ஜன அமைதிக்கு அபாயமாம்; (2) வகுப்பு வாதமோ இல்லையோ, எந்தத் தொண்டர் படையும் சர்க்கார் படைகளின் வேலையைத் தாங்களே கைக்கொள்ளப் பார்க்கின்றனவாம்.

வகுப்பு வாத அல்லது பிற குறிப்பிட்ட தொண்டர் படை ஸ்தாபனங்களை அங்கங்கே சட்ட விரோத சபைகள் என்று அறிவித்துத் தடுக்க, ஸ்தல சர்க்காருக்கு ஏற்கனவே அதிகாரமுண்டு. எந்த நாகரிக நாட்டிலும் இப்படிச் சமூலமாகச் சகல தொண்டர்படைகளையும் தடுக்கும் வழக்கமில்லை.

இந்தத் தடையுத்தரவு, அடக்கு முறையின் பிள்ளையார் வேஷமாயிருக்குமோ என்றுதான் நாம் அஞ்சவேண்டி யிருக்கிறது.

### குற்றால மகாநாடு

திருக் குற்றாலத்திலே ஒரு மகாநாடு நடந்தது. அதற்குத் தமிழ் நாட்டின் இரண்டாவது 'பத்திரிகாசிரியர்கள் மகாநாடு' என்று பெயர். ஸ்ரீ வி. ஆர். சீனிவாசன் தலைமை வகித்தார். பல பத்திரிகை நிருபர்கள் போயிருந்தார்களாம். பத்திரிகைத் தொழிலில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களோ பிறரோ இல்லையாம். அழைப்பு இல்லாததுதான் காரணம்.

மகாநாடு சிறப்பாகவே நடந்தது. தலைவர் நன்றாகவே பேசினார். "குறைந்த எதிர்ப்பு வழியிலே நடவுங்கள்; பலருடனும் நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். சங்கம் ஸ்தாபித்துக் கொள்ளுங்கள்" என்றெல்லாம் அவர் உபதேசித்தார். சமாசாரப் பத்திரிகைகளி லெல்லாம் விஷயம் விமரிசையாக வெளிவந்தது.

அதெல்லாம் சரிதான். தமிழ்ப் பத்திரிகாசிரியர்களைக் கட்டுப்பாடு கொள்ளச்செய்யும் இந்த வேலையை யார் செய்வது? எப்படிச் செய்வது? இதுதான் பிரச்னை. பூனைக்கு மணிகட்டும் காரியத்தைப் போல.

### வருமுன் காப்பு!

பர்மாவின் மாஜிப் பிரதம மந்திரி டாக்டர் பா மா கைது செய்யப்பட்டார். பர்மா சுதந்திர பிளாக் என்ற அரசியல் சங்கத்திலே அவர் நெருங்கிய தொடர்பு கொண்டதே அவர் குற்றமெனத் தோன்றுகிறது. அக்கட்சி அவரைத் தனது சர்வாதிகாரியாகத் தேர்ந்தெடுத்தது.

பர்மா சர்க்காருக்கு உடனே 'கிலி' பிடித்து விட்டதாக்கும். எங்கேயாவது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு விரோதமாக அவர் பிரசாரம் செய்யக் கிளம்பிவிட்டால்—? வருமுன் காப்போன் தோரணையில், அவ்வரைப் பர்மா சர்க்கார் கைது செய்திருக்குமோ?

இதுவரையில், பிரிட்டனுக்கு விரோதமாய் அவர் ஒரு பிரசாரமும் செய்யக் காணோம். பர்மாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்ற உன்னத லட்சியத்தை அவர் கடைப் பிடிப்பதே அவரிடம் பர்மா சர்க்காருக்கு மருட்சி ஏற்பட்ட காரணம் போலும்! தென்னாப்பிரிக்காவிலே மாஜிப் பிரதம மந்திரி ஜெனரல் ஹெர்ட்ஸாக், பிரிட்டனுக்கு உதவி செய்யக் கூடாதென்று கூடப் பிரசாரம் செய்கிறார். அவர் சுதந்திரமாய் நடமாடுகிறார். பர்மாவிலோ, சுதந்திர லட்சியம் கூடக் குற்றமாயிருக்கிறது! குடியேற்ற நாட்டந்தஸ்து வரப்போகும் அடையாளம் இதுதானோ?

### ரிஸர்வ் பாங்கி அறிக்கை

ஐரோப்பிய யுத்தத்தால், இந்தியாவின் நிலையிலுள்ள பல பிற நாடு

கள், வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் விறு விறு என்று முன்னேறி வருகின்றன. இந்தியாவோ, அன்று பிறந்த மேனிக்கு அழிவில்லையென்றிருக்கிறது. காரணம் என்ன? இந்திய சர்க்காரும் ரிஸர்வ் பாங்கியும் கைக்கொண்டுள்ள கொள்கைதான். ரிஸர்வ் பாங்கியின் 1939-40-ஆம் வருஷ நாணயச் செலாவணி-நிதி அறிக்கையைப் படிக்கும்போது இது புலனாகிறது.

யுத்தம் ஆரம்பித்தவுடனே மொத்த விலைகள் ஏறின; அயல் நாட்டுடன் இந்திய வியாபார விலை மதிப்பு அதிகரித்தது. கைத்தொழில்கள் விருத்தியடைந்தன. அந்த நிலைமையைச் சர்க்கார் பயன்படுத்திக்கொண்டு, தொழில், வியாபாரவிருத்திக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார்கள். ஆனால், யுத்த அதிக லாபத்துக்கு வரிபோட மட்டில் சட்டம் செய்ய முன் வந்தார்கள். வியாபாரமும் விலைகளும் பழையபடி விழுந்துவிட்டன.

இது மட்டிலுமல்ல. இந்தியாவின் தங்கத்தை இங்கிலாந்து பாங்கிக்கு விற்று, ஸ்டெர்லிங் செக்யூரிட்டிகளை வாங்கி விட்டார்கள். நாணயப் பரிவர்த்தனையோ, ஸ்டெர்லிங் மூலமாகவே நடக்கவேண்டும் என்று வேறு கட்டுப்பாடு. இதனையெல்லாம், இந்தியாவுக்கு நஷ்டந் தான்.

இந்தக் கணக்கைப் பாருங்கள் :

| ஞூ. | இந்தியாவில் வழங்கிய நோட்டுகள் | இந்திய சர்க்காரிடம் உள்ள ரிஸர்வ் |
|---|---|---|
| 1935-36 | ரூ. 1,6411 லட்சம் | தங்கம் 4442 லட்சம் ரூபாய். ஸ்டெர்லிங் 6213 லட்ச ரூபாய். |
| 1939-40 | ரூ. 2,0886 லட்சம் | தங்கம் 4442 லட்சம் ரூபாய். ஸ்டெர்லிங் 7832 லட்ச ரூபாய். |

தங்கம் விலை உயர்ந்துகொண்டே வருகிறது. ஸ்டெர்லிங் மதிப்பு விழுந்து வருகிறது. அப்படியிருந்தும் நமது சர்க்கார், தங்க இருப்பை அதிகரித்துக் கொள்ளாமல், ஸ்டெர்லிங் இருப்பை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ‘ஹிந்து’ப் பத்திரிகை, இதையெல்லாம் சுட்டிக்காட்டி, சர்க்காரின் நிதிக் கொள்கை அபத்தத்தைக் கண்டித்திருக்கிறது. சர்க்கார் கேட்குமா? திருந்துமா?

## கவிஞர் பெற்ற கௌரவம்

நவ இந்தியாவின் தவப் புதல்வரும் உன்னதக் கவிஞருமான ரவீந்திரநாத தாகூருக்கு ஆகஸ்டுமீ 7உ யன்று ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலையார், ‘டாக்டர்’ என்ற கௌரவப் பட்டத்தைச் சூட்டினர். இந்திய சமஷ்டிக் கோர்ட் பிரதம நீதிபதி மாரிஸ் குவயர், அந்தச் சர்வகலா சாலையின் பிரதிநிதியாக, ரவீந்திரரின் சாந்திநிகேதனுக்குத் தாமே விஜயம் செய்து, அந்தப் பட்டத்தை வழங்கினர். இந்த இணையற்ற கௌரவத்தை இந்தியா மந்திரி அமெரி கூடக் குறிப்பிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில், தாகூரின் இலக்கியத் திறமையைப்பற்றி நண்பர்கள் அறிந்துகொள்வது அவசியம். அது பற்றிய ஓர் கட்டுரையை வேறு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். நண்பர்கள் படிக்கவேண்டும்.

நிற்க, டாக்டர் தாகூர் பெற்ற கௌரவம், நாடு பெற்ற கௌரவம். அவரது பரந்த சர்வதேச நோக்கு, பிரிட்டனின் உள்ளத்தைத் தொட்டிருப்பது உண்மையானால், இந்தியப் பிரச்னை உடனே தீர்வது நிச்சயம். தீருமா? அல்லது எல்லாம் வெளி மயக்காய்த் தான் முடியுமோ?

## ஸ்மட்ஸ் நையாண்டி

சகல ஜனங்களுக்கும் சம நீதி வழங்கவேண்டும் என்பது ஓர் உன்னத தர்மம். இந்த உன்னத தர்மத்தைப்பற்றி, தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு நாள் ரேடியோ மூலம் அகில உலகத்துக்கும் உபதேசம் செய்தார்.

“உங்கள் பிரசங்கம் ரொம்ப ரொம்ப அருமையாயிருக்கிறது. அந்த உன்னத லட்சியத்தை, நீதியை, அங்கேயுள்ள எங்கள் இந்தியருக்கும் வழங்குங்கள்” என்று தந்தியடித்தார் ஸர் பி. தாகூர்தாஸ்.

“ஆஹா! எப்பொழுது பார்த்தாலும் உங்கள் இந்தியர்களை உயர்த்துவது பற்றியே கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், உங்கள் இந்தியாவிலுள்ள இந்தியர்களைவிட, இங்கே வந்துள்ள இந்தியர்கள் அநேக அம்சங்களில் அதிக சந்தோஷமாய்த்தான் இருக்கிறார்கள்” என்று, ஜெனரல் ஸ்மட்ஸின் பதில் வந்தது.

இந்தப் பதிலின் அர்த்தமென்ன? நையாண்டி தானே! ஸ்மட்ஸின் கேலிக்கு நாம் மட்டிலுமல்ல, பிரிட்டிஷ் சர்க்காரும் பதில் சொல்லியாக வேண்டும். தாங்கள் பிறந்த தாய் நாட்டைவிட, அயல் நாடொன்றிலே இந்தியர் அதிகச் சந்தோஷமாய் இருப்பது உண்மையென்றால், பிரிட்டிஷாரின் இந்திய ஆட்சிக்கே அவமானமல்லவா? பொய்யென்றால், ஸ்மட்ஸ் ஏன் இந்தப் பொய்யை இவ்வளவு துணிச்சலாய், பகிரங்கமாய்ச் சொல்லுகிறார்?

## வகுப்புவாத உச்சம்

வங்காள சர்க்காரிலே, முஸ்லீம்களுக்கு இவ்வளவு உத்தியோகம் என்று விகிதாசாரம் வகுத்திருக்கிறார்கள். அந்த விகிதா சாரத்தைப் பூர்த்திசெய்யப் போதிய முஸ்லீம் அபேட்சகர்கள் வங்காளத்துக்குள்ளே கிடைக்கா விட்டால் என்ன செய்வது? முஸ்லீம்களல்லாத பிற வங்காளிகளை நியமிக்க வேண்டியதுதானே. அப்படிச் செய்வதில்லையாம் பஸ்லுல் ஹக் சர்க்கார். வெளிமாகாணத்திலிருந்தாவது முஸ்லீம்களைத் தேடிப்பிடித்துக்கொண்டு போய் அந்த உத்தியோகங்களை நிரப்புகிறார்களாம்! தங்களுடைய இந்த அரிய கொள்கையை, வங்காளச் சட்டசபையில் விவசாய மந்திரி ஸ்ரீ. தமிசுத்தீன் கான் அறிவித்திருக்கிறார்.

ஆமாம்; இதர மாகாணத்திலும் போதிய முஸ்லீம்கள் அகப்படாவிட்டால், வங்க சர்க்கார் என்ன செய்வார்கள்? இதை அந்த மந்திரியார் தெரிவிக்கவில்லை. நாமாக ஊகித்துக் கொள்ளவேண்டியது தான். கேட்க வேண்டுமா? மெக்காவிலோ, மெடினாவிலோ போய்த் தேவையான முஸ்லீம்களை ஸ்ரீ. பஸ்லுல் ஹக் பிடித்து வருவார் போலும்! அட ஈசுவரா! இந்த வகுப்புவாத விஷம் எப்பொழுது தான் நம் நாட்டைவிட்டுத் தொலையப் போகிறதோ தெரியவில்லை.

# யுத்தம் எப்படி?

## சர்ச்சில் பேச்சு

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ சர்ச்சிலின் பேச்சுக்குப் பிறகு, மற்றோர் யுத்த விமர்சனம் முற்றிலும் அநாவசியம். சர்ச்சிலின் பேச்சுக்கள், எப்போதுமே அருமையா யிருக்கும். பொறுப்பற்ற நாட்களிலே கொஞ்சம் விஷமம் கலந்திருக்கும்; இப்போதோ, யுத்தத்துக்குப் பிறகு, அதுவுமில்லை. ஒவ்வொரு பேச்சும் செதுக்கப்பட்ட சிற்பம்போல், கம்பீரமும் தன்னம்பிக்கையும் நிறைந்து பொலிகிறது.

இதோ பிரிட்டன் விழுந்துவிடப் போகிறது, அதோ விழப்போகிறது என்று சில்லறை மனிதர்கள் பயம் கொள்ளலாம். ஆனால், இதுவரை நிகழ்ந்த போர் வேறே; இன்று பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் நிகழும் போர் வேறே. சர்ச்சிலின் பிரசங்கத்தை ஊன்றிப் படிக்கும் நண்பர்களுக்கு இது ஓரளவு விளங்கும்.

யுத்தத்தின் பல்வேறு அம்சங்களையும் ராணுவ ஏற்பாடுகளின் அங்கங்களையும் தங்களுக்கும் எதிரிக்குமுள்ள பல்வேறு பலா பல சாதக பாதகங்களையும் ஒளியாமல் மிக அழகாகவும் கோவையாகவும் சர்ச்சில் எடுத்துரைத்து விளக்கியிருக்கிறார். யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட இன்று பிரிட்டன் புதுப் பலமும் புதுத் தைரியமும் பெற்று நிமிர்ந்து நிற்கிறது. இதுதான் சர்ச்சில் பேச்சின் சாரம்.

## 'சோற்று'ப் பஞ்சம்!

ஜெர்மனி பிடித்த நாடுகளிலிருந்த உணவையெல்லாம், நாஜிகள் கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டார்கள். அந்த ஜனங்களெல்லாம் பஞ்சமோ பஞ்சம் என்று தவிக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து, அவர்களுக்கு உணவனுப்ப இடம்தர முடியுமா? முடியாது என்று வருத்தத்தோடு தெரிவிக்கிறார் ஸ்ரீ. சர்ச்சில். அவர்களுக்குச் செல்லும் உணவை நாஜிகளே கொள்ளையடித்துச் செல்வார்கள். பிரயோசனமென்ன?

நாஜி ஆதிக்கத்தை ஒழித்துப் புரட்சி செய்தாலொழிய அவர்கள் பட்டினி தீரப்போவதில்லை. ஒரு நாள் அவர்கள் வெறிகொண்டு கிளம்பத்தான் போகிறார்கள். நேற்றுவரையில், சுதந்திரமாயிருந்த மக்கள், இன்று சோற்றுக்கும் பஞ்சம் வந்து தவிப்பதென்றால், சும்மா விருப்பார்களா?

ஜெர்மனிக்கும் அதன் ஆதிக்கத்துக்குட்பட்ட ஐரோப்பா முழுவதற்குமே ஒரு பொருளும் செல்லாமல் சூழ்ந்து முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றன பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள். "நானும் உன்னை இதேமாதிரி செய்துவிடுகிறேன் பார்" என்று மிரட்டுகிறார் ஹிட்லர். பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா? சர்ச்சில் எள்ளி நகைக்கிறார். தன்னம்பிக்கையின் நிறைவில் பிறந்த நகைப்பு.

இங்கிலாந்திலே, நூற்றுக் கணக்கான ஜெர்மன் விமானங்கள் வந்து குண்டு சொரிகின்றன வெனில், ஜெர்மனியிலும் பிரிட்டிஷ் விமானங்கள் இப்படித்தான் போய்ச் சேதம் விளைவிக்கின்றன. மொத்தத்தில்—சர்ச்சிலின் பிரசங்கப்படி—பிரிட்டனின் பலம் வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்து வருகிறது; ஜெர்மன் பலமோ தேய்ந்து வந்துதான் தீரவேண்டும். ஆதலால் இறுதிவெற்றி பிரிட்டனுக்கே. என்று நாம் துணிந்து நம்பலாம்.

## படைகள் வாபீஸ்

ஷாங்காயிலிருந்து, பிரிட்டன் தனது துருப்புகளை வெளியேற்றிக் கொண்டது; இதனால், ஜப்பானுக்கு ஓரளவு திருப்தி.

ஸோமாலிலாந்திலிருந்து பிரிட்டிஷ் படை வெளியேறி விட்டது. இதாலியர் அதைக் கைவசப்படுத்திக் கொண்டார்கள்.

இந்த இரு நிகழ்ச்சிகளும் எதைக் காட்டுகின்றன? பிரிட்டனின் பலவீனத்தையே என்று சாமானிய மக்கள் எண்ணக் கூடும். உண்மை அஃதுவல்ல.

பிரம்மாண்டமான யுத்தத்திலே, தலைமை யுத்த அரங்கத்தை விட்டு, எங்கெங்கோ சிதறிய சிறு சிறு பிரதேசங்களிலெல்லாம் சம கவனம் செலுத்த முடியாது. ஆரம்பத்திலிருந்தே பிரிட்டன் ஒரு முக்கியக் கொள்கையை அனுஷ்டித்து வந்திருக்கிறது; தனது பெரும் ராணுவ பலத்தை, சேதாரமின்றி எவ்வளவு அதிகமாய் முடியுமோ அவ்வளவும் காப்பாற்றி வந்திருக்கிறது. ஆவேசம் கொண்ட நாஜிகள் வெறி பிடித்துப் பாய்வது போல, பிரிட்டனால் நடந்து கொள்ள முடியாது; வீண் சேதங்களுக்கு அது தயாரில்லை. சாம்ராஜ்யத் தலைமை நாடான பிரிட்டன் எதுவரையில் ஜயிக்கப்படவில்லையோ அதுவரையில் சாம்ராஜ்ய முழுவதற்குமே அச்சமில்லை. இன்று பிடிபட்ட சோமாலிலாந்து, யுத்த முடிவிலே வெற்றி நேரத்திலே, வட்டியும் முதலுமாய் பிரிட்டனுக்குத் திரும்பி வரத்தான் போகிறது. சிறிய தற்காலிக நஷ்டங்கள், முடிவான வெற்றிக்குப் படிக்கட்டுகள் போல. பிரிட்டன், இதனாலெல்லாம் மனஞ் சோர்ந்து விடுமென்று எதிரிகள் கனவு காணலாம். அது வெறுங் கனவேயாகும்.

## ருஷியாவின் மாறுதல்

ஜெர்மனிக்கும் ருஷியாவுக்கும் உள்ள நேசம் துளிக்கூட மாறவில்லை என்று மாலடாவ் வற்புறுத்துகிறார். ஆனால் பிரிட்டனிடம் அவர் பழைய ஆத்திரத்தைக் கொட்டவில்லை. ஸர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸை, ருஷியாவுக்கு பிரிட்டிஷ் ஸ்தானீகராக நியமித்ததை அவர் பாராட்டுகிறார்.

"விரும்பத்தக்க நிபந்தனைகளின் மேல் சமாதானம் வேண்டுமென்றே ஹிட்லர் ஆசைப்படுகிறார்" என்று ஜெர்மனியைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார். ஆனால் "அந்த நிபந்தனைகள் சரணாகதி நிபந்தனைகளா யிருக்கின்றனவே" என்று பிரிட்டன் சொல்லுவதாக, அவரே கூறுகிறார். அதாவது, 'முன்னே பார்த்தால் சாயபு குதிரை; பின்னே பார்த்தால் முன்சீப்பு குதிரை' என்ற சாட்சி போல விருக்கிற ருஷிய அந்நிய மந்திரி மாலடாவ் பேச்சு!

# ஸ்ரீ ரவீந்திர நாதர்

(கு. ப. ராஜகோபாலன்)

1915-ஆம் வருஷம் முதல் ஸ்ரீ ரவீந்திரநாத தாகூருடைய பெயர் உலகத்தின் எட்டுத்திக்குகளிலும் எதிரொலிக்கிறது. அதாவது, ஆங்கில வசன காவியங்கள் நிறைந்த கீதாஞ்சலி என்ற புத்தகம் வெளிவந்து நோபல் பரிசு பெற்றது முதல் அவருடைய பெயர் உலகறிந்த பெயர் ஆகிவிட்டது.

ஆனால், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் ஸ்ரீ ரவீந்திரர் யாரென்றே உலகத்திற்குத் தெரியாது; இந்தியாவிற்கே தெரியாது. சொல்லப்போனால், அவரை இப்பொழுது தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடும் வங்காளத்திற்கே அவருடைய மகிமை சரிவரத் தெரியாது.

விசேஷமென்னவென்றால், உலக கவிகளிடையே அவருக்கோர் அழியாத இடமளித்து அவருடைய தனிச் சிறப்பைத் தலைதூக்கி நிற்கச்செய்த எல்லா நூல்களையும் அவர் 1915-ஆம் வருஷத்திற்கு முன்பே எழுதி முடித்துவிட்டார். உலகம் அவருக்குப் புகழ்மாலை சூடிய அப்பருவத்திற்கு முன்பே ஜடைக் கதிர் மண்டிய அவருடைய மனவயலில் அறுவடையாகி முடிந்துவிட்டது; அதற்குப் பிறகெல்லாம் வெறும் போரடிதான் நடைபெற்றது.

காளிதாஸனுக்குப் பிறகும் கம்பனுக்குப் பிறகும் இந்திய இலக்கிய பூமி கண்டே அறியாத ஒரு செழுமை அந்த விளைச்சல். கவியின் ஐம்பத்தைந்தாவது வயது வரையில் அப்பேர்ப்பட்ட வல்லமை உலகத்திற்கு, இந்தியாவக்கே, அறிமுகம் ஆகாமல் மறைந்து கிடந்தது இலக்கிய அதிசயங்களில் ஒன்று என்பதில் என்ன சந்தேகம்?

அந்த மாதிரி, வங்காளி வனாந்தரத்தில் அக்ஞாத வாசமாக இருந்துகொண்டு, கொஞ்சங்கூட மனம் தளராமல், ஊக்கம் குன்றாமல், கற்பனை குலையாமல், ஸ்ரீ ரவீந்திரநாதர் இடைவிடாமல், இலக்கிய சிருஷ்டி செய்து குவித்துக்கொண்டே இருந்தாரென்றால், அவருடைய ஆர்வத்தையும் அசாதாரணமான லயிப்பையும் உண்மை வேட்கையையும் எத்தகையன என்று சொல்வது?

இன்று தாகூரை வானளாவப் புகழ்ந்து குறுகிய மாகாணப் பெருமை கொள்கிறார்களே, அந்த வங்காளிகள் கூட அவரை 1915-ம் வருஷத்துக்கு முன்னால் அவ்வளவாகப் பாராட்டவில்லை. அவருடைய எழுத்துக்கள் நூதனப் போக்குடையவையாயிருக்கின்றன வென்றும் இலக்கணப் பிழைகள் நிறைந்திருக்கின்றன வென்றும் பண்டிதர்கள்



அவரைப் புறக்கணித்தார்கள்; திட்டினார்கள். பாமரர்களோ அவருடைய உயர்ந்த சிருஷ்டிகளை அனுபவிக்கும் திறமையற்றவர்களாக இருந்தார்கள். பங்கிம் சந்திரரையும் சரத் பாபுவையும் ஜனங்கள் அதிகம் படித்துப் பாராட்டினார்களே தவிர, கவி தாகூரைக் கண்ணெடுத்தும் பார்ப்போர் கிடையாது. இன்றும் அவருக்கு அவருடைய வங்காளிப் புஸ்தகங்களிலிருந்து வரும் வருமானம் மிகவும் குறைவு.

இந்த நிராதரவான நிலைமையில் ஸ்ரீ ரவீந்திரர் பணக்காரராக இருந்து விட்டதால்தான் பிழைத்தார். ஜீவனத்திற்கு அவர் நல்லவேளையாக இலக்கியத்தை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. பரம்பரைச் சொத்து ஏராளமாக இருந்ததால், சோற்றுக்கவலையில்லாமல் இந்தப் புலவர், பருவத்திற்கு ஒரு துறையாக வேலையை வகுத்துக் கொண்டு இலக்கியத்தில் ஈடுபட்டார். வசந்த காலத்தில் காவியங்கள், மாரி காலத்தில் நாடகங்கள்—இந்த மாதிரி அவருக்குத் திட்டம் போடக்கூட முடிந்தது!

ரவீந்திரர் தமது பதினைந்தாவது வயதில் எழுத ஆரம்பித்தார். இன்று அவருக்குக் கிட்டத்தட்ட வயது எண்பது ஆகிறது. அறுபத்தைந்து வருஷங்கள் ஓய்ச்சல் ஒழிவின்றி எழுதி வங்காளி பாஷையைக் கரைகடந்தோடுமாறு செய்திருக்கிறார்; ஒவ்வொரு வகையிலும் புத்தகம் புத்தகமாக 'எழுதித் தள்ளி' இருக்கிறார், எழுதியிருக்கிறார் என்றால்! எப்படி? 'எப்பைசாப்பை' யாகவா?

இவ்வளவு விரிவாகவும் உயர்தரமாகவும் சமீபகாலத்தில் இலக்கிய சிருஷ்டி எங்குமே கிடையாது என்று சொல்லி உலகமே பிரமிக்கும் படியாகவும், வங்காளி இலக்கியமே அதற்கு முன்னால் அறியாத முறையிலும்,—அதன் ஒவ்வொரு அம்சத்திலும்—அழகை நிரப்பி இருக்கிறார். காவியம், வசனம் ஆகிய இலக்கியத்தின் இரண்டு பகுதிகளிலும் எவ்வளவு தினிசுகள்! நீண்ட காவியம், சிறு காவியம் பாடல், கீதம், வசன காவியம், நாட்டிய காவியம்,—வசனத்தில், கதை, கட்டுரை, நாடகம், சிறு நாடகம், நவீனம், பிரசங்கம்—இன்னும் என்ன பாக்கி? இந்திய இலக்கிய கர்த்தாக்கள் யாருமே இவ்வளவு வகைகளில், பாஷையைக் கையாண்டதே கிடையாது என்பது நிச்சயம். கையாண்ட எந்த வகையிலும் ரவீந்திரர் பரிபூரண வெற்றி பெறாமல்போனதும் கிடையாது.

இவ்வளவும் 1915-ஆம் வருஷத்துக்கு முன் குடத்தில் வைத்த விளக்குப்போல் இருந்தது. அந்த ஒளி வெளியில் வீசவே இல்லை. திடீரென்று கீதாஞ்சலி வெளிவந்து ஆங்கில ரஸிகர்களின் மனத்தைக் கொள்ளை கொண்டது. கிழக்கே உதயமாகியிருந்த இந்த ரவியின் ஒளிக்கிரணங்களை அவர்கள்தான் முதல் முதலில் கண்டார்கள். உடனே நோபல் பரிசு அளித்தார்கள். அவ்வளவுதான்; ஒரே நாளில் ரவீந்திரர் உலகப் பிரசித்தி பெற்றார்.

ஸ்ரீரவீந்திருடைய புத்தகங்கள் பலப் பல இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டுவிட்டன. ஆனால் தமிழில் ஒரு சில சிறுகதைகளும் இரண்டு மூன்று நவீனங்களுந்தான் வெளிவந்திருக்கின்றன. அவருடைய மேன்மையின் முக்கிய அம்சமாகிய அவருடைய காவியங்களைப் பற்றித் தமிழில் ஒன்றுமே கிடையாது.

இந்தக் குறைக்குத் தமிழர் எப்போது நிவர்த்திபெறப் போகிறார்களோ? நாம் அறியோம்.

# ஒதுங்கி நிற்கும் காந்தி

(தி. ஜ. ர.)

"அணுவிலிருந்து 'மகத்' புறப்பட்டது; மறுபடியும் அது அணுவிலேயே போய் ஒடுங்கி விட்டது. இதில் என்ன அதிசயம்?" என்றார் ஒரு நண்பர். மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகத்தைப் பற்றித்தான் அவர் இந்த அபிப்பிராயத்தைச் சொன்னார். தேச முழுவதும் பரவி முழங்கிய சத்தியாக்கிரகம் இன்று மகான் காந்தியிடம் போய் ஒடுங்கியிருக்கிறது. காலம் மாறிவிட்டது. சமுத்திரத்தில் ஓயாத அலைதான் அடிக்கிறது. மோதியடிக்கும் அலைக்குப் பின் உள்ளே இழுக்கும் அலை யில்லா விட்டால், அலை என்பதே சமுத்திரத்தில் இல்லாமல் போய்விடும். சந்தடி யற்ற ஜலத்தில் அலை ஏது? சத்தியாக்கிரகத்தை அந்தப் பழுத்த கிழவர் மடக்கிச் சுருட்டி வைத்துக் கொண்டு விட்டார். இன்றல்ல; பல வருஷங்களாக.

சேற்றில் நடக்கிறோம்; சகதியில் நடக்கிறோம்; சுடுமணலில் நடக்கிறோம். ஆனால், திசை தவறிவிடக் கூடாது. எதுவரையில் லட்சியத்தை மறக்க வில்லையோ, எதுவரையில் திக்கை நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறோமோ அதுவரையில், நமது பிரயாண முடிவைப் பற்றி நமக்கு அச்சமே யில்லை. லட்சியத்தை நம் கண்ணால் பார்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால், அது நமது மனத்தை விட்டு அகலக் கூடாது. காந்தி தத்துவம் ஜயித்ததா, தோற்றதா என்று வாதிப்பதில் பயனில்லை. காந்தி தத்துவம் மனித ருள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருக்கும் வரையில் அதற்குத் தோல்வியே கிடையாது. மனித பரிணாமம் காந்தி தத்துவத்தையே தன் இலட்சிய சிகரமாய்ச் சுட்டிக் காட்டுகிறது.

உலகத்தில் இன்று எந்த மூலை முடுக்கிலும் பரவியிருக்கிறது கிருஸ்துவின் உபதேசம். அந்த மகானைச் சிலுவையி லறைந்து கொன்றார்கள் யூதர்கள். அவரது சிஷ்யர்கள் சொல்ல முடியாத் துன்பங்களுக்கு ஆளானார்கள். கிருஸ்து அபஜய மடைந்ததாக யாரும் சொல்ல மாட்டார்கள்; சொல்ல வில்லை. மரணத்தில், துன்பத்தில், போராட்டத்தின் அளவில், காலப் பிரமாணத்தில், எண்ணிக்கையில்—இவற்றி லெல்லாம், இல்லை ஜயாபஜயம். போராட்ட காரணத்தின் சக்தியிலும் தர்மத்திலும்தான் ஜயாபஜயம் இருக்கின்றது. போர்க்களத்தில் மடிந்தவனுக்கு வீர சொர்க்கம் என்பது பெரியோர் வாக்கு. தர்மமும் சத்தியமும் எதுவரையில் நமது பக்கம் இருக்கின்றனவோ அது வரையில் நமக்குத்தான் ஜயம் என்பது காந்திக்குத் தெரியும்.

இர்வினின் ராஜ்யபாரம் நடந்து கொண்டிருந்தது. சர்க்கார் சட்டத்தை, காந்தி மீறினார். காந்தியை இர்வினின் ராஜாங்கம் சிறைக்குள் தள்ளிற்று. சிறைக்குள்ளே யிருக்கும் காந்தி, சர்க்காரின் சத்துரு அல்லவா? வைசிராய் என்றால் அந்தச் சர்க்காரின் தலைவர். தன்னால் சிறைக்குள் அடைக்கப்பட்ட சத்துருவை, அப்படி அடைக்கப்பட்டிருக்கும் காலத்தில், வெளியே, அதுவும் இந்தியச் சட்டசபையில், பகிரங்கமாக, வாயார அந்த வைஸிராயே புகழ்ந்தாரென்றால், அதிசயமா யிருக்கும். ஆனால், அப்படித்தான் புகழ்ந்தார் என்பது உலகறிந்த ரகசியம். "காந்தி ஒரு மகான். ஆத்ம சக்தி வாய்ந்தவர். தாம் தர்மமென்று கருதும் ஒரு லட்சியத்துக்காக எவ்வளவு பெரும் தியாகத்தையும் செய்யத் தயாரா யிருப்பவர்''— இதுதான் அந்தப் புகழுரையின் சாரம். சிறையி லிருந்த காந்தியைத் தோல்வி யடைந்த காந்தி யென்று, இதன் பிறகும் யாராவது சொல்ல முடியுமா?

காந்தி சமரசமானார் அதே சர்க்காருடன். லண்டனுக்கும் சென்றார். மரியாதையாகப் பேசினார். ஆனால், ஜீவ சக்தி ததும்பிய, தலை நிமிர்ந்த, கம்பீரமான பேச்சு. வாய்ச்சாலக்குக்காரர்களான மற்ற இந்திய ராஜீயவாதிகளை யெல்லாம் மிரட்டி மடக்கும் பல பிரிட்டிஷ் ராஜீய வாதிகளும் ராஜதந்திரிகளும், திறந்தவாய் மூடாமல், திக்பிரமையுடன் அந்தப் பேச்சைக் கேட்டார்கள். பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்டனால்டு, "என தருமை மகாத்மாஜீ'' என்று அழைத்தார். ஆம்; அந்த வார்த்தைகளை இரண்டுதடவை உபயோகித்தார். "நாம் பிரியாதிருக்க லாகாதா?" என்று மன்றாடினார். பிரியவேண்டி வந்தால், பிரியாமல் என்ன செய்வது? தாம் சத்தியமும் தர்மமும் என்று கருதும் ஒரு காரியத்தை விட, பிற மனிதர் நேசம் ஒரு பெரிதா?

காந்தி இந்தியா வந்து சேர்ந்த சில நாளைக் கெல்லாம் சிறை செல்ல நேர்ந்தது. அபஜயம் என்பதற்கு ஒரு ரூபமிருந்து கிட்ட நெருங்குமானால், "கிட்ட நில்லாதே, போ'' என்று துரத்தி விடும் மனிதனுடைய காரியங்க ளல்லவா இவை? இந்த மனிதருக்கு அபஜயம் ஏது?

பின்னால், ஹரிஜன இயக்கத்தைப் பற்றி நடந்த பாரகாவியம் போன்ற சரித்திரங்களை யெல்லாம் கூறவேண்டாம். பிறகு காந்தி ஒரு அறிக்கை விடுத்தார். தாம் ஒருவரே சத்தியாக்கிரகம் செய்யலாம் என்றும் மற்றவர் நிறுத்திவிட வேண்டும் என்றும் அதில் கட்டளையிட்டு விட்டார். காரணம் என்ன? அதைப் பற்றி நமக்கென்ன? அது காந்திக்குத் தெரியும். சத்தியத்தின் பாதை, தர்மத்தின் வழி, பல்லாயிரம் பேரைப் போராட்டத்தில் இணைத்து இடைவிடாமல் அதை நடத்திக் கொண்டே யிருப்பதில் இல்லை. காந்திக்கு அந்தப் பாதையை விட்டு வழி விலகத் தெரியாது.

இந்த ஒரு மனிதர் செய்யும் காரியங்கள் அனைத்தும் தேசத்தையே அதிரச் செய்கின்றன. ஏனென்றால், நாம் என்னதான் பிரிந்து சிதறி நின்றாலும், தேசமே அவர் மயமாகிவிட்டது. தேசத்திலே அவர் தம்மை இழந்து விட்டார். இதுவரை ஒண்டியாய் நின்று நடத்திய எந்தப் போராட்டத்திலும் அவர் தோற்றதே கிடையாது. எரவாடா மகாதவமும், ராஜ்கோட் உண்ணா விரதமும் அதற்குச் சிறந்த உதாரணங்களாகும். இப்பொழுது அவர் மீண்டும் தன்னந்தனியராய்த் தனித்து நிற்கிறார். காந்தி தனித்து நின்றாலும், அவரது அலுவல்கள் தேசத்தைக் குலுங்கத்தான் செய்விக்கும். தேசமோ அரசாங்கமோ அதை மறந்து காரியம் செய்யலாமா? ஒரு காந்தியின் எழுச்சி, தேசத்தின் கொந்தளிப்பாகும் சில்லரை மனிதர்களை யெல்லாம் நம்பி, அந்தக் கொந்தளிப்பை வரவேற்பதா அறிவுடைமை? தனக்கே நண்பர்களான ஆயிரம் பேரை நம்புவதை விட, உலகத்தின் நண்பரான—கருணா மூர்த்தியான—ஒரு காந்தியை நம்புவதே, இந்த நெருக்கடியி னின்றும் மீளும் மார்க்கம்.

இந்தக் கடைசி நேரத்திலாவது பிரிட்டன் மனந்தெளிய லாகாதா? பிரிட்டனின் ராஜதந்திரம் கடைசி நிமிஷத்திலே வெற்றி பெற்றது என்ற பெருமை பொன்னெழுத்தில் அதன் சரித்திரத்திலே பொறிக்கப் பட வேண்டுமென்றால், அதற்கு இதுதான் தருணம். அதுவும் மெல்ல மெல்ல நழுவிக்கொண் டிருக்கிறதே!

---

# பாரதியின் மந்திரக் கவிகள்

(ரா. நாராயணன்)

**1930**-ஆம் ஆண்டு. உப்பு சத்தியாக்ரஹம் மும்முரமாக நடந்துவருகிறது. தினசரி மாபெருங் கூட்டங்கள். கூட்டங்களில் "தொண்டர்கள் சேரவேண்டும்; சத்தியாக்கிரஹ நிதிக்குப் பணம் தரவேண்டும்" என்று தலைவர்கள் பேசுவார்கள். பேச்சு முடிந்தவுடன் சபையினர் மெல்லக் கலைந்து செல்ல முயலுவர். அச்சமயம் என் நண்பர் ஸ்ரீ பாலு மேடைமேல் வருவார். அவர் பாரதியார் கீதங்களை இனிமையாகவும் உணர்ச்சியுடனும் பாடுவார். ராகமாலிகையில்,

"நிதி மிகுந்தவர் பொற் குவை
தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச் சொ
லருளீர்!
ஆண்மையாள ருழைப் பினை
நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்களெல்லாம்,
வாணி பூசைக் குரியன பேசீர்"

என்கிற பாட்டைப் பாடுவார். அவர் பாடிக் கொண்டிருக்கையில் தொண்டர்கள் உண்டியலை எடுத்துக் கொண்டு செல்வர். பாட்டு முடிவதற்குள் குறைந்தது 50 ரூபாயாவது சேர்ந்துவிடும். 20 தொண்டர்களாவது தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்வர்.

ஸரஸ்வதிதேவியின் வழிபாட்டுக்காகப் பாரதியார் எழுதிய இந்தப் பாட்டு எவ்வளவு உயர்ந்த தேச கைங்கர்ய வளர்ச்சிக்கும் உபயோகப்படுகிறது என்று நினைத்து வியப்படையாதார் இல்லை.

அதே 1930. சத்தியாக்ரஹ இயக்கம் முற்றி அநேகமாக எல்லாரும் சிறை சென்று விட்டோம். திருச்சிச் சிறையில் சுமார் 600 சத்தியாக்ரஹிகள் இருந்தோம். ஆந்திரர், தெலுங்கர், பம்பாய்க்காரர், வங்காளிகள், மலையாளத்தார், கன்னடத்தார் எல்லோரும் ஒரே சிறையில் அடைபட்டுக் கிடந்தோம். சிறைக்குள் புகுந்த புது உற்சாகம் சற்று அடங்கிற்று. மெள்ள ஜாதி வகுப்புப் பூசல்கள் தலைக்காட்டின. மனஸ்தாபங்களும் மாற்சரியங்களும் வளர்ந்தன. இந்த நிலையில் உள்ளே இருந்தவர்களில் பொறுப்புள்ள சிலர், எல்லோரையும் ஒன்று கூட்டினர். அந்தக் கூட்டத்தில் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றிப் பல பிரசங்கங்கள் செய்தனர். ஆனால் பிரசங்கங்கள் பயனளிக்க வில்லை. கூட்டம் முடியும் சமயம். ஏதாவதொரு பாட்டுப் பாடிக் கூட்டத்தை முடிக்கலாம் என்று யோசனை பிறந்தது. ஒரு நண்பர் பாடினார் :

"பகைவனுக்கருள்வாய்—நன்
னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்.
புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே;
பகை நடுவினில் அன்புருவான நம்
பரமன் வாழ்கின்றான்—நன்
னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான்"

என்று ஆரம்பித்து

"தின்ன வரும் புலி தன்னையுமன்
பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்
னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்
னெஞ்சே!
அவளைக் கும்பிடுவாய்"

என்று முடிக்கையில் வித்தியாசங்களுக்குக் காரணமாயிருந்த நண்பர்களின் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. அந்த உணர்ச்சிப் பெருக்கில் மாற்சரியங்கள் மறைந்தன. நண்பர்கள் பரஸ்பர அன்புடன் பிரிந்தனர்.

திருச்சி ஜில்லாவில் கரூர் நகரத்திலே டிராமாக் கொட்டகைக் கலகம். இதே சமயத்தில் கள்ளுக்கடை மறியல் தகராறும் நடந்து பல பிரமுகர்கள் சிறை வாசம் செய்ய நேரிட்டது. அதன் பிறகு போலீஸார் செய்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் நடு நடுங்கிப் போய்விட்டனர். கரூரில் எவ்விதப் பொதுக் கூட்டமும் போட முடியாது. யாராவது துணிந்து கூட்டம் போட்டாலும் ஜனங்கள் அந்தக் கூட்டங்களுக்கு வர அஞ்சினர். இந்த நிலையில் கரூர் மக்களிடமிருந்த பயத்தைப் போக்கவேண்டுமென நாங்கள் முயற்சித்தோம். மதுரை தேசபக்தர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸவரதன் தலைமையில் நடந்துவந்த தேசபக்த சமாஜத்தாரை வரவழைத்தோம். சமாஜகோஷ்டியினருக்குத் தங்க இடம் கிடைக்கவில்லை. அமராவதி நதிக்கரையில் ஒரு தோப்பில் முகாம் போட்டுவிட்டு, பஜனை கோஷ்டியினர் நகருக்குள் சென்றனர். ஸ்ரீ ஸ்ரீனிவாஸவரதன் தலைமையில் ஊர்வலம்.

"ஜயபேரிகை கொட்டடா
கொட்டடா
ஜயபேரிகை கொட்டடா
பயமெனும் பேய்தனை யடித்தோம்;
பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்
தோம்"

என்கிற பாட்டைச் சுற்றுப்புறமுள்ள கட்டிடங்கள் அதிர ஸ்ரீ ஸ்ரீனிவாஸவரதன் பாட, அவர் கோஷ்டியினர் அதே ஸ்தாயியில் அந்த அடியைத் திரும்பப் பாடினர். அதுவரையில் பயந்து வீடுகளுக்குள் இருந்த ஜனங்கள் மெள்ள வெளியே வந்தனர். ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, கடைசியில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் பஜனை கோஷ்டியைப் பின தொடர்ந்தனர். பஜனை கோஷ்டி கடைசியில் ஒரு முஸ்லீம் தெருவை யடைந்த உடனே ஸ்ரீ ஸ்ரீனிவாஸவரதன்

"பல்லாயிரம் பல்லாயிரம் கோடி
கோடி யண்டங்கள்
எல்லாத் திசையினுமோ ரெல்லை
யில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ்
செய் யருள் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொட
ரொணாப் பெருஞ்சோதி
(அல்லா, அல்லா, அல்லா!)"

என்னும் பாட்டைத் தனிமையாகப் பாடினார். அதைக் கேட்கையில் முஸ்லீம் மசூதியில் தொழுகை நடத்துவதுபோ லிருந்தது. இந்தப் பாட்டு சுற்றிலுமுள்ள முஸல்மான் நண்பர்களைப் பரவசப்படுத்திற்று. அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அன்றுமாலை அமராவதி நதிக்கரையில் என்றும் கண்டிராத அவ்வளவு ஜனத்திரள் சேர்ந்திருந்தது. உண்மையிலேயே அன்று பயமெனும் பேய் அடித்துத் துரத்தப்பட்டது.

வேதாரண்யம் உப்பு சத்தியாக்ரஹம் நடக்கும் பொழுது, கோடிக்கரையில் ஜெயபாரதி ஸ்ரீ வெங்கட்ராமன் தலைமையில் ஒரு தொண்டர்படை சேவை செய்தது. தொண்டர்களுக்குத் தங்குமிடம் கொடுத்தால் தண்டனை என்று அச்சமயம் தஞ்சைக் கலெக்டராயிருந்த கார்ன் துரை உத்தரவு. ஆகையால், கோடிக்கரைப் பட்டாளத்துக்குத் தங்குமிடம் கிடைக்க வில்லை. ஒரு மாரியம்மன் கோயிலுக்கு வெளியில் அவர்கள் தங்கினர். இந்தப் படையில் சங்கு சுப்ர

மண்யமும் ஒருவர். ஒருநாள் மாலை நடந்த கூட்டத்தில்

“தேடியுனைச் சரணடைந்தேன்
தேச முத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய்
கேட்டவரம் தருவாய்”

எனும் பாட்டைப் பாடினாராம். அடுத்த நாள் காலை இவர்கள் பாடின இடத்திற்கு மேல் ஒரு பந்தல் ஏறியிருந்தது. பந்தல் மந்திரத்தால் வரவில்லை. பாரதி பாட்டு கேட்டவர்கள் மனத்தில் ஏற்படுத்திய மாறுதல்தான் பந்தலாக வந்தது. இதுவும் ஒரு மந்திரந்தானே!

ரொம்ப நாளாகக் கதர் உடுத்தி வந்த ஒருவர் திடீரென மல்துணி கட்ட ஆரம்பித்தார். இவர் ராஜாஜியுடன் நெருங்கிப் பழகியவர். இவரது புதிய உடையை ராஜாஜி பார்த்தார். ஆனால் அவரிடம் எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. பின்னால் பெயர் குறிப்பிடாமல் அந்த நண்பர் மனதைத் தைக்கும்படியாக ஒரு கட்டுரையில் நெஞ்சு பொறுக்குதில்லையே என்னும் பாரதியார் வாக்கை எடுத்தாண்டு அதன் மூலம் ராஜாஜி தம் மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். இந்தக் கட்டுரையைக் கண்ணுற்ற நண்பர் அன்றே மில் வஸ்திரங்களைத் திரஸ்கரித்து மீண்டும் கதர் உடையணிந்தார்; இன்றும் கதர் விரதத்திலிருந்து சிறிதும் பிறழாமல் இருந்து வருகிறார்.

இம்மாதிரி நாட்டில் பல்வேறு புரட்சிகளைப் பாரதியார் கீதம் செய்திருக்கிறது. ஒவ்வொரு பாட்டையும் அவர் எந்தச் சந்தர்ப்பத்தில் எழுதினார், என்ன நோக்கத்துடன் எழுதினார் என்பதை நாம் நிச்சயமாகக் காணமுடியாது. ஆனால், அவர் எழுதிய பாட்டுக்கள் என்றென்றும் எந்தச் சந்தர்ப்பத்திற்கும் உபயோகப்பட்டு வருவது, அவருடைய தீர்க்கதரிசனத்தையும், அவர் கவிதைகளின் சிரஞ்சீவித்துவத்தையும் காட்டுகிறது. இன்று தமிழ் நாட்டு இலக்கிய வளர்ச்சிக்குப் பாரதியார்தான் விதை ஊன்றினார். இன்று தமிழ் நாட்டில் அரசியல் பிரசாரத்திற்கு அவருடைய பாட்டுகள் ஆகர்ஷணத்தை அளித்து வருகின்றன. சுதந்திர இந்தியாவிலும் அவற்றுக்கு நாம் எதிர்பாராத எத்தனையோ உபயோகங்கள் ஏற்படக்கூடும். பாரதியார் கீதங்கள் இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் மறைந்துவிடக் கூடியவையல்ல. அவை சாகா வரம் பெற்றவை.

---

ஆஸ்திரேலியாவில் மொத்தம் 1200 தியேட்டர்கள். இதில் 800 மட்டமானவை.

* * *

நமது தோலில் 1 சதுர அங்குலத்தில் 3000 துவாரங்கள் இருக்கின்றன.

# நோயும் மருந்தும்

## பாமர வைத்திய மோஹம்

நார்வேயில் சமீபத்தில் ஒரு டாக்டர் மீது ஓர் வழக்கு வந்தது. வைத்தியப் படிப்புப் படித்துப் பட்டம் பெறாமல் அவர் வைத்தியம் செய்வதாக வழக்கு. விசாரணையில், அவர் பட்டம் பெற்ற டாக்டர்தான் என்று ருசுவாயிற்று.

“பட்டம் பெற்றிருந்தும் ஏன் அதை வெளிக்குக் காட்டாமல் நாட்டுப்புற வைத்தியர்களையும் மந்திர வாதிகளையும் போல் தொழில் நடத்துகிறீர்?” என்று கேட்டார் ஜட்ஜி.

“பிரபுவே! நான் 27—வயதிலே பட்டம் பெற்றேன். தொழிலும் ஆரம்பித்தேன். வருமான மில்லை. பிறகு அயல் நாடு சென்று சில காலம் கழித்துத் திரும்பி வந்தேன். பட்டத்தை ஒளித்து வைத்து, பாமர வைத்தியனைப் போல் தொழில் தொடங்கினேன். நல்ல வருமானம் வருகிறது. பிரபுவே! நான் படித்துப் பட்டம் பெற்ற வைத்தியன் என்று வெளிப்படுத்தி என் தொழிலைக் கெடுத்து விடாதீர்கள். என்னைப் பாமர வைத்தியனாகவே பாவித்து உங்கள் சட்டப்படி அபராதம் விதியுங்கள்; அதை நான் செலுத்தி விடுகிறேன்” என்று கெஞ்சினார் அந்த டாக்டர்!

உலகம் பூராவும் பொது ஜனங்களின் பேதைமை ஒரே விதம்தான் என்பதற்கு இது ஓர் உதாரணமல்லவா?

## பல் பிடுங்கச் சங்கீதம்

மிகவும் சுகமாய்ப் பல் பிடுங்குவதற்காக, அமெரிக்க டாக்டர் ஒருவர் ஒரு நூதன நாற்காலியைச் செய்து முடித்திருக்கிறார். நோயாளி இந்த நாற்காலியில் உட்கார்ந்து பல்லைப் பிடுங்கிக் கொள்ளும்போது, மகா இன்பமான ஓர் சங்கீதம் கிளம்புகிறது. அது நோயாளியின் தாடை எலும்புக்குள்ளே பாய்கிறது. இந்த இனிமையான சங்கீதம் பாய்வதால், பல்லின் வலி துளிக்கூடத் தெரியாமல் சுகமாயிருக்கிறதாம். வலியை மாற்றும் அற்புத சக்தி சங்கீதத்துக்கு இருப்பதால், மயக்க மருந்து அவசியமேயில்லாமற் போகிறது!

## நோய் என்ன செய்யும்?

காலை வலிக்கிறது, தலையை வலிக்கிறது என்றாலே, பிரமாதமாகச் சோர்ந்து சோம்பி விழும் மனிதர்களை நாம் எங்கும் காண்கிறோம். ஆனால், மனோவுறுதி படைத்த தீரர்களை நோய் இவ்வாறு மடக்கிப் போடுவதில்லை.

**கை டி மாப்பஸான்ட்** என்ற பிரஞ்சுப் பேராசிரியருக்கு ஆயுள் முழுவதும் தீராத் தலைவலி. அதற்கு நடுவேதான் தமது அற்புதக் கதைகளை அவர் எழுதினார்.

**மார்ட்டின் லூதர்** என்ற கிறிஸ்தவ மகான், பிரசவ வேதனை போன்றதோர் வயிற்று வலியால் துன்புற்றார். கொடிய தலைவலியும் அதனோடு கூடிக்கொண்டது. இரண்டையும் பொருட்படுத்தாமல், இணையற்ற மதசேவை புரிந்தார்.

**சார்லஸ் டார்வின்** என்ற மகா மேதையான இயற்கைத் தத்துவ சாஸ்திரி, ஒரே ஒரு நாள் கூட நோயும் நோவுமின்றி வாழ்ந்ததில்லை யென்று அவருடைய மகன் கூறுகிறார். அப்படியிருந்தும் உயிர்ப் பிராணிகளின் உதயத்தைப் பற்றி அபார ஆராய்ச்சி நூல் ஒன்றை அவர் எழுதினார்.

இன்னும் இம் மாதிரி எத்தனையோ உதாரணங்கள் கூறலாம். ஆனால், சோம்பேறியை மாற்ற எத்தனை உதாரணங்கள் கொடுத்துத்தான் பயன்படுமோ?

## புளியாரையின் குணம்

நமது அருமையான கீரை வகைகளில் **புளியாரை** அல்லது **புளிக்கீரை**யும் ஒன்றாகும். சென்னை சர்க்கார் வெளியிட்டுள்ள **குணபாடம்** என்ற அரிய நூலில், அதனைப் பற்றிச் சொல்லியுள்ள விவரங்கள் கவனிக்கத் தக்கன.

புளியாரைக் கீரையின் சுவை புளிப்பு இக் கீரையால், பித்த மயக்கம், வாதகப விகற்பம், மூலவாயு, கிரகணி, இரத்த மூலம் முதலியன தீரும்.

இலைச்சாற்றைக் குடிக்கப் பல நோய்கள் தீரும். ஊமத்தை விஷம் உடனே நீங்கும். சீதபேதி, மூலந் தள்ளல் முதலியவை சுகப்படும். சாற்றுடன் மிளகுப் பொடியும் வெண்ணெயும் சேர்த்துத் தடவினால், சருமப் புடைகள், தாமரை முள், பாலுண்ணி, மரு முதலியன மறையும். இலையை வெந்நீர் விட்டரைத்துக் கொப்புளம், பருக்களுக்குக் கட்டலாம்.

காய்ச்சலால் உஷ்ண முற்றவர்கள், இலைக் கஷாயத்தைக் குடித்தால், குளிர்ச்சி தரும். கஷாயத்தைக் கண்ணில் விட்டுக் கழுவி வந்தால் கண் நோய்கள் தீரும்.

இலையைச் சிதைத்து, அதிக வேதனையுள்ள கட்டி, வீக்கங்களுக்கு வைத்துக் கட்ட, குளிர்ச்சியையுண்டுபண்ணி வேதனையைக் குறைக்கும்.

சமூலத்தை நீர் விட்டரைத்து, வெங்காயச் சாறு சமனெடை சேர்த்துக் காய்ச்சிப் பித்தத்தினாலுண்டாகும் தீராத் தலைவலிகளுக்குப் போடலாம். புது இலைகளைக் கீரையாகச் சமையல் அல்லது துவையல் செய்து சாப்பிட்டுவர, அரோசகத்தை நீக்கி, குன்மத்தைக் கண்டிக்கும்.

---

பிரபலஸ்தர் வரிசை நம்பர் 2

# ஜனநாயக நண்பர் ரூஸ்வெல்ட்

நடனம் பரவசமாய் நடக்கிறது. மழை ஓய்ந்து ஓய்ந்து பாட்டம் பாட்டமாகப் பெய்வது போல, சங்கீதம் நின்று நின்று மீண்டும் பொழிகிறது. ஒவ்வொரு தடவைக்கும் புதிது புதிதாய், ஜோடி சேர்ந்துகொண்டு ஆணும் பெண்ணும் ஆடிக் களிக்கிறார்கள். ஒரே ஒரு பெண் மட்டில் தயங்கி நிற்கிறாள். திரும்பத் திரும்ப அவளுக்கு ஒரே கூட்டாளிதான் கிடைக்கிறான். வேறு யாரும் அவளை அழைக்க வில்லை. நடனத்திலும் காதலிலும் புருஷன்தான் பெண்ணைக் கூட்டாளியாய்ச் சேர அழைக்க வேண்டும். இது மேனாட்டார் மரியாதை.

அந்தப் பெண்ணை, ஒரே ஒரு இளைஞனைத் தவிர, வேறு யாரும் லட்சியம் செய்யவில்லையே, ஏன்? அவள் முகத்திலே லட்சணம் கிடையாது; அநாதையுமாவாள்; உடுத்திருப்பதோ மட்டமான ஆடை. இப்படிப்பட்ட ஒரு பெண்ணுடன் கூட்டாளியாய் நடனமாட எந்த வாலிபனுக்குத்தான் ஆசை வரும்? மகா அழகனான பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மட்டிலுமே, அவளுக்கு மறுபடியும் மறுபடியும் ஜோடி சேர்ந்தான். காரணம் பிரேமை யல்ல; கருணையே யாகும். அந்த பிராங்கிளின் ரூஸ்வெல்ட் தான் இன்று அமெரிக்காவின் இணையற்ற குடியரசுத் தலைவராய் விளங்குபவர். அந்த எலீனர் தான் இன்று அவரது மனைவியா யிருந்துகொண்டு, அவருக்குப் பரிபூர்ண ஒத்தாசை புரிந்து வருபவள். இந்த நாட்டிய சம்பவத்தை, ஸ்ரீமதி எலீனர் ரூஸ்வெல்டே இன்றும் அடிக்கடி கூறுகிறாள்.

1882-ஆம்௵ ஜனவரி௴ ஹட்ஸன் நதிக்கரையில், ஓர் மிராசுதாரின் மகனாக ரூஸ்வெல்ட் பிறந்தார். போயர் யுத்தம் நடக்கையில், ஹார்வர்டு சர்வகலாசாலையில், ரூஸ்வெல்ட் படித்துக்கொண்டிருந்தார். மற்றப் பையன்களெல்லாம் ஆங்கிலேயர் கட்சியே நியாயம் என்று வாதித்தார்கள். ரூஸ்வெல்டோ போயர்களிடமும் அனுதாபம் காட்டினார். அவருக்கு அப்போதே அவ்வளவு நீதி உணர்ச்சி உண்டு.

கப்பலோட்டும் மாலுமி யாகவேண்டுமென்பதே ரூஸ்வெல்டின் ஆசை. ஆனால், தந்தையின் விருப்பத்தைத் தட்ட முடியாமல், மனமுவந்து, சட்டப்படிப்பி லீடுபட்டார். 1907-ஆம் ௵ பாரிஸ்டர் சன்னதும் பெற்றார். அப்போதெல்லாம் அவருக்கு அரசியலிலே ஆசை கிடையாது. ஆனால், 1910-ஆம் வருஷம் நடந்த செனேட் தேர்தலில், நண்பர்களின் தூண்டுதலின் பேரில் போட்டியிட்டு ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



கொஞ்ச காலத்துக் கெல்லாம் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக, வுட்ரோ வில்ஸன் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே அவர், ரூஸ்வெல்டுக்கு ஓர் அழைப்பு விடுத்தார். தமது தேர்தல் பிரசாரத்தில் பெரிதும் உழைத்த ரூஸ்வெல்டை, ஓர் உதவி மந்திரியாய் நியமித்துக்கொள்ள வேண்டுமென்று வில்ஸனுக்கு ஆசை. ரூஸ்வெல்ட் முதலில் மிகவும் தயங்கினார். ஆனால், தம்மை வில்ஸன் கப்பற்படை உதவி மந்திரியாய் நியமித்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறா ரென்று அறிந்தவுடனே, அப்பதவியை ஏற்க, ரூஸ்வெல்ட் மிகச் சந்தோஷத்துடன் சம்மதித்தார். எப்போதுமே அவருக்குக் கடலிலே மிகுந்த மோகம்.

சென்ற மகாயுத்தத்தின் போதெல்லாம் அமெரிக்கக் கடற்படை உதவி மந்திரி ரூஸ்வெல்ட் தான். அப்போது ஓர் தமாஷ் நடந்தது. 1918-ஆம்௵ ஜூலை௴ ரூஸ்வெல்டுக்கு ஓர் ரகஸ்ய உத்திரவு பிறந்தது. ஓர் டெஸ்டிராயர்க் கப்பலில் பிரயாணம் செய்து, மத்தியதரைக் கடலிலும் ஸ்காட்லாந்துக் கரையிலும் உள்ள 50 கடற்படைத் தளங்களைப் பார்த்து வருமாறு அவருக்கு உத்திரவு. அதன்படி அவர் சுற்றுப் பிரயாணம் செய்கையில் ஒரு சமயம் காலஞ் சென்ற ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியை ரூஸ்வெல்ட் சந்திக்க நேர்ந்தது. இந்தச் சந்திப்பிலே நடந்த சம்பாஷணையைப் பற்றி ஒரு முறை ரூஸ்வெல்ட் இவ்வாறு வர்ணித்தார்: "ராஜாவுக்கு என்னிடம் ரொம்ப விஷயங்கள் பேசவேண்டி யிருந்தது. ஆதலால், பாதிநேரம் இருவருமே ஏககாலத்தில் பேசிக்கொண் டிருந்தோம்! முக்கால்மணி நேரம் பேட்டி நடந்து, நான் விடைபெற்றுத் திரும்பியபோது, என் தோழர்களும் அறையி லிருந்த மற்றோர் கனவானும், என்ன நடந்த தென்றே புரியாமல், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு திகைத்து நின்றார்கள்." விஷயம் எப்படி?

யுத்த சமாதானத்துக்குப் பிறகு மீண்டும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஸ்தானத்துக்கு ஓர் தேர்தல் நடைபெற்றது. ஜனநாயகக் கட்சியின் சார்பாகத் தலைவர் பதவிக்கு, காக்ஸ் என்பவரும் உபதலைவர் ஸ்தானத்துக்கு ரூஸ்வெல்டும் அபேட்சகர்களாக நியமிக்கப்பட்டார்கள். இச்சமயம் வுட்ரோ வில்ஸன், 'ஐயோ! அமெரிக்கருக்கு உன்னத லட்சியம் இல்லையே!' என்ற மனச்சோர்வாலும் முதுமையாலும் உடல்நலங் குன்றி வந்தார். ஓர் சர்வதேசச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்ற அவரது மனோரதம் பூர்த்தியாகாததே அவர் மனச்சோர்வுக்குக் காரணம் காக்ஸும் ரூஸ்வெல்டும் கிழவர் வில்ஸனிடம் சென்றார்கள். "சர்வதேசச் சங்கம் ஸ்தாபிக்கவேண்டும் என்பதற்காக நீங்கள் எவ்வளவோ தீரமாய்ப் போராடினீர்கள். அதைக் கண்டு நான் மிகவும் பூரித்துப் பிரமிக்கின்றேன்"

(ஸரஸி)

என்று வில்ஸனிடம் காக்ஸ் பேச்சை ஆரம்பித்தார். வில்ஸன் மிகுந்த ஆவலோடு, "மிஸ்டர் காக்ஸ்! இன்னும் கெட்டுப் போகவில்லை; அந்தப் போராட்டத்தை மேலும் நாம் தொடர்ந்து நடத்தினோமானால் வெற்றி கிடைத்தே தீரும்" என்றார். வில்ஸனின் இந்த மனவுறுதியைக் கண்டு காக்ஸுக்குக் கண்ணீர் வந்து விட்டது. ரூஸ்வெல்டும் மனமுருகி விட்டார்.

சர்வதேசச் சங்கம் அமைப்பதைத் தேர்தல் பிரச்னையாக வைத்துக் கொண்டால் தோல்வி மிக நிச்சயமாகும். ஆயினும் கிழவனாரின் மனதை நோகச் செய்ய விரும்பாமல், அதையே பிரச்னையாக வைத்துக்கொண்டு, காக்ஸும் ரூஸ்வெல்டும் தேர்தல் போரை நடத்தினார்கள். தோற்றும் போனார்கள். இதைப் போன்றதோர் உன்னதமான தேர்தல் போராட்டத்தை வேறெங்கும் காண முடியாது.

தேர்தலிலே தோற்றபின், அரசியலை விட்டே விலகி, ரூஸ்வெல்ட் ஒதுங்கி வாழலானார். அக்காலத்தில் அவருக்கோர் பயங்கரமான வியாதி தோன்றியது. இடுப்பிலிருந்து கால் வரையில் கொடிய பாரிச நோய் பிடித்தது. நடக்கவும் முடியவில்லை. நோயின் வேதனை தாங்கமுடியாததாயிருந்தும், துளி மனக் கசப்போ, அதைர்யமோ ரூஸ்வெல்டிடம் காணப்படவேண்டுமே; கிடையாது. நோயை வெல்ல, அவர் மகா தீரமாய் அதனுடன் போராடினார். "ஒரு குழந்தையின் வியாதியை, ஒரு வளர்ந்த மனிதன் ஜயிக்க முடியாதாவது! என்ன அபத்தம்!" என்று அவர் அப்போது ஒரு சமயம் சொன்ன வார்த்தைகள் மிகப் பிரசித்தமாகும்.

நோய் குணமேயாகாது என்று ரூஸ்வெல்டின் தாய் நினைத்துவிட்டாள். ஆதலால், ஹட்ஸன் நதிக்கரையிலுள்ள தங்கள் சொந்த வீட்டுக்குச் சென்று, அமைதியாய் வசிக்கலாம் என்று அவள் வற்புறுத்தினாள். மனைவி எலினரோ தன் கணவனின் நோயைக் குணப்படுத்தாமல் விடுவதில்லை என்று உறுதியாயிருந்தாள். நியூயார்க் நகரிலேதான் வசிக்க வேண்டுமென்று அவள் கருதினாள் இதனால், மாமிக்கும் மருமகளுக்கும் சற்று மனத்தாங்கல்கூட உண்டாயிற்று. பொதுஜன சேவையிலே ரூஸ்வெல்டுக்குப் பரம ஆர்வமாதலால், ஏதாவது பொது இயக்கங்களில் அவரைச் சம்பந்தப் படுத்தினால்தான் அவர் ரோகம் தீரும் என்று, லூயி மிக்ஹென்றி ஹௌ என்ற ஒரு ஆப்த நண்பர் யோசனை சொன்னார். அதன்மேல், பெண் தொழிலாளிகள் சங்கத்தில் எலினர் கலந்து கொண்டாள். மனைவியின் அந்தச் சேவையிலும் மற்றும் சில இயக்கங்களிலும் வீட்டி விருந்த படியே ரூஸ்வெல்டுக்குத் தொடர்பு ஏற்பட்டது. இந்த உற்சாகத்தினாலும் மனைவி, நண்பர்களின் மட்டற்ற பணிவிடை, சிகிச்சைகளாலும் ரூஸ்வெல்டின் நோய் சிலவருஷங்களுக்குள்ளே அடியோடு குணமாயிற்று. மீண்டும் அரசியல் வாழ்விலே அவர் தீவிரமாய்க் குதித்துவிட்டார். 1929-ஆம் ஷூல புதுவருஷப் பிறப்பன்று நியூயார்க் மாகாண கவர்னராகி, நான்கு வருஷங்கள் அதை நிர்வகித்தார்.

1933-ஆம் வருஷ ஆரம்பத்திலே, அமெரிக்காவின் பொருளாதார நிலை கலகலத்தது; பாங்கிகளெல்லாம் உளுத்துக் கிடந்தன. ஐரோப்பாவிலே அரசியல் நெருக்கடி. ஜெர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி உதயமாயிற்று. ஜனநாயக முறைக்கே ஆபத்துப் போன்ற அபாயநிலை ஏற்பட்டது. இப்பேர்ப்பட்ட சமயத்தில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்தல் வந்தது. ஜனநாயகத்தில் ஆழ்ந்த பற்றுதல்கொண்ட ரூஸ்வெல்ட் போட்டியிட்டார். ஜயமும் பெற்றார்.

வெற்றி பெற்றவுடனே, அமெரிக்க மக்களுக்கு, தமது திட்டத்தை விளக்கி ஓர் செய்தி விடுக்க வேண்டாமா? அதற்காக ஒரு பிரசங்கம் தயாரித்தார். அந்தப் பிரசங்கம் பாமர மக்களுக் கெல்லாம் புரிய வேண்டு மென்று அவர் கவலை. புரியுமா, புரியாதா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? ஒரு யுக்தி செய்தார். அச்சமயம் தங்கள் வீட்டுக்கு வர்ணம் பூசிக் கொண்டிருந்த ஒரு கொத்தனை உள்ளே அழைத்தார். தமது படிப்பறை நாற்காலியொன்றில் அவனை உட்கார்த்தினார். தமது பிரசங்கத்தை அவனுக்குப் படித்துக் காண்பித்தார். அவன் சிரத்தையோடு தலையை ஆட்டிய இடமெல்லாம் அவனுக்குப் புரிந்து விட்டது; எல்லாருக்கும் புரியும். அவன் சந்தேகத்தோடு தயங்கிய இடங்கள்தான் சாமான்ய மக்களுக்குப் புரியாது. இவ்வாறு நிச்சயித்து, அந்தச் சந்தேகமான இடங்களை யெல்லாம் திருத்தி, இன்னும் சுலபமாய் எழுதினார்.

அவர் பிரசங்கத்தைக் கேட்டதும் முதலாளிகளுக்கும் ஜனங்களுக்கும் நம்பிக்கை பிறந்தது; மூடிக்கிடந்த பாங்கிகளும் உடனே திறந்தன. ஆனால், தேசத்தைப் புனருத்தாரணம் செய்வது அப்படிச் சுலபமாயில்லை. பல கடுமையான நடவடிக்கைகளை அவர் கைக்கொள்ள வேண்டியிருந்தது. பாங்கிகள் மீது சர்க்கார் ஆதிக்கம் ஏற்படுத்தி, அவற்றைச் சீர்திருத்தினார். சில முக்கிய விவசாயப் பொருள்களின் விலைகளைச் சட்டத்தின்மூலம் உயர்த்தி, விவசாயிகளுக்குக் கஷ்ட நிவாரணம் செய்தார். பெருந்தொழில்களை யெல்லாம் கட்டுப்பாடு செய்து சீர்திருத்தினார். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக, ரஸ்தாக்கள், அணைகள், பாலங்கள், கப்பல்கள் முதலிய மற்றும் பல வசதிகளைக் கட்ட, பிரம்மாண்டமான திட்டங்கள் போட்டார். குற்றங்கள் குறைவதற்காக, சமூகச் சீர்திருத்தமான சில புதிய சட்டங்களையும் வகுத்தார். டாலர் மதிப்பைக் குறைத்ததால், சர்க்காரிடம் இருந்த தங்க இருப்பின் மதிப்பு உயர்ந்தது. அந்த லாபத்தைக் கொண்டு, பிறநாட்டுப் பரிவர்த்தனை விகிதங்களை நிலைப்பாயிருக்கும்படி செய்தார். இரண்டாந் தடவைத் தலைவர் தேர்தலிலும் அவரே வென்றார்.

ஆயுதப் பரிகரணம், உலக சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றிலேதான் அவருக்குப் பூர்ண ஆர்வம். ஐரோப்பிய யுத்தம் தொடங்கு முன்னே, ஐரோப்பிய நாடுகளின் தகராறுகளைச் சமாதானமாய்த் தீர்த்துவைக்க அவர் பெரிதும் விரும்பினார். அது பலிக்கவில்லை. யுத்தம் மூண்டது. தமது அனுதாபமெல்லாம் ஜனநாயக நாடுகளிடந்தான் என்று அவர் ஸ்பஷ்டமாய்த் தெரிவித்து விட்டார். அமெரிக்கக் குடியரசுத் தலைவராக, மூன்றுமுறை யாருமே பதவி வகித்ததில்லை. அந்தச் சம்பிரதாயத்தையும் மீறி, அவர் மூன்றாம் முறையாக, தமது கட்சியின் ஏகோபித்த ஆதரவின் பேரில், அப்பதவிக்கு அபேட்சகராய் நிற்கச் சம்மதித்துள்ளார். அவர் வென்றால், பிரிட்டனுக்குப் போதாவாகும் என்பது நிச்சயம்; பொருள் உதவி மாத்திர மல்ல, போரிலேகூட அமெரிக்கா கலந்து, பிரிட்டனுக்குத் துணைபுரியும் என்றே தோன்றுகிறது.

---

உலகத்திலேயே மிகப் பெரியமணி ஒன்று மாஸ்கோவில் இருக்கிறது. அது 180 டன் எடை உள்ளது. 'சார்கோலோகோல்' என்று அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால் இது வரையில் அது அடிக்கப்படவேயில்லை. எனினும் உபயோகத்தில் இருந்துவரும் உலகிலேயே பெரிய மற்றோர் மணியும் மாஸ்கோவில்தான் இருக்கிறது. இதன் எடை 128 டன்கள்.

* * *

முதன் முதலில் இந்தியாவில் ரயில் பாதை போட்டு 90 வருஷம் ஆகிறது. பம்பாய்க்கும் கல்யாண் நகருக்கும் இடையே 34 மைல் தூரம் அப்போது போட்டார்கள். 50,000 மைல் நீளம் ரயில்பாதை இந்தியாவில் இன்று இருக்கிறது.

---

# வேம்பண்ணா பட்டணம் பார்க்கிறார்

(கோத்தமங்கலம் சுப்பு)

"மனுஷன் பண்ணப்போகிற பாவத்துக்குக் கொளங் குட்டைகள் போராதுங்கறதை உத்தேசித்துத்தானே அகண்டமா சமுத்திரம்னு ஒண்ணைப் படச்சிருக்கான். வாடா வா" என்றார் வேம்பண்ணா.

வேம்பண்ணா இன்னும் ஊருக்குப் போகவில்லை. என் திருப்திக்காக அவர் இங்கிருக்க வில்லை. நாலு நாளைக்கு முன்பு லேசாக "அண்ணா, சனிக்கிழமையன்னிக்கு அமாவாசை வராப்பிலேயிருக்கே?" என்று ஞாபகப்படுத்தினேன்.

"நல்லவேளை! பட்டணத்துக்கு வந்ததுக்கு ஒண்ணு மில்லேன்னு போகாமே அலவாக்கரை முழுக்காவது கிடைக்கட்டும்" என்ற பதில் வந்தது.

என் அபிப்ராயத்துக்குப் பதிலில்லாமல் வார்த்தைக்குப் பதில் கிடைக்கவே சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டியவன் ஆனேன்.

ஆறு குழந்தைகளுக்குப் பிறகு ஏழாவதாகப் பிறந்தவர் வேம்பு. குப்பையிலே போட்டெடுத்து, 'மூக்குக்குத்தி, வேப்பங்காய்' என்று சொல்லி வேம்பு என்று பெயரிடப்பட்டவர். செல்லக்குழந்தையாம். பிடிவாதத்தில் சிறந்தவர். அவர் வார்த்தையைத் தட்டமுடியுமா? சமுத்திரக் கரைக்குக் கிளம்பினோம்.

**வேம்:** இதென்ன கட்டடம்? பெரிய அரிசி ஆலைமாதிரி யிருக்கே!

**நான்:** சினிமாக் கொட்டகை.

**வேம்:** உனக்கு இங்கேதான் வேட்டியோ?

**நான்:** இல்லேண்ணா, நாங்க நடிக்கற படங்களையெல்லாம் இங்கேதான் போட்டுக் காட்டுவா. இந்த மாதிரி இங்கே ஏராளமான கொட்டகைகள் இருக்கு.

**வேம்:** நம்மூரிலே புள்ளையார் கோவில் இல்லியா அந்த மாதிரித்தான். சரி, நட.

மணிக்கூண்டுக்கு அருகில் சென்றோம்.

"இதென்னடா கடியாரத்தைத் தூக்கி வச்சுக் கட்டியிருக்கான்?" என்றார் வேம்பண்ணா.

**நான்:** தொழிலாளர் நிறைஞ்ச ஊரோல்லியோ? மணி சரியாத் தெரியறதுக்காகக் கடியாரத்தைக் கட்டியிருக்கா.

**வேம்:** அட ராமச்சந்திரா, அண்ணாந்துப் பார்க்கறபோது ஆகாசத்தைப் பார்த்துபிடப் படாதோ? அங்கேயும் கடிகாரத்தைத்தானா பாக்கணும்! கண்ணைப் கெடுத்துப்பிட்டு மூக்குக் கண்ணாடி தானம் பண்ணின மாதிரி, வான சாஸ்திரத்தைத் தொலைச்சுப்பிட்டு, கடியாரத்தைக் கட்டி வச்சிருக்காக்கும். எண்டாப்பா, இங்கே உயிர்க் காலேஜி இருக்காமே, எங்கே?

**நான்:** இங்கெதான் இருக்கு; வருகிறீர்களா, பார்ப்போம்?

**வேம்:** அதொண்ணுதான் கொறச்சல். அங்கே போய்க் கோவேறு கழுதையைப் பார்த்துண்டே யிருப்பம். அமாவாசை கோவிந்தாவாப் போயிடும். இதென்னடா கடையுங் கடைத்தெருவுமா, இருக்கே?

**நான்:** இதுதான் மாமா, மூர்மார்க்கெட்டு. பட்டணத்துக்கு வந்துட்டு இதைப் பார்க்காமெ போனா பிரயோஜனமே யில்லை.

**வேம்:** சண்டிகேசுவரன் சன்னிதானமோ? கடைசியாப் பார்த்துக்குவோம், வா.

நான் நடந்து பார்த்தேன். கால் கடுக்க ஆரம்பித்தது. மேலெல்லாம் வியர்த்துவிட்டது. "ட்ராமிலே போய் விடுவோமா?" என்று கேட்டேன்.

தலையிலே உத்தரீயத்தை வரிந்து கட்டினார். நான் சிரித்தேன்.

"என்னடா சிரிக்கிறே? ட்ராம்காரன் நின்னு நின்னு போவான். நான் நிற்காமே நடந்து வரேன். இருந்தவன் வந்திருக்குறதுக்குள் நடந்தவன் நாக்காதம் என்கறது கேட்டதில்லியோ?" என்று கேட்டார் வேம்பண்ணா.

'பூம்' என்றது மோட்டார் ஹாரன். 'க்ரீச்!' என்றது பிரேக். அனாயாஸமாய் வேம்பண்ணா முன்னால் நாலு அடி நகர்ந்தார். கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்து நடை பாதையில் ஏற்றினேன்.

**நான்:** ரோட்டிலே நடக்கப்படாது, மாமா?

**வேம்:** ஏண்டா நடக்கப்படாது? முப்பத்திரண்டா நம்பர் வேம்பய்யன் பட்டாவிலே எடுத்துப் பாரு, ரோட்டு வரின்னு ஒண்ணு இருக்கும்.

**நான்:** நடக்க உரிமை யில்லேன்னு சொல்லவில்லை. நடந்தால் அசௌகரியம்—மனிதர்கள் நடப்பதற்காகத் தனிப் பாதை ஒதுக்கி யிருக்கும்போது நடு ரோட்டில் போவானேன்?

**வேம்:** ஏண்டா, நாமென்ன ராஜாவா, பாதையெல்லாம் நடை பாவாடை விரிச்சிருக்க? கஷ்டம்! பிச்சைக்காரன் சங்கலையும் குஷ்டரோகி படுத்துண்டிருந்த இடத்திலேயும் நடக்கணுமாக்கும்?

**நான்:** அதுக்குத்தான் ஒரு ஜோடி செருப்பு வாங்கிப் போட்டுக்குங்கோ என்கிறேன்.

**வேம்:** அது தான் குறைச்சல்! சீமாராகவனுத்துத் திண்ணை மாதிரி தார்க்கீலைக் கொட்டி மொழுகி யிருக்கான். ரோட்டிலே மிதிச்சால் காலைக் கறப்பாக்கிடுறது; கண் நெருப்பாகி விடுறது. ஏற்கனவே உஷ்ணம். இதிலே செருப்பையும் போட்டுக்கிண்டுட்டாக் கேட்கவேண்டாம். எங்கேயாவது பாதக் குறடு அம்பிடுமானச் சொல்லு.

**நான்:** போகிற போக்கில் வாங்குவோம்.

**வேம்:** வாணாண்டா, தார் உருகித் தளதளன்னு நிக்கறபோது கட்டையைப் புடிச்சுண்டிடும்.

வேம்பண்ணாவுக்கு வயது முதிர முதிர அவருடைய கருமித்தனமும் முதிர்வதைக் கண்டேன். நின்றார் வேம்பண்ணா.

**வேம்:** ஏண்டா, இந்த ஊரிலே மனுஷா அதிகமோ, மோட்டார் அதிகமோ?

**நான்:** ஏன் இந்தச் சந்தேகம்?

**வேம்:** இல்லே, ஒரு ரயில் போறத்துக்காகப் பணத்தெச் செலவு பண்ணிப் பாலத்தையும் கட்டி, 'தண்டவாளத்தின் மேல் நடக்காதீர்கள்; பாலத்தின் மேல் ஏறிப் போகவும்' என்று எழுதி யிருக்கானே? இங்கே நிமிஷத்துக்கு ஆயிரம் மோட்டார் போறது; பாலத்தையும் காணும் ஒண்ணையும் காணுமே?

**நான்:** ஒரு இடமா இரண்டு இடமா? ஊர் முழுக்க எவ்வளவு பாலம் கட்டறது?

**வேம் :** வாஸ்தவம். பாலம் வேண்டாம். மோட்டாரும் வண்டியும் போறதுக்கின்னு ஜாடை காட்டுகிற போலீஸ்காரன், அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு தரமாவது மனுஷன் தான் போகணும்னு ஜாடை காட்டப்படாதோ?

**நான் :** நல்ல யோஜனை தான். நீங்க சொன்னதாச் சொல்றேன்.

**வேம் :** என்னை ஏண்டா இந்த வம்புக்கு இழுக்கறே? நான் இன்னிக்கி வந்துட்டு நாளைக்குப் போறவன். நீங்க தான் தலையைச் சிறைச்சுண்டு பட்டண வாசம்னு இருக்கீளே? (இந்த இடத்தில் அவர் குறிப்பிட்டது என் சம்மர் கிராப்பை.)

அரைமணி நேரம் காத்துக்கொண்டிருந்து வால் டாக்ஸ் ரோட்டைச் தாண்டினோம்.

**வேம் :** ஏண்டா? டிவிஷனுக்கு டிவிஷன் ரெண்டு மூணு காய்கறி மார்க்கெட் இருக்குன்னு சொன்னியே; அதிலேயே ஒரு ஒதுப்புறத்திலே வைக்காமே எதுக்காகத் தனியா ஒரு மோர் மார்க்கெட்டை வைக்கணும்?

**நான் :** ஐயையோ, மாமா! மோர் மார்க்கெட்டில்லே; மூர் மார்க்கெட். மோருள்பட ஸகல விதமான ஸாமானும் அங்கே வாங்கலாம். ஆர்த்தர்மூர் என்று ஒரு துரை. அவர் போலே கட்டின மார்க்கெட் அது.

**வேம் :** எனக்கென்னடா தெரியும்? அம்பட்டன் வாராவதி, வண்ணாரப் பேட்டை, கண்ணாடிக் கடைவீதி, கெடங்குத் தெருவு என்கற மாதிரி மோர் பாலையும் தனித் தனியாப் பிரிச்சிருப்பாளுக்கு மின்னு நினைச்சேன். கட்டடம் நன்னாருக்கு; ஒதுங்கியும் இருக்கு. பேர் விளங்குறது. வா வா.

கடற்கரையருகே யுத்த ஞாபகச் சின்னத்தைக் காட்டினேன். பழைய யுத்தத்தைப் பற்றியும் அதில் இறந்த வீரத் தியாகிகளின் ஞாபகார்த்தம் இது என்றும் கூறினேன். வேம்பண்ணா என் வார்த்தைக்கு 'உம்' போடாமலே நின்றார். நெருங்கினார். ஒவ்வொருவர் பெயரையும் எழுத்து எழுத்தாக மனதுக்குள் படித்தார். அவ்வளவு இடத்தையுங் கூர்ந்து கவனித்தார்.

"மாமா, வாங்கோ போவோம்" என்றேன்.

பதிலில்லை. மறுபடியும் கூப்பிட்டேன். மூன்றாந்தடவை கூப்பிட்டேன். பெருமூச்சு விட்டார். அவர் முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது. நெஞ்சு படபடத்தது. உடல் பதறியது. அப்படியே சோர்ந்து உட்கார்ந்தார்.

"ஏன், மாமா, உடம்பு என்ன?" என்றேன்.

"ஒண்ணு மில்லேப்பா. நெஞ்சு எரியறது" என்றார். மேலும், "ஏண்டா, ஜெர்மனியிலே இந்த மாதிரி ஞாபகார்த்தக் கட்டடம் கட்டற வழக்கமில்லையோ?" என்றார்.

"எனக்குத் தெரியாது" என்றேன் நான்.

"அய்யோ! இப்படியெல்லாம் கட்டியிருந்தான்னா, மறுபடியும் சண்டையைக் கிளப்ப அவன்களுக்கு மனசு வந்திருக்காதுடா? ராக்ஷசப் பயல்கள்!" என்று சொல்லி நடந்தார். நானும் தொடர்ந்தேன்.

பீச் ரோட்டில் ஒவ்வொரு இடமாகக் காட்டிக்கொண்டே வந்தேன். இரும்பு வாராவதியை அடைந்தோம். சமுத்திரத்தில் கால்வாயைக் காட்டி "பெரிய மனுஷாளுக்கு உதாரணம் இது. ஸமுத்திரம் ஒரு தடவை நிமிர்ந்து கொடுத்தால் இந்தப் பாலமும் ஆற்றிலே போகும்; பட்டணத்துக்கே பிரளயம் வந்துடும். எவ்வளவு சாந்தமா யிருக்குப் பாத்தியா? அதனாலேதான் ஸமுத்திர ராஜான்னு சொல்றது" என்றார் மாமா.

திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி பீச்சுக்கு ஸமீபம்.

**வேம் :** ஏண்டா? என்னமோ திலகர் கட்டம், ரேடியோ கட்டம், காந்தி கட்டம், ஆர்ய ஸமாஜ கட்டம், வெள்ளக்காரங் குளிக்கிற கட்டம் என்று எல்லாம் காட்டினையே? ஸ்நான கட்டம் எங்கே யிருக்கு?

**நான் :** அப்படி ஒண்ணு தனியா இல்லேப் போலிருக்கு.

**வேம் :** ஆனா, நீ எதிலே ஸ்நானம் பண்ணறது?

**நான் :** நானா?

**வேம் :** ஏன்?

"இதிலே சுறுமீன் இருக்குன்னு சொன்னா. யாரோ ஒரு வெள்ளக்காரனைக்கூட இழுத்துண்டு போயிடுத்தாம். பத்திரிகையிலே வந்தது. அது முதல் நான் ஸமுத்திரத்திலே இறங்கறதில்லே" என்று புளுகினேன்.

**வேம் :** அட மண்டு! அவன் அதைத் தின்கிறான்; அது அவனைத் தின்கிறது. உன்னையும் என்னையும் அது ஏண்டா இழுக்கிறது? வா. அடிக்கொரு பாம்பும், நுனிக்கொரு பிசாசமும் இருக்கிற லோகத்திலே இருந்துண்டு இதுக்குப் பயப்படுவாளோ? வாடா, இறங்கு.

"நீங்கள் ஸ்நானம் பண்ணுங்கோ" என்றேன்.

அவர் இதைக் காதில் வாங்காமலே ஸங்கல்பத்துக்கு ஆரம்பித்து விட்டார்.

---

## ஓடும் ரயிலில் சினிமா

லண்டனில் செய்திப் படங்கள் காண்பிப்பதற்கென்றே ஏராளமான தியேட்டர்கள் இருக்கின்றன. செய்திப் படம், சிறு படங்கள், கல்வி சம்பந்தமான படங்கள் முதலியவற்றை ஒரு மணிநேரம காண்பிப்பார்கள். லண்டனிலிருந்து கிளாஸ்கோ செல்லும் இரவு ரயில் வண்டிகளில் இச் செய்திப் படங்களைக் காண்பிக்கிறார்கள். நல்ல படம் பார்ப்பதில் அந்த ஜனங்களுக்கு அவ்வளவு ஆத்திரம் போலிருக்கிறது! இப்படி ரயிலில் படம் பார்ப்பதற்குக் கட்டணம் ஒரு ஷில்லிங்.

வெளிநாடுகளில் ஓடும் ரயிலில் கூட ஜனங்கள் செய்திப் படங்கள் பார்க்கிறார்கள். நம் நாட்டிலோ செய்திப் படங்களே கிடையாது. ஆனால் 20 ஆயிரம் அடி தமிழ்ப் படங்களையும் கீழ்த்தரமான ஹாஸ்யங்களையும் நாம் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம்! நமது பொறுமை பெரிதா, அந்த ஜனங்களின் ஆத்திரம் பெரிதா?

*சிறு கதை :*

# ரகஸ்ய ஆயுதம்

(உல்லாஸி)

ஏதோ ஒரு தேசம். அதன் பெயரைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அந்தத் தேசத்தின் யுத்த மந்திரி காரியாலயத்துக்குள், ஒரு நாள் ஒரு வாலிபன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே நுழைந்தான்.

"நீர் யார்?" என்று கேட்டான் காவலன்.

"நானா? நான் ஒரு பெரிய விஞ்ஞான சாஸ்திரி. விமான தளபதியை உடனே பார்க்கவேண்டும். நான் ஓர் அபூர்வமான யுத்த விமானம் செய்யும் சூட்சுமத்தைக் கண்டு பிடித்திருக்கிறேன். அந்த விமானம் வைத்துக் கொண்டிருப்பவர் யாராயினும் சரி; அவர்களை எதிரிகள் ஜயிக்கவே முடியாது. அந்தச் சூட்சுமத்தை யார் என்னிடம் கிரயம் வாங்குகிறார்களோ அவர்களுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இங்கே அதை வாங்குவோர் இருந்தால் சரி; இல்லாவிட்டால், வேறு எதாவதோர் நாட்டின் ராணுவ மகானுபாவர்களிடம் சென்று பார்க்க வேண்டும். மெத்த அவசரம்" என்றான் வந்த வாலிபன்.

இதைக் கேட்ட காவலன், "நமக்கேன் இந்த வம்பெல்லாம்! வாலிபனைத் தளபதியிடம் கொண்டுபோய் நிறுத்தி விட்டால், அவர் பாடு; இவன் பாடு" என்று நினைத்து, அப்படியே அவனைத் தளபதியிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

இந்த அபூர்வ விஞ்ஞான சாஸ்திரியின் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் தளபதி பெரிதும் பூரித்து மகிழ்ந்தார்.

"நல்லது, ஐயா! தங்களுடைய நவீன விமான விவரங்களைப் பற்றிக் கொஞ்சம் விளக்குவீர்களோ?" என்று அவர் கேட்டார்.

வாலிபன் சொல்லலானான் :— "ஜலத்திலே குரூய்ஸர்க் கப்பல் போகிறதல்லவா? அந்த மாதிரி ஒரு ஆகாசக் குரூய்ஸரை நான் கட்டி யிருக்கிறேன். ஒரு பெரிய பட்டாளமே அதில் பிரயாணம் செய்யலாம். தரையிலே இறங்காமல், ஒரு வார காலம், எப்பேர்ப்பட்ட காற்று மழையையும் லட்சியம் செய்யாமல், அது ஆகாசத்திலேயே சஞ்சரிக்கக் கூடியது. அது உங்களுக்கு உபயோகமா யிருக்கு மென்று நினைத்தேன். ரகஸ்யத்தை வெளியிடுவ தில்லை யென்று உறுதி கொடுத்தீர்களானால், அதைக் கட்டும் சூட்சுமங்களை யெல்லாம் விவரமாய் விளக்குகிறேன்."

அப்படியே உறுதி கொடுத்தார் தளபதி. வாலிபன் ஒரு பெரிய உறையைப் பிரித்து, அந்த நூதன விமான சூட்சுமங்களை விவரிக்கும் ஒரு தஸ்தாவேஜிக் கட்டை அவிழ்த்தான்.

அதிற்கண்ட விவரங்களை யெல்லாம் படித்த தளபதிக்குத் திருப்தி யுண்டாயிற்று.

"ஆமாம், இந்தச் சூட்சுமங்களை நமக்கு விற்க, உமக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று கேட்டார் தளபதி.

"அப்படி யொன்றும் பிரமாதமாய் வேண்டாம், பிரபுவே. பத்து லட்ச ரூபாய் போதும்" என்று வெகு அடக்கமாய்க் கூறினான் வாலிபன்.

"பேஷ்! அப்படியே தருகிறோம். இதோ பொக்கிஷ மந்திரிக்கு ஒரு சீட்டுத் தருகிறோம். கொண்டுபோய்க் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்று சொல்லி, உண்டியலை எழுதிக் கொண்டே, "உமக்கு ரொம்ப வந்தனம். இன்னும் இம்மாதிரி புதிய கருவி ஏதாவது செய்தீரானால் உடனே அதை நம்மிடம் கொண்டு வாரும். பிறரிடம் போய்விடக் கூடாது" என்று சொல்லி, உண்டியலை நீட்டினார்.

வாலிபனும் அதை வாங்கிக் கொண்டவண்ணம், "இனிமேல் என்ன? இப்போதே என்னிடம் மற்றோர் ஆயுதம் இருக்கிறது. அதைப் பற்றிக் கேட்டால் நீங்கள் மகா ஆச்சரியப்படுவீர்கள்" என்றான்.

"அதென்ன?" என்று வினவினார் தளபதி.

"நான் ஒரு பிரம்மாண்டமான பீரங்கி செய்யும் சூட்சுமத்தைக் கண்டு பிடித்திருக்கிறேன். அந்த பீரங்கியை உபயோகித்தால், இப்போது நான் உங்களிடம் விற்றேன் பாருங்கள்; இந்த ஆகாசக் குரூய்ஸரை அந்த பீரங்கி ஒரே நொடியில் தவிடு பொடி யாக்கிவிடும். அந்த பீரங்கிக்கு முன் இந்தக் குரூய்ஸரின் பாச்சாத் துளியும் பலிக்காது" என்றான் வாலிபன்.

"என்ன படுமோசமா யிருக்கிறதே இது! நீங்களே மகா உறுதியான ஒரு குரூய்ஸரை முதலிலே கண்டுபிடிக்கிறீர்கள்; அடுத்தாற்போல அதைச் சுக்கு நூறாய் உடைத்தெறியும் பீரங்கியையும் நீங்களே செய்கிறீர்கள்! உங்களுக்கு வெட்கமா யில்லையா?" என்று உறுமிய தளபதியின் புருவங்கள் சுளித்தன.

"வெட்கம் என்ன வந்தது!" என்று அமைதியாக ஆரம்பித்தான் வாலிபன் : "வெட்கப்பட ஒரு காரணமு மில்லை. யுத்த சாஸ்திரமே இப்படித்தானே அபிவிருத்தியாகி வருகிறது. அடிக்கும் யந்திரமும் தடுக்கும் யந்திரமும் மாறி மாறி விருத்தியடைந்து வருவது ரொம்ப ஸகஜமாகத்தானே யிருக்கிறது. அடிக்கும் யந்திரம் ஒன்றை முதலிலே கண்டு பிடித்த நான், அடுத்தாற்போல அதைத் தடுக்கும் யந்திரத்தைக் கண்டுபிடிப்பதும் என் கடமை தானே?"

"அழகுதான்! உம்! தர்க்கம் சரியாய்த்தா னிருக்கிறது; ஆனால், தர்ம மில்லை" என்று பெருமூச் செறிந்தார் தளபதி.

"இந்தத் தடுக்கும் யந்திரத்தை நான் கண்டுபிடிக்கா விட்டால், இன்னொருத்தன் கண்டுபிடிக்கப் போகிறான். அது தர்மமாய்ப் போய்விடுமோ? இன்னொருத்தன் செய்வதை நானே செய்தேன். இதில் என்ன தவறு?" என்று மீண்டும் கேட்டான் வாலிபன்.

தளபதியால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை: "நீர் சொல்லுவதும் ஒரு நியாயமாய்த்தா னிருக்கிறது. உங்கள் பீரங்கியை எதிரியிடம் நீர் விற்காமல் தடுப்பதற்காக, அதையும் நாமே வாங்கிக்கொள்ள எண்ணுகிறோம். அதன் விலை என்ன?"

"பத்துலட்ச ரூபாய்தான்" என்றான் வாலிபன்.

"தந்தேன்" என்று சொல்லி, மற்றோர் உண்டியலை எழுதி அவனிடம் நீட்டிய தளபதி, அவனை முதுகில் தட்டிக்கொடுத்துக் கொண்டே, "நீர் ரொம்பக் கெட்டிக்கார வாலிபர்" என்று புகழ்ந்தார்

"பெரியவாள் சொல்வதை நான் மறுப்பேனு?"

"விமானக் குரூய்ஸர் மாத்திர மல்ல, அதற்கு மேலே ஒரு பீரங்கியையும் கண்டுபிடித்து விட்டீரே!"

"ஆமாம்!"

"பலே! ரொம்ப பேஷ்! ஆனல், ஆனல்........."

தளபதி முடிக்க வில்லை. வாலிபன் மீண்டும் பீடத்தி லமர்ந்து, தனது தஸ்தாவேஜிக் கட்டை அவிழ்த்துக் கொண்டே, "ஆனல் ஒரு விஷயம். இதற்கே இவ்வளவு ஆச்சர்யப் படுகிறீர் களே! இன்னேர் கருவி செய்திருக்கி றேனே, அதைக் கேட்டால், எப்படி அதிசயிப்பீர்களோ! அது ஓர் கவசம். அந்தக் கவசத்தை இந்தக் குரூய்ஸருக்குப் போட்டு விட்டால், இந்த பீரங்கியால் குரூய்ஸரை அசைக்க முடியாது; இதன் மேல் ஒரு சிறு கீற்றுக்கூடக் கீறமுடி யாது" என்ருன்.

தளபதி மண்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்: "நீர் என்ன என்னைப் பைத்தியம் பிடிக்கச் செய்ய வேண்டுமென்று வந்திருக்கிறீர்? உமது சங்கதி மகா அநியாயமா யிருக்கிறதே! மகா அயோக்கியத் தனமும் மகா வஞ் சகமுமா யிருக்கிறதே!" என்று புலம் பினர்.

"பிரபுவே! தாங்கள் இப்படிப் பேசு வது கொஞ்சமும் நியாய மில்லை. என் செயலில் என்ன அயோக்கியத்தனத் தைக் கண்டு விட்டீர்கள்? எனது விமானக் குரூய்ஸரில் ஏதாவது குறை யுண்டா? அது முதல் தரமானது. எனது பீரங்கியில்தான் அப்பழுக்குச் சொல்ல முடியுமா? அது அற்புதமானது. அவற்றின் சக்தியைப் பற்றி நான் ஏதா வது பொய் சொல்லி ஏமாற்றினே னென்று நீங்கள் நிரூபிக்க முடியமா?" என்று கேட்டான் வாலிபன்.

"அதெல்லா மில்லை. நீர் முதலிலேயே இரும்புக் கவசத்தைத்தான் என்னிடம் விற்றிருக்கவேண்டும்" என்ருர் தளபதி.

"ரொம்ப அழகா யிருக்கிறது" என்று சொல்லிக் 'கொல்' லென்று நகைத்த வாலிபன், "அதெப்படி முடியும்? யுத்த சாஸ்திரம் படிப்படியாய்த் தானே வளரும்! அதைத் தலைகீழாய் நீங்கள் புரட்ட முடியுமா? விமான மில்லாமல், பீரங்கி வருமா? பீரங்கியில்லாமல் கவ சம் எப்படி வரும்?" என்று முடித் தான்.

இருவரும் சற்று நேரம் மௌன மாய் உட்கார்ந்திருந்தார்கள். தளபதி இன்னது செய்வ தென்று புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தார். வாலி பனே புகை விட்டுக்கொண்டு புன்முறு வல் பூத்த குஷியுடன் உட்கார்ந்திருந் தான்.

வேறு வழியின்றி அந்தக் கவசத்தை யும் வாங்கிக்கொள்ளுவதாக, இறுதி யிலே தளபதி அறிவித்தார்.

"தாராளமாய் வாங்கிக்கொள்ளுங் கள்" என்ருன் வாலிபன்.

தம்மை இன்னும் என்ன மொட்டை யடிக்கப் பார்க்கிருனே இவன் என்ற நடுக்கத்தோடே, "என்ன விலை?" என்று கேட்டார் தளபதி.

"பத்து லட்ச ரூபாய்தான்" என்று தயங்காமல் பதிலளித்தான் வாலிபன்.

"அதில் பாதி வாங்கிக்கொள்ள மாட் டீரா?"

"என்ன, ஏதாவது கனவு காண்கி றீர்களா? நீங்களா யிருக்கக்கொண்டு இந்த விலை சொன்னேன். வேருேர் நாட்டு அதிகாரியிடம் சென்ருல், தாராள மாய் இருபது லட்சம் வாங்கி விடு வேனே."

"சரிதான்; சரிதான்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்ட தளபதி, "இந்தாரும், பிடியும்! எங்களை அடி யோடு கொள்ளை யடித்து நாசம் செய்கி றீர். செய்யும்" என்று கூறி, பத்து லட்சத்துக்கு மற்ருேர் உண்டியலை எழு திக் கொடுத்தார்.

வாலிபன் சாவதானமாக அதை வாங்கி மடக்கி ஜேபியில் திணித் துக்கொண்டு, வாசற்படியை நோக்கி நகர்ந்தான்.

"பொறும்; எப்பேர்ப்பட்ட பீரங்கிக் குண்டையும் இந்தக் கவசம் எதிர்க்கும் என்று உமக்கு நிச்சயந்தானு?" என்று வினவினர் தளபதி

"ஆஹா! அதற்கென்ன ஆட்சேபம்? மகா பயங்கரமான அதி நூதன பீரங்கி ஒன்றைக் கண்டு பிடிக்கும் வரையில், இந்தக் கவசத்தை எதுவும் தொளைக்க முடியாது" என்று உறுதி கூறினன் வாலிபன்.

"அப்படியும் ஒரு பீரங்கி கண்டுபிடிக் கப்படும் என்று நீர் நினைக்கிறீரா?"

"நினைப்பதென்ன? இப்போதே அது கண்டுபிடிக்கப் பட்டுத் தானிருக்கிறது."

"யாரால்?"

"என்னல் தான்."

தளபதிக்கு மகா ஆத்திரம் வந்தது: "அட நீர் நாசமாய்ப் போக! அந்த பீரங்கியையும் மறுபடி எங்களிடம் விற்க வருவீர் போலிருக்கிறது. அதை நாங் கள் வாங்கியபின், அதற்கு மேற்பட்ட மற்ருேர் மகா கவசம் கொண்டுவருவீர். பிறகு, அதையும் தொளைக்கும் பீரங்கி! அப்புறம் பின்னும் உறுதியான கவசம்! இப்படியே மாற்றி மாற்றிக் கொண்டு வருவீர்!"

"ஆமாம், அதற்கென்ன சந்தேகம்?"

தளபதி கையைப் பிசைந்து கொண்டே, "அட பாபி! எங்களை ஒரு உளையில் மாட்டி விட்டாயே; இதி லிருந்து நாங்கள் தப்பிக் கரையேறும் மார்க்கமே கிடையாது போலிருக்கி றதே! நீ யார்? மனிதரூபம் கொண்ட சனீசுவரனு? அல்லது, ஏதாவது பேயோ, பிசாசோ?" என்று கத்தினர்.

வாலிபன் துள்ளி நிமிர்ந்து, கம்பீர மாய் நின்று கொண்டு, கேலிப் புன்முறுவலுடன் கூறலானன்:—"என் பெயரைத் தெரிந்துகொண்டு உமக்கு என்ன ஆக வேண்டும்? என்னை என்ன வேண்டுமானலும் திட்டும். அதனல் நீர் புத்தி சாலியாகப் போவ தில்லை; நான் முட்டாளாகப் போவதும் இல்லை. என் பெயரை உமக்கு நான் தெரிவிக்க மாட் டேன். நீர் சிறிது உமது மூளையை உப யோகித்து யோசித்துப் பார்த்தீரானல், நானே மனித ரூபத்தில் வந்திருக் கும் பகுத்தறிவு என் றறிவீர். உமக்கு அந்தப் பகுத்தறிவு சூன்யம். ஆகையால், உமது தேசம் இந்த ஆயுத அதிகாரிப் பினல் நாசமாகப் போவ தென்னவோ நிச்சயம். பத்து நிமிஷத்தில் நாசமானு லென்ன? பத்து வருஷத்தில் நாசமானு லென்ன? இரண்டும் ஒன்றுதானே. மனிதனின் உன்னத மேதை உம்மு டன் பேசுகிறது. ஆனல், அதற்கு வாசற் படியைக் காட்டிக் கதவை அடைக்கிறீர். ஒவ்வொரு தேசமும் மூடத்தனத்தின் முழுச் சிகரத்தையாவது எட்ட முயன்று விறு விறு என்று அபாரமாய் ஆயுதம் சேர்க்கிறது. அப்படி ஒரே மூச்சில் அந் தச் சிகரத்தைத் தாவிப் பிடிக்கவும் நீர் நடுங்குகின்றீர். அதையாவது பூர்த்தி யாகச் செய்து மூட பரிபூர்ணத்தை யாவது அடைய லாகாதா? நமஸ்காரம்! போய் வருகிறேன்!"

இத்துடன் வாலிபன் சட்டென்று வெளியேறி, 'படார்' என்று கதவைச் சாத்திவிட்டு, யுத்த மந்திரி காரியா லயத்தைவிட்டகன்று மாயமாய் மறைந் தான்.

---

# ஓர் ஆசிரியர் காதல்

## (கே. ஸ்ரீனிவாசன்)

கற்பனை அமிழ்தத்தில் ஊறிக்கிடந்த மாபெரும் பிரஞ்சு ஆசிரியர் விக்டர் ஹியூகோ, காதல் தெய்வமாகிய ஜூலியட் ட்ரூயிட் என்பவள் வசம் சிக்கினது விதியின் சூழ்ச்சி என்றே கருத வேண்டும். முறைப்படி ஹியூகோவை மணந்த மனைவி, தன் கணவனுக்கு நான்கு குழந்தைகளை அளித்தாளே தவிர, அவரது கலைச்சுவைக்கோ, அல்லது கீர்த்தியின் உயர்வுக்கோ சிறிதும் உதவ வில்லை. ஆனால், நாடகக்காரி ஜூலியட்டின் காதலோ அப்படிப்பட்டதல்ல. அவள் ஹியூகோவிடம் கொண்ட காதலுக்கு இணையேயில்லை. ஹியூகோவின் கற்பனைப் பெருக்குக்கு ஜூலியட்டே காரணம். ஹியூகோவும் தம் வீட்டை மறந்தார்; நண்பர்களை மறந்தார்; பசியை மறந்தார். ஆனால், காதலியை மட்டில் தவறாமல் தேடிச் சென்று சந்திப்பார். காதலர்கள் காதற் கடிதங்கள் எழுதுவதில் கட்டுக்கடங்கா மகிழ்ச்சி கொண்டனர். சாவதற்குள் ஆறாயிரம் கடிதங்கள் பரஸ்பரம் எழுதிக்கொண் டிருப்பார்கள். தினம் ஆறு கடிதங்கள் கூட ஜூலியட் எழுதுவாள். வனங்களில் சஞ்சரிக்கும் பொழுது, மரப்பொந்துகளும் இவர்களுக்குத் தபால் பெட்டிகளாக உதவின!

ஒரு கடிதத்தைக் கவனிப்போம்:

"என் உடல், ஆவி, வாழ்நாள் யாவும் உம்முடையனவே! உலகிலுள்ள அழகிகளின் சௌந்தரியத்தை எல்லாம் நான் பெற்று உம்மைச் சந்தோஷிக்கச் செய்வேன். என்னிடமுள்ள யாவற்றையும் நான் உமக்குத் தந்தபின், இனித் தர ஒன்றுமில்லையே என்பது தான் என் தீராக் குறை. இந்தக் குறையை நிவர்த்திக்க, உம் கற்பனைக்கு யாதொன்றும் புலனாக வில்லையா? —ஜூலியட்"

என்ன அற்புதமான அன்பு!

ஜூலியட்டின் கண்களுக்கு ஹியூகோ தெய்வமாகத் தோன்றினார். அவர் பேனா முனையினின்றும் உதிர்ந்த ஒவ்வொரு வசனமலரையும் பாரிஜாதமென அவள் போற்றினாள். அவரது கற்பனைக் களஞ்சியமான நாடகங்களையும் நாவல்களையும் விலைமதிக்க வொண்ணாத மாணிக்கக் கற்களென்று புகழ்ந்தாள். ஹியூகோ எழுதும் நாவல்கள் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான பக்கங்கள் ஓடும். அப்படியிருந்தும் சிறிதும் முனகாமல் அவற்றை யெல்லாம் ஆசையோடு நகல் செய்வாள். சட்ட சபையில் ஆசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் தானே தன் கைகளினாலே எழுதிக் கொடுத்திருந்தாலும், பத்திரிகைகளில் அவை பிரசுரிக்கப்பட்டு வெளி வந்த பின், அவற்றை மீண்டும் படித்துப் படித்து ஆனந்தக் கண்ணீர் சொரிவாள். அவர் வரையும் மிகவும் சாதாரணமான படங்களைத் தன் வாசனைப் பெட்டியில்



பூட்டி வைத்து மகிழ்வாள்! யார் இந்த ஜூலியட்?

1806-ஆம் ஆண்டில் போர்பகரியில் பிறந்து, இரண்டாண்டுகள் நிரம்புவதற்குமுன் தன் பெற்றோர்களை யிழந்த அனாதை இவள். மாமன் வீட்டில் வளர்ந்தாள். ஓர் கன்னிமாடத்தில் படிக்கச் சென்றாள். மிகவும் குறும்புக்காரி. ஒருநாள் தரையில் அவள் எழுதின எழுத்துக்கள் பின்வருமாறு காணப்பட்டன: "தந்தையே! நான் ஆசைப் பேய்க்கு முடி சாய்க்கிறேன். விபசாரத்துக்கு நான் தப்பவில்லை. தந்தையே! கனவான்களின் கண்கள் என் மனதை மின்சாரம் போல் இழுக்கின்றனவே, என்ன செய்வேன்?" இவ்வாறு, தான் தூயவாழ்வு நடத்த முடியாது என்ற குற்றத்திற்காக, இவள் இந்தக் கன்னிமாடத்தைவிட்டு வெளியேறினாள். பின்னால் ஜேம்ஸ் பிரேடியர் என்ற சிற்பியின் காமவலையில் சிக்கி, கிளார் என்ற பெண் மகவைப் பெற்றெடுத்தாள். பிரேடியர் அவளை மணக்க மறுக்கவே பதைபதைத்தாள். வேறு கதியின்றி நாடக மேடையேறித் தன் புகழைப் பரப்ப ஆரம்பித்தாள். அவள் சௌந்தரியத்தைக் கண்டு வாலிபர்கள் துடிதுடித்தனர். ஹியூகோவும் அவளிடம் மனம் பறிகொடுத்தார். தன் காதலனைச் சந்தோஷப்படுத்துவதற்காக ஜூலியட் தன் சிறு வருவாயை மதியாமல் வரம்பு மீறிச் செலவு செய்யவே, அவளை வறுமை சூழ்ந்து கொண்டது. ஆசிரியரின் நிர்ப்பந்தத்தின் பேரில், தான் இதுகாறும் நடத்திய டாம்பீக வாழ்க்கையைப் புறக்கணித்து, ஒரு சிறு அறையில் வாழ ஆரம்பித்தாள்; அலங்காரங்களை யெல்லாம் கைவிட்டாள்; வறுமையை மறந்து அன்பில் உருகினாள். அவள் தம்மைத் தவிர வேறு யாருடனும் பேசக்கூடாது என்று ஹியூகோ விதித்த தடையையும் பொறுத்தாள். இணையற்ற அன்பு!

பாரிஸ் நகரத்தை விட்டு, காதலர்கள் இயற்கையின் அழகை அள்ளிப் பருக, நாட்டுப் புறங்களுக்குச் செல்வார்கள். மகத்தான நடிகை என்று தன் பெயரை நிலைநாட்ட வேண்டுமென்பதே, ஜூலியட்டின் பேரவா! அந்த அவாவை ஹியூகோ மங்கச் செய்தார். தன்னைத் தவிர யாரொருவரும் தம் ஜூலியட்டுடன் சல்லாபஞ் செய்ய அவர் மனம் சகிக்க வில்லை. அவளும் அவரைத் தெய்வமாகத் தொழுதாள். அவரது அன்பு குழைந்த பார்வையே அவளுடைய சொர்க்கம்; அவரது வார்த்தைகளே அவளுக்கு அமிழ்தம்; அவரது கட்டளையே அவள் வேதம்! ஹியூகோ தரையில் நடக்கக்கூட அவள் சகிக்கமாட்டாள். மற்றொருத்தி அவருக்கு உணவளிக்க ஜூலியட் இடங்கொடாள். தன் கையாலேயே சமைத்து, வேலைக்காரி மூலம் அனுப்பி, அவள் திரும்பும் வரை ஆவலுடன் எதிர்பார்த்து, ஹியூகோ தான் அனுப்புவித்த உணவையே உண்டார் என்று கேட்ட பிறகுதான், அவளுக்குத் தான் பசியுடன் இருப்பது ஞாபகத்திற்கு வரும். இதனாலெல்லாம் ஹியூகோவின் மனைவி பொறாமை கொள்ளவில்லை. தன் கணவன்மீது கட்டுக்கடங்காக் காதல்கொண்டு தொண்டு புரியும் ஜூலியட்டிடம் அவளுக்கும் அன்பு உதித்து, தன் கணவனை மட்டுமன்றி, தன்னையும் தன் குழந்தைகளையும் கூட ஜூலியட்டின் பாதுகாப்புக்கே விட்டு

விட்டாள். மனைவி தம்மீது அன்பு கொண்டவளாயினும், தமது நண்பன் ஸெயிண்ட் பூவே இடமும் அவள் காதல் கொண்டது கண்ட ஹியூகோ மனம் சோர்ந்து, ஜூலியட்டே தம் வாழ்க்கை அலங்காரி என்று மனம் தேறி, அவளையே நாடினர்.

அவருக்கு ஜூலியட் எழுதின மற்ருேர் கடிதத்தைக் கவனிப்போம்:

"உங்கள் அதரம் என் கன்னங்களை ஜ்வாலை இதழ்கள் கொண்ட மலர் போல் தொட்ட அந்நேரம் முதல், நாம் இருவரும் ஒரே பாஷை, ஒரே உண்மை, ஒரே அன்பு பேசப் பிறந்துள்ளோம் என்று மனதில் தீர்மானித்து விட்டேன். என் கண்களுக்குத் தாங்கள் எங்கும் நிறைந்திருக்கிறீர்கள். நீங்க ளில்லாத இடம் இந்த புவனத்தில் என் பார்வைக்குப் புலப்படவில்லை. பாருங்கள்! என்னைப் பாருங்கள்! என் காதற்கனியே!என் உடலில் தகிக்கும் ஜ்வாலையே! உம்மை நேசிக்கிறேன். உம் அன்பே என் உலகம். இதுவே என் ஜீவிய மந்திரம்.

—ஜூலியட்"

ஒரு நாள் இருவரும் ஒரு மாதா கோவிலைத் தரிசிக்கச் சென்றனர். அதன் அழகில் மெய்மறந்து ஹியூகோ பாட ஆரம்பித்து விட்டார். பக்கத்தில் நின்ற ஜூலியட் மயிர்சிலிர்க்கப் பரவசமானாள். அவள் கண்களினின்றும் வற்ருத ஊற்றெனக் கண்ணீர் சொரிந்தது. அன்புடன் ஹியூகோ அவளை இறுகத் தழுவி, தாம் மாளும்வரை அவளை மறப்பதில்லை என்று பிரதிக்ஞை செய்தார்.

ஹியூகோ அமரத்வம் அடைய வேண்டும் என்று ஜூலியட் ஆண்டவனைத் தொழுவாள். ஹியூகோ நெப்போலியனின் ஆட்சியைக் கடுமையாக வெறுத்தார். ஜனங்கள் தெருக்களில் நூற்றுக்கணக்காகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அப்பொழுது ஹியூகோ சட்டசபை அங்கத்தினராக இருந்தார். தவிர ஜனநாயகக் கட்சியின் பிரபல தலைவருமாவார். அவருக்கு வரும் போலிருந்த பெரிய நெருக்கடியினின்றும் ஹியூகோவைக் காப்பாற்றினுள் ஜூலியட். தன் உயிரையும் மதித்தாளில்லை. பல முறை அவள் துப்பாக்கி முனைமுன் நிற்க நேர்ந்தது. ஒற்றர்கள் அவளைப் பின் தொடர்ந்தனர். ஒரு நாள் நடு நிசி. ஹியூகோ வீடு திரும்புகிருர். பகல் முழுதும் திரிந்த சோர்வு. இருட்டில் யாரோ தம் கையைப் பிடிப்பதாக உணர்ந்தார். "வேண்டாம்! உள்ளே போகவேண்டாம்! என்னைப் பின்பற்றும்!" என்றது ஒரு குரல். மறு நிமிஷம் ஜூலியட்டுடன் காரில் பிரயாணம் செய்வதாக உணர்ந்தார். அன்று அவர் வீடு சென்றிருந்தால், அதோகதிதான்; எதிரிகளின் கோபம் அவ்வளவு உக்ரமாயிருந்தது.

கடைசியில் ஹியூகோ தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். சேன்னல் தீவுகளில் காதலர்கள் ஒடி ஒளிந்து கொண்டனர். அங்கே போய்ச் சேர்வதற்குள் இடையூறுகள் பல நேர்ந்தன. ஒரு நாள் ஜூலியட் முன்னுல் நடந்து கொண்டிருந்தாள். பின்னுலே ஹியூகோ சென்று கொண்டிருந்தார். இப்படி இருவரும் சென்றுகொண்டே யிருக்கையில், 'டோடோ!' என்று அவள் அழைத்தாள். ஹியூகோவை அவள் கூப்பிடும் செல்லப் பெயர் அதுதான். ஹியூகோ பதில் சொல்லவில்லை. திரும்பிப் பார்த்தாள். ஹியூகோவைக் காணேம். ஜூலியட் மனம் பதைத்தாள்.

அவள் காதலைச் சோதனை செய்வது போல் பனி கொட்டிக்கொண் டிருந்தது. அவள் மனம் தளரவில்லை. ஆண்டவனைத் துதித்துக்கொண்டே நின்ருள். மறுநாள்தான் ஹியூகோ திரும்பிவந்தார். கார்மேகத்தைக் கண்ட மயில் போல், துள்ளிக் குதித்தாள். மறுகணமே அவளுடைய மங்கிய கண்கள் ஜொலிசெய்து கவியின் அகண்ட மார்பில் பதிந்து உறங்கின. கவியின் துன்பம் அவரை விட்டபாடில்லை. அவருடைய சொல்லம்புகள் சீறி எழுந்து, பிரான்ஸில் நடைபெறும் அநீதியைத் தாக்கின. இதனால் மற்ருெரு தீவுக்குக் குடியேற நேர்ந்தது.

பத்தொன்பது வருஷ அஞ்ஞாதவாசத்துக்குப் பிறகு தம் தாய்நாடு திரும்பினர் ஹியூகோ. ஜூலியட் இல்லாவிட்டால், உலகப் பிரசித்தியடைந்த *'லே மிஸரபிள்' நாவலை ஹியூகோ எழுதியிருக்க முடியாது. ஜூலியட்டின் சொந்த அனுபவங்களும் அவருடைய நாவலில் இனிமை பொங்க ஏதுவாகயிருந்தன. பாரிஸில் இருவரும் ஒரே வீட்டில் வசித்தனர் வயோதிக காலத்தில் ஒருவரைவிட் டொருவர் பிரியவில்லை. இருவரும் புகைக் கூண்டில் ஏறி வானத்தில் பறந்தனர். கவி நோயுற்றிருக்கையில் இமைகொட்டாமல், தன் மெய்வருத்தமும் பாராமல், அவருக்கு ஆறுதலும் உற்சாகமும் ஜூலியட் அளித்தாள்.

1883-ஆம் வருஷம் மேமாதம் 11-ம் தேதி அண்டையில் கவி வீற்றிருக்க, ஜூலியட் உயிர் நீத்தாள். அந்தச் சோகத்தினின்றும் மீளாமலே இரண்டு வருஷத்துக் கெல்லாம் ஹியூகோவும் காலமாகி விட்டார்.

அவ்விருவரும் மறைந்து விட்டார்கள். ஆனல், மனமுவந்து ஹியூகோவும் ஜூலியட்டும் வீணையின் தந்திகள்போல் திகழ, கலைவாணி கலைநாதங்களை உலகம் பிரமிக்கச் சிந்தினுள்; அந்த நாதங்கள், இன்னும் உலகிலே நலியாமல் ஒலித்துக்கொண் டிருக்கின்றன.

---

* இதன் மொழிபெயர்ப்புத்தான் ஏழை படும் பாடு என்ற அன்பு நிலையப் பிரசுரம்.

## குளவிபோல் வாழ்வு!

"ஒரு குளவி தட்டிலுள்ள தேனைச் சுவைத்துக் கொண்டிருந்தது. இச் சமயம் அதன் உடலை இரு துண்டாகக் கத்தியால் வெட்டினேன். இதைக்கூட உணராது தேனை அது உண்டுகொண்டிருந்தது அந்தக் குளவி. பறக்க முயன்றபொழுதே தன் பாதி உடல் அழிந்ததை அது அறிந்தது. இந்த நிலைமையையே நமது மக்களும் இன்று அடைந்திருக்கிருர்கள். மனிதன் அவனுடைய ஆன்மாவையே இழந்துவிட்டான். எனினும், 20 வருஷகாலமாக இதைக் கவனியாது மறந்திருக்கிறன்" என்று ஜியார்ஜ் ஆர்வெல் என்ற அறிஞர் கூறுகிருர்.

# எங்கள் பாட்டி

பண்டித முத்துசாமி

எங்கள் குடும்பத்தின் 'ஸீனியர் மெம்பர்' என் பாட்டிதான். "வயது என்ன பாட்டி?" என்று அவளைக் கேட்டுவிட்டால், அவளுக்கு அடங்காக் கோபம் வந்துவிடும். இன்று கிடுகிடு கிழமான பிறகும் தான் குமரி என்றுதான் அவள் நம்பிக்கை. அவள் தலையிலுள்ள நரைமயிரை வெகு சுலபமாக எண்ணிவிடலாம். ஆனால், அவள் சம்மதித்தால் தானே! ஒரு நாள் அவள் தூங்கும்போது முக்கால்வாசி மயிரையும் எண்ணிவிட்டேன். 113 மயிர்கள் கணக்காக இருந்தன. பூராவும் எண்ணி முடியுமுன் திடீரெனப் பாட்டி விழித்துவிட்டாள். பார்க்கணுமே அவள் சீறலை! தன் பொக்கை வாயால் என்னைக் கடித்து விழுங்கி விடுவதைப்போல, உறுத்து விழித்தாள். நான் மெல்ல நழுவி விட்டேன்.

அவள் முதுகை நோக்கும்போதெல்லாம் ராமாயணக் கதையில் வரும் கூனியின் ஞாபகம் எனக்கு வரும். பிறரைப்பற்றிக் கோள் சொல்லுவதில் என் பாட்டி கூனியையும் தோற்கடித்து விடுவாள். என் அப்பா அவளுக்குப் பதினேராவது குழந்தை. அப்பாவுக்கு இப்போது வயது 72. சரித்திர ஆராய்ச்சிக்காரர் கால வரையறை செய்யக் கணக்குப் போட்டுப் பார்க்கிற மாதிரி கணித்துப் பாருங்களேன். என் அப்பாவுக்கு மூத்த பத்துக் குழந்தைகளும் சராசரி இரண்டரை வருஷத்துக் கொன்று விகிதம் பிறந்ததாக வைத்துக்கொண்டாலும்கூட என் பாட்டிக்கு இப்பொழுது வயது 97 இருக்கவேண்டும். இரண்டு மூன்று குழந்தைகள் மூன்று மூன்றரை வருஷத்துக் கொருமுறை பிறந்ததாக என் பாட்டியே பலபொழுது கூறியிருப்பதனால், பாட்டிக்கு இப்பொழுது வயது நூறுக்குமேல் இருக்குமென்று திட்டமாகக் கூறிவிடலாம்; வயதை உள்ளபடி கூற என்னவோ அவளுக்கு மிகவும் சங்கோஜம். இன்னமும் மாப்பிள்ளை வீட்டார் அவளைத் தேடி வரக் கூடுமென்ற எண்ணமோ, என்னவோ!

என் பாட்டியின் கண் மூக்கு வாயழகுகளை வர்ணிக்கத் தொடங்கினால், ஒரு பாரத மாகிவிடும். எனவே இரண்டொரு வார்த்தைகளில் சுருக்கிக் கூறிவிட எண்ணுகிறேன். குழிந்த கண்கள்; ஒவ்வொன்றிலும் உழக்கு அரிசி போட்டு வைக்கலாம். பொக்கை விழுந்து அகண்ட வாய் பட்டணம் படி பக்கா ஒன்று தாராளமாகக் கொள்ளும். இரண்டு எலிவளைகளை ஒன்று சேர்த்தால், என் பாட்டியின் மூக்கு அமைந்துவிடும்.

என் பாட்டியின் குணமோ அவளது உருவத்தைவிட வெகு விசேஷம். குழந்தை குட்டிகளுக்குள்ளே சண்டை மூட்டி வேடிக்கை பார்ப்பதிலே அவளுக்கு வெகு குஷி. என் தாயார் எவ்வளவோ பயந்து பயந்து என் பாட்டிக்குப் பணிவிடை செய்தாலும், அவளுக்குத் திருப்தி என்பதே கிடையாது; எப்பொழுதும் முணுமுணுப்பும் குறுகுறுப்பும் தான். அப்பா இடத்தில் அவள் அவலாதி சொல்லாத நாளே கிடையாது. 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி அம்மாள் குணம் மகனுக்கு நன்கு தெரியுமானதினால், அவள் கூறுவதையெல்லாம் எதிர் பேசாமல் காதில் வாங்கிக்கொண்டு என் அம்மாளைக் கோபிப்பதுபோல் பாசாங்கு செய்து சமாளித்து விடுவார். பாட்டி பேச்சை நம்பி அப்பா சண்டை போடுவதென்றால், வீடு எந்நாளும் ரணகளமாகத் தான் இருக்கும். அதைவிட, அவர் ஜெர்மன்காரன் சண்டையில் போய்ச் சேர்ந்து விடலாம்.

இருந்தாலும் ஆசார அனுஷ்டானங்களுக்கு மட்டும் பாட்டி ஒரு குறைச்சலும் வைக்கமாட்டாள். விடியற்காலை 4 மணிக்கு, நாங்கள் எல்லாம் கண் விழிக்குமுன் அவள் எழுந்து, கோலூன்றிக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்று, ஸ்நானம் செய்து, அரச மரப் பிரதட்சணம் செய்வாள். எந்த மழையானாலும் இருட்டானாலும் அவளுக்கு லட்சியமில்லை. கண் பார்வை தெளிவில்லையானாலும், வெகுநாள் பழக்கத்தினால் அவளது கால்கள் அவளைப் பத்திரமாக ஆற்றங்கரைக்குக் கொண்டு சென்றுவிடும். "சிரஞ்சீவியாக இருக்கவா, பாட்டி, அரசமரம் சுற்றுகிறாய்?" என்று யாராவது கேட்டால், "ஆமாம்! இனி இந்தக் கட்டை இருந்து என்னத்துக்கு? குடும்பம் தழைக்கணு மென்று தான் சுற்றுகிறேன்" என்பாள்.

ஆனாலும் குடும்பத்தில் அடிக்கடி சாவுக்குமட்டும் குறைச்சல் இல்லை. காரணம், பாட்டி பிரார்த்தனையைச் சாமி ஏற்றுக்கொள்ளாததாகத் தான் இருக்கவேண்டும்; அப்படிக் கல்லாது, குழந்தை குட்டிகளைச் சாகவா பாட்டி வரம் கேட்டிருப்பாள்?

'காடு வா வா என்கிறது; வீடு போ போ என்கிறது' என்ற பழமொழியைப் பாட்டி அடிக்கடி கூறுவாள். அது பொய். சில சமயம் தட்டுக்கெட்டு அதைத் தலைகீழாய் மாற்றி 'வீடு வா வா என்கிறது; காடு போ போ என்கிறது' என்றும் அவள் சொல்லுவதுண்டு. அதுதான் உண்மை. இந்தத் தள்ளாத வயதிலும், பாட்டிக்குப் பல சமயத்தில் எங்கள் தாத்தா ஞாபகம் வந்துவிடும். "நானும் ஒரு நாள் ஓங்கம்மா மாதிரிதான் தாலியைக் கட்டிண்டு வாழ்ந்தேன். அவாள் இருக்கச்சே........" என்று கூறிக்கொண்டு வரும்போதே, அவள் கண்களில் ததும்பும் ஒவ்வொரு கண்ணீர்த் துளியிலும் எங்கள் தாத்தாவின் உருவம் பிரதிபலிப்பதுபோல் எனக்குத் தோன்றும். தோன்றி என்ன செய்ய? தாத்தா போய்விட்டார்; பாட்டி போகமாட்டேனென்கிறாள். அது எங்கள் அதிர்ஷ்டம். தாத்தா போனதல்ல; பாட்டியிருப்பதுதான்.

# விதியை வெல்லும் வழி

(ஸ்ரீ அரவிந்த கோஷ்)

[‘விதியும் சித்த சுதந்திரமும்’ என்ற தலைப்பில் ஸ்ரீ அரவிந்த கோஷ் எழுதியுள்ள மகா நுணுக்கமான ஓர் கட்டுரையின் முக்கியப் பகுதியை இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறேன். —தி. ஜ. ர.]

காரண காரிய நியாயத்தை, கர்மமும் கர்ம பலனும் என்று சுருக்கிக் கூறலாம். சொல்லையும் செயலையும் போலவே, எண்ணமும் உணர்ச்சியும் கூடக் கர்மமே யாகும் என்பது ஹிந்துக்களின் சித்தாந்தம். அவற்றுக்கும் பலன் உண்டு. எண்ண, உணர்ச்சிகளின் வெளியீடான சொல்லும் செயலுமே, எண்ண, உணர்ச்சிகளை விட அதிக முக்கியமென்று ஐரோப்பியர் கருதுகிறார்கள். அதை நாம் ஏற்பதில்லை. வெளிப்படும் சொல்லும் செயலும், உள்ளுறையும் எண்ண, உணர்ச்சிகளின் ஒரு பாகமே யாகும். அவற்றின் பலன்களும் கர்ம பலனிலே ஒரு பாகமாகும்.

* *

முந்திய கர்மத்துக்கு ஒரேவிதமான பலனில்லை; பலவிதப் பலன்கள் உண்டு. இந்த ஜன்மத்திலே நமது எண்ணங்களும் உணர்ச்சிகளும் சில சொல், செயல்களைத் தூண்டுகின்றன. அந்தச் சொற்களும் செயல்களும் அடுத்த ஜன்மத்திலே, நமக்குப் பாக்கியத்தையோ துர்ப்பாக்கியத்தையோ தருகின்றன. அன்றியும், அவற்றால் பிறருக்கு நாம் புரிந்த நன்மை தீமைகளுக் கேற்றவாறு, மற்றோர் ஜன்மத்தில் மகிழ்ச்சி துயரங்களையும் நாம் அடைகிறோம். இந்த ஜன்மத்தில் நமது எண்ண உணர்ச்சிகளின் பழக்கம், வரும் ஜன்மங்களிலும் அதே எண்ண உணர்ச்சிகளின் பழக்கம் நிலைக்கும்படியும் செய்கிறது. அதனால், நமது பாக்கியம் அல்லது துர்ப்பாக்கியங்களும் நிலைபெற்று விடுகின்றன. அல்லது, வேறு வழிகளில் செயல் புரிந்தால், ஒரு எதிர்ப்பு அல்லது அதைப்பு ஏற்படுகிறது; நேர் எதிரான பழக்கங்களும் உண்டாகின்றன. அதனால், நன்மையோ தீமையோ நல்கும் எதிரான பலன்களும் உண்டாகின்றன. இதுதான் **கர்மச் சங்கிலி**—வினைகளின் பந்தம்—ஆகும். ‘விதி’ என்று இதைத் தான் ஹிந்துக்கள் சொல்லுகிறார்கள்; இதனின்றும் விடுதலை பெறவே அவர்கள் விழைகிறார்கள்.

* *

இந்தத் தெய்வ நியதியினின்றும் தப்ப வழியே இல்லை யென்றால், பிரக்ருதியே சர்வ வல்லமையுள்ள தென்றால், அதை மாற்றவே முடியாதென்றால், மனிதனுக்கு விமோசனமே கிடையாது: சுதந்திரம் என்பது வெறும் கானல்நீர் ஆகும்; பந்தமே சாசுவதமாகும். நமக்குள்ளே பிரக்ருதியினும் உயர்ந்த சுதந்திரமான தெய்வாம்சம் ஏதோ ஒன்று இருந்தால் ஒழிய, அந்த பந்தத்தினின்



றும் நாம் தப்பித்துக் கொள்ளவே முடியாது. மனிதனுடைய **ஆத்மா** இந்தத் தெய்வாம்சம் பெற்றதாகும். அது எப்போதும் சுதந்திரமா யிருப்பது; ஆனந்தமயமானது; அகில வுலகுக்கும் பிரபுவான பரம புருஷனோடு அடிப்படையிலே ஒன்றுபட்ட சத்திய தத்துவமு மாகும்.

* *

ஆத்மா, கர்மத்தைச் செய்வதில்லை; பிரக்ருதியிலேதான் கர்மம் அடங்கியிருக்கிறது. ஆத்மா கர்மம் புரிந்தால், அந்தக் கர்மத்தினால் அது பந்தப்பட்டு விடும். பிரக்ருதி தான்—இயற்கையே—கர்மம் செய்கிறது. அதிலிருந்துதான் பொருள்களின் சுபாவம் நிர்ணயமாகிறது. இயற்கை நியதி அல்லது தர்மத்துக்கு மூலாதாரமும் பிரக்ருதியேயாகும். இந்தச் சுபாவத்தை, ஆத்மா அல்லது **புருஷன்**, தாங்கிப் பிடித்து, கவனிக்கிறான்; அதன் கர்மத்தையும் பலன்களையும் அனுபவிக்கிறான்; சட்டம் அல்லது தர்மத்தையும் விதிக்கிறான். மன்னனும் பிரபுவுமான ஈசுவரனின் சம்மதமின்றிப் பிரக்ருதியால் எதும் செய்யமுடியாது. மன்னனைச் சட்டங்கள் கட்டுப்படுத்தா; அவன் சுதந்திரமானவன்.

* *

ஆத்மாவின் இந்தச் சக்திதான் நமது வாழ்விலே சித்த சுதந்திர அதிகாரமாகும். தன்னையே பந்தப்படுத்திக் கொள்ள ஆத்மா சம்மதிப்பதில்லை. கர்மத்தையும் கர்மபலனையும் ஆத்மா அனுபவிக்கின்றதல்லவா? அந்த அனுபவந்தான், கால வெளிகளாலும் சுபாவ தர்மங்களின் காரியத்தாலும் கட்டுப்படுகின்றது. புண்ணிய - பாவங்கள், பாக்கிய - துர்ப்பாக்கியங்கள், உடல்நல - நோய்கள், இன்ப - துன்பங்கள் ஆகியவற்றை யெல்லாம் அனுபவிக்க ஆத்மா சம்மதிக்கிறது; அல்லது மறுக்கிறது. ஆத்மா எந்தப் பொருள்களிலே பற்று வைத்திருக்கிறதோ அந்தப் பொருள்களை யெல்லாம் பிரக்ருதி பல மடங்காய்ப் பெருக்கி ஆத்மாவுக்குச் சமர்ப்பிக்கிறது. எந்தப் பொருள்களிலே ஆத்மா வெறுப்புக் கொள்கிறதோ, வைராக்கியம் பூணுகிறதோ அந்தப் பொருள்களை யெல்லாம், ஆத்மா விடமிருந்தும் பிரக்ருதி வாபீஸ் பெற்றுக்கொள்கிறது.

* *

கர்ம பலன்களைக் காலத்திலும் வெளியிலுமே ஆத்மா அனுபவிக்கின்ற தாதலால், கர்ம வாசனை பின்னும் கொஞ்ச காலம் தொடர்கிறது. ஒரு நீராவி எஞ்சினின் நீராவியை மூடிவிட்டாலும், எஞ்சின் மட்டில் பழைய வேகத்தால் மேலும் கொஞ்சதூரம் ஓடுகிறதல்லவா, அந்தமாதிரி தான் இதுவும். ஆனால், அது சற்று நேரத்திலே வேகம் குறைந்து, இறுதியிலே ஓய்ந்து நிற்பது நிச்சயம். காரணகாரிய நியாயத்தாலேயே, ஆத்மாவின் கர்மானுபவம் நடப்பதால், கர்மத் துறவ, தன்னிச்சையாகவோ சுதந்திரமாகவோ இயல்வதில்லை. முறையாய்க் கண்டதொரு மார்க்கத்தின் அல்லது பல மார்க்கங்களில் ஒன்றின் மூலமே, அது

இயலும். இந்த மகத்தான உண்மை இப்போது உலகத்துக்கு உதயமாகி வருகிறது. அதாவது : உலகத்தை இயக்குவது சித்தமே ; விதி யென்பது, அந்தச் சித்தம் தனக்குத்தானே பரிபூர்ணம் பெறக் கைக்கொள்ளும் கருவியே யாகும்.

* *

ஆனால், பிரக்ருதியின்மீது எஜமானத்துவம் பூண வேண்டுமானால், மனிதனது ஆத்மா, அகிலமும், அகண்டமுமான பரம புருஷனுடன் உறவுகொள்ள வேண்டும். ஜீவாத்மாவின் சித்தம் பரமாத்மாவின் சித்தத்தோடு ஒன்றி விட வேண்டும். பரமாத்மாவோடு ஒன்றுபட்டது தான் ஜீவாத்மாவும். ஆனால், தேகத்திலே, அது தனிப்பட்டதும் சம்பந்தமில்லாததும் போல் இருக்கிறது. ஏனெனில், வெவ்வேறு தேகங்களில் பொருள்களின் சுபாவம் வெவ்வேறு விதமாய்ப் பரிணமம் அடைய வேண்டும் என்பதற்காக, ஜீவாத்மாவுக்கு ஓர் சுதந்திரமளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சுதந்திரத்தை,அறிந்தோ அறியாமலோ,ஜீவாத்மா உபயோகிக்கிறது. அறியாமல் உபயோகித்தால், ஜீவாத்மா உண்மையான சுதந்திரத்தை யிழந்து விடுகிறது. ஏனென்றால், அறியாமையால் பிரக்ருதிக்கு அடிமைப்படும் மாயை அதனைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அறிந்து உபயோகித்தால், ஜீவாத்மாவின் சுதந்திரம், பரமாத்மாவின் சித்தத்திலே ஐக்கியப்பட்டுச் சரணாகதியாகி விடுகிறது.

* *

பிரக்ருதியிலே தன்னை விதிக்கு அடிமையாக்கும் மாயைக்கு ஆட்படுவதா? அல்லது பிரக்ருதியினின்றும் விடுபட்டு, பரமாத்மாவும் பரமேசுவரனுமான பிரபுவின் அகண்ட சுதந்திரத்தை அறிந்தனுபவிப்பதா? இந்த இரண்டிலொன்றைத் தேர்ந்து கொள்ள, ஜீவாத்மாவுக்கு உரிமை யளிக்கப்பட் டிருக்கிறது. பிரக்ருதியின் அடிமைத் தனத்தினின்றும் கொஞ்சங் கொஞ்சமாய் ஆத்மா விடுதலை யடைவதே மனித குலத்தின் உண்மையான முன்னேற்றமாகும். உயிரற்ற கல்லும் பாறையும், இயற்கைச் சட்டங்களின் கையில் அகப்பட்ட செயலற்ற விளையாட்டுக் கருவிகளா யிருக்கின்றன. கடவுளே, அவற்றின் எஜமானாவான். மனிதனே இந்த இரண்டு கோடிகளுக்கும் நடுவே நிற்கிறான் ; ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மேலேறிச் சென்று கொண்டிருக்கிறான்.

---

*வாழ்க்கைச் சித்திரம் :*

# துயர கீதம்

ஆர். திருஞானசம்பந்தம்

வெகு நேரம் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்திருக்க எனக்கு மனசு வரவில்லை. அந்தப் பாட்டு இன்னும் என் நெஞ்சில் ஒலித்துக்கொண்டே யிருந்தது. அடடா என்ன சோகம்! என்ன உருக்கம்!

" கோத் தோடே மல்லிகை
கோத்தே பிறந்தோமே—இப்ப
கோத்தி லொரு மல்லிகை
குதிச் சோடிப் போன
கொள்ளைத் தீ என்னாறும்?

" சேண் டோடே மல்லிகை
சேரப் பிறந் தோமே—இப்ப
சேண்டி லொரு மல்லிகை
தேறிச் சோடிப் போன
தீ வினைகள் என்னாறும்? "

" மனதை மயக்குகிற தல்லவா?" என்று நண்பன் கேட்டான்.

" ஆஹா " என்று சொன்னேன். அச்சமயம் நான் இருந்த நிலையில் மேலே வார்த்தை ஒன்றும் வரவில்லை.

" இப்போது பெரியாத்தாளுக்கு வயது ஐம்பதுக்கு மேலாகிறது. ஆனாலும் குரல் இன்னும் மங்கவில்லை. பாவம்! அழுது அழுது தான் அரைச் சிவனாய்ப் போய் விட்டாள். முன்னெல்லாம் கிராமத்துப் பெண்களெலாம் ஒரே கூட்டமாக அவளிடம் வந்து கூடிக் கொள்வார்கள் தெரியுமோ ?" என்றான் நண்பன்.

" நான் இங்கேயா இருந்து கொண்டிருந்தேன், பார்த்துக் கொண்டிருக்க? நான் பார்ப்பதெல்லாம் இன்னொருக்கால் பாட்டொலி கேட்காதா என்பதே" என்று நான் சொன்னேன்.

" இப்படி எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் ஏழேழு ஜன்மம் ஆனாலும் கேட்க முடியாது. தவிர, பெரியாத்தாளை நிர்ப்பந்தப் படுத்தினாலும் துளிக்கூடப் பாடமாட்டாள். அவளாக இஷ்டப்பட்டுப் பாடினால் உண்டு. அதுவும் பாடுகிற சமயம் நாம் இந்தத் தோப்புப் பக்கம் வந்தால், காது குளிரக் கேட்கலாம். உன்னைப் போன்ற நல்ல ரஸிகனா யிருந்தால், பரவசப் பட்டுக் கண்ணீர் சிந்தலாம்" என்று அவன் பதிலளித்தான்.

நான் சிரித்தேன்.

" உனக்கு இந்தச் சங்கதி தெரியாதே--பெரியாத்தாளுடைய ஒப்பாரியின் பூர்வ வரலாறு?" என்ற பீடிகையுடன் நண்பன் சொல்லத் தொடங்கினான் : " பெரியாத்தாள், கலியாணமாகி வந்த புதிதில், ' தான் உண்டு, தன் வீடுண்டு ' என்று இருந்தாள் ; தன்னோடொத்த இளம் பெண்களோடுகூட முகம் கொடுத்துப் பேசமாட்டாளென்றால், பார்த்துக் கொள்ளேன்! ஆனால், உனக்கு ஒரு சந்தேகம் வரலாம். முப்பது முப்பத்தைந்து வருஷத்திற்கு முந்தி நடந்ததெல்லாம் நேரில் பார்த்தாற் போல் நான் பேசுவதைக் கண்டு கதையென நினைப்பாய். அப்படி ஒதுக்கித் தள்ளி விடாதே. இதெல்லாம் என் அம்மாவிடம் கேட்டது தான்—பெரியாத்தாளுடைய கணவன் கொமரப்பனை உனக்குத் தெரியுமே? அரைநாழி ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டான் அல்லவா?"

"ஆமாம், ஏதாவது வேலை செய்து கொண்டிருந்தால் தான் அவனுக்குத் திருப்தியாக இருக்கும்" என்று நான் ஒப்பம் வைத்தேன்.

" அந்த நல்ல மனுஷ்யனுக்குத் தானப்பா அந்தக் கதி வந்தது. பாவம்! அவன் அப்படி வரம் வாங்கி வந்திருக்குப்போது, நாம் என்ன செய்வது?" என்று சொல்லிவிட்டு, நண்பன் என் முகத்தைப் பார்த்தான்.

" சரியப்பா ! நிறுத்தாமல் கொள்ளாமல், போனதை எண்ணித் துக்கப்படாமல், சீக்கிரமாகச் சொல்லி முடி " என்றேன்.

"எனக்கென்னவோ அதை நினைத்தாலே மனசு ஒருமாதிரியாகி விடுகிறது. சரி, இருக்கட்டும். பெரியாத்தாள் தன்னோடொத்த பெண்களுடன் கூடக் 'கலகல' வெனப் பேசமாட்டாள் என்று சொன்னேனல்லவா? ஆனால், அந்தச் சிநேகிதைகளெல்லாம் சேர்ந்துகொண்டு, 'ஏன் அக்கா, இந்தப் பாட்டு எப்படி இருக்கிறது? அந்தப் பாட்டு எப்படியிருக்கிறது?' என்று கேட்டு, தங்களுக்குத் தோன்றிய ஒப்பாரிப் பாட்டுகளையெல்லாம் ஒவ்வொன்றாக இவளிடம் வந்து பாடிக் காட்டுவார்கள். அவற்றைக் கேட்கப் பெரியாத்தாளுக்கு ரொம்பக் கசப்பாகவே இருக்கும். என்னவோ தாட்சண்யத்திற்காகக் கேட்டுக் கொண்டிருந்தாலும், அப்புறம் எல்லாவற்றையும் சேர்த்துத் தன் கணவனிடம் பெரிய ஒப்பாரியாக வைத்து விடுவாள்! 'ஊருக்குள் இருக்க எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நம்ம காட்டுக்குள்ளே ஒரு குடிசையாவது போட்டு விடுங்கள். அங்கே போய் ஒரு தொல்லையுமில்லாது இருப்போம்' என்றுகூட அடிக்கடி தன் கணவனைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில்தான் பெரியாத்தாளின் அண்ணன் ஊரிலிருந்து வந்தான். அவளுக்குத் தன் அண்ணன் என்றால் உயிர்; அவன் 'வாயை வயிற்றை நோகிற'தெனப் படுத்துக்கொண்டால், அன்றைக்கு முழுதும் இவள் பச்சைத் தண்ணீரும் அருந்த மாட்டாள். சகோதர வாஞ்சை என்றால் அதைத்தான் சொல்ல வேண்டும்........"

"நீ இப்படியே வளர்த்திக் கொண்டிருந்தால் நான் எழுந்து போய் விடுவேன்" என்றேன்.

"இதோ ஆச்சு. எல்லாம் முடிகிற சமயந்தான்" என்று நண்பன் சொல்லலானான்: "பெரியாத்தாள் கேட்டுக்கொண்ட படியே காட்டுக்குள் வீடும் கட்டி முடிந்தாகி விட்டது. அன்றைக்குத்தான் அவள் கணவன், அண்ணன் இருவருக்கும் 'முடிவு' வந்தது ......."

"என்ன நிஜந்தானா? இருவரும் ஒரே நாளில் எப்படிச் செத்தார்கள்? யாராவது விரோதி செய்த வேலையோ?" என்று திகைப்புடன் கேட்டேன்.

"விரோதி என்றால் யமனைத்தான் 'விரோதி' என்று சொல்ல வேண்டும். யமன்தான் 'புது வெள்ள' ரூபத்தில் வந்து அடித்துக் கொண்டு போய்விட்டானே என்று நான் நினைப்பதுண்டு...."

"அகஸ்மாத்தாக நேர்ந்து விட்டதாக்கும்?" என்றேன்.

"ஆமாம், அப்படித்தான். போங்காலத்திற்கு எல்லாம் அப்படித்தான் வரும். ஆனால் துளித் தாமதித்தால் அவன் அண்ணனாவது உயிருடன் பிழைத்திருப்பானே. பாவம்! கொடுத்து வைக்கவில்லை" என்று சப்புக் கொட்டினான். இப்படிச் சொல்லிவிட்டு மீண்டும் தொடர்ந்து, "ஆனால், அதெப்படி முடியும்? பெரியாத்தாள் அழுது அழுது ஒப்பாரியெல்லாம் பாடம் ஆக வேண்டும், அதைக் கேட்டு நீகூட எழுந்திருக்க மனமில்லாமல் உட்கார்ந்திருக்க வேண்டும் என்றெல்லாம் நடக்க வேண்டியிருக்க, நம் இஷ்டம்போல் காரியங்கள் மாறுமா?" என்றான்.

"வருத்தத்திலும் விளையாட்டா?" என்றேன்.

"நீ எதற்காக வருத்தப்பட வேண்டும்? பெரியாத்தாளின் வருத்தம் கூட நாளாக ஆகத் தணிந்து விட்டது. காலம் யார் துக்கத்தைத்தான் மாற்றாமல் இருக்கிறது? இப்போது பெரியாத்தாள் மௌனமாகி விட்டதிலிருந்தே இது தெரியவில்லையா?" என்றான்.

"சரி, அந்த மௌனம் கலைந்து துயர கீதம் கிளம்பும்போது கேட்கக் கொடுத்து வைக்க வேண்டுமே!" என்று என் மனம் குவிந்து மௌனத்தி லாழ்ந்தேன்.

---

# வாண விமானம்

ஆகாய வீதியில் வாணங்கள் சீறி எழுந்து ஓடுவதை நாம் பார்க்கிறோம். இவ்வித வாணம் ஒன்றில் ஓர் பொருளை வைத்துவிட்டால், அது விழும் இடத்தில் பொருள் போய்ச் சேரும். ஸ்டீபன் ஸ்மித் என்பவர் இவ்வித வாணங்களைக்கொண்டு காகிதங்கள், ஆகாரம், கோழிக் குஞ்சுகள், மருந்துகள் முதலியவற்றை நினைத்த இடத்திற்கு அனுப்பிக் காட்டியுள்ளார். இம்முறையை இந்தியாவில் வெள்ளத்தால் சூழப்பெற்ற இடங்களுக்கு உணவு அனுப்ப உபயோகப்படுத்தினார்.

இந்த வாணத்தை ஒன்றினுள் ஒன்றாக அடைத்து ஒன்று ஓடி அயர்ந்தவுடன் மற்றும் ஒன்று வெடித்து ஓடும்படி செய்தால், இம்முறையிலேயே பொருள்களையும் தபால்களையும் வெகு தூரத்துக்கு அனுப்பிவரத் தக்க கருவிகள் செய்யலாம். இவ்வித முறையில் கூபா என்னும் நாட்டில் தபால்களை அனுப்பி வருகின்றனர்.




(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## இரண்டாம் அங்கம்

### ஐந்தாங் காட்சி (தொடர்ச்சி)

**சிவம்**

யானும் செல்கிறேன் அன்னை யுடனே !

[அழுதுகொண்டே எழுந்திருக்கிறார்]

**சுந்தரி**

படுக்கையி லேயே படும்பே சாமல்

[படுக்கையில் தள்ளி]

ஏனழு கின்றீர் ? எதற்கழு கின்றீர் ?

**சிவம்**

அம்மா சென்றாள்... !

**சுந்தரி**

அதனால் என்ன ?

தாய்க்குப் பிறகு தாரம்... அறிவீர் !

**சிவம்**

இறந்து போனால் என்ன:உ செய்வேன் ?
ஊர்ப்பழி வருமே !

**சுந்தரி**

ஒன்றும் வராது.

ஐரோப் பாவில், அடுசமர்க் களத்தில்,
கடல்வெடி யாலும், தரைவெடி யாலும்,
விண்வெடி யாலும் வீழ்பவர் கோடி !
இதற்கெலாம் சர்ச்சிலும் இட்லரும் அழுவரோ ?
வாய்க்கொழுப் பெடுத்த வறட்டுக் கிழவி
போனால் இதற்குப் புரண்டழு வாரோ ?
அநித்தியம் உடலெனும் அறிவெலாம் எங்கே ?
சென்றது செல்க ; நின்றதைக் காண்போம் !
உமக்கே உடலம் ஒருநிலை யில்லை.
பொன்னு கையிலே பெண்ணைத் தாரும் !

**சிவம்**

நடத்தை கெட்ட நாத்திகப் பதரோ
மங்களத் திற்கு மணாள னாவான் ?

**சுந்தரி**

பின்னே எவனிப் பேயை மணப்பான் ?

**சிவம்**

எத்தனை யோபேர் ; இதோபார் ஜாதகம்!

**சுந்தரி**

சாற்றும் உமது ஜாதகப் புரட்டை !

**சிவம்**

இந்த ஜாதகம் செந்தமிழ் வேலன்.

**சுந்தரி**

காதுக் கினிய கற்பனைப் புளுகன் !

**சிவம்**

தேச பக்த சிகாமணி கந்தன்.

**சுந்தரி**

காந்தி, கதரெனக் காலம் போக்குவான் !

**சிவம்**

நல்ல குணவான் நமச்சி வாயம்.

**சுந்தரி**

மானைக் கொண்டு யானைக் களிப்பரோ !

**சிவம்**

தஞ்சை மிட்டா தாமோ தரனார்.

**சுந்தரி**

முட்டை மூளை; மூஞ்சி உமைப்போல் !

**சிவம்**

கல்வி மிக்க கனக சபாபதி.

**சுந்தரி**

கற்றுக் கற்றுக் காய்ந்த சுள்ளி !

**சிவம்**

அறிவிற் சிறந்தவன், ஆத்தும நாதன்.

**சுந்தரி**

வசிகர மற்ற வறட்டுப் பேர்வழி !

**சிவம்**

மதிப்புறு செல்வ மாதவன் இவனும்.

**சுந்தரி**

உதட்டைத் திறவான் ஊமண மூஞ்சி !

**சிவம்**

பேர்புகழ் பெற்ற பெரிய சாமி !

**சுந்தரி**

பேசி னலும் பிசுவாய்ச் செல்வான்.

**சிவம்**

எம். ஏ., பி. எல். ஏகாம்ப ரேசன்.

**சுந்தரி**

பூபூ ! வேண்டாம் புத்தகப் பூச்சி !

**சிவம்**

பக்த சிகாமணி பரமா னந்தன்.

**சுந்தரி**

ஆண்டி மடத்திற் கனுப்பும் அவனை !

**சிவம்**

எல்லா ருக்கும் இழிவு சொல்கிருய்
முத்துப் போன்ற முருகனர் திருமகன்
அன்பும் அறிவும் ஆற்றலும் அழகும்
ஒழுக்கமும் பொலியும் உயர்குணச் சோதி.
பத்தும் பொருந்திய உத்தமன் இவனே !

**சுந்தரி**

சாம்ப லாண்டி, சாதுக் கள்ளன்,
பொதுநலப் போலி, சைவப் புரட்டன்,
செந்தமிழ்ப் பித்தன், தேவாரப் பூச்சி,
இரவில் இறந்தால் எண்ணெய்க் கில்லை ;
பகலில் இறந்தால் பாடைக் கில்லை.
பூக்கா ரன்மகன், பொன்னுவின் பகைவன்,
பிச்சை வாங்கிப் பி. ஏ. படித்தவன்.
என்மாப் பிள்ளை இவனே...ஹஹ !

[மங்களம் வீராவேசமாய் வந்து]

**மங்களம்**

நானும் பார்க்கிறேன், தானெனும் செருக்கால்,
நல்லவர் களைநீ நகையா டுகின்ருய் !
அகக்கண் ணுடியில் அவரவர் அழகைப்
பார்த்தால் இந்த வார்த்தை வராது.
பதியைக் கொன்ற பாவிக ளுக்கு,
மானங் கெட்ட மடமக ளுக்கு,
கண்ணை யிழந்த காமிக ளுக்கு,
பணமே பெரிதெனும் குணமிலி களுக்கு,
சுயேச்சை யென்று சுற்றித் திரியும்
வம்பிக ளுக்கு, வஞ்சமி லாரை
அரட்டி மிரட்டி அடித்து வதைக்கும்
பேய்க ளுக்குப் பேச்சு வேரு ?

**சுந்தரி**

போடுவேன் மண்டையில் போ பேசாமல் !
ஹாலில் இருப்பதுன் அகமுடை யானடீ,
கழிசடை மூளி கணவனுக் கடங்கு !

**மங்களம்**

சைத்தான் சாத்திரம் சாற்றுது பாரீர் !

**சிவம்**

ஐயோ குடும்பம்...ஹரஹர சிவனே !

**மங்களம்**

அப்பா ! இவளுடை அந்தரங் கத்தைப்
பன்முறை பார்த்தும் பயப்படு கின்ருய் ;
பாம்புக் கின்னும் பால்வார்க் கின்ருய் ;
பூனை யென்று புலியை நம்பினை !
அவரையும் இவனையும் அறிந்த பின்னும்,
ஏனே வுன்மனம் இவள்வழி பற்றும் ?
இப்படி வந்ததே அப்பா வுனக்கு !
ஐயோ கடவுளே ஆறுத லிழந்தேன் !

[அடுத்த அறையில் பொன்னு]

கடவுளுக் கழும் காட்டு மிராண்டிகள் !

**சிவம்**

போதும் போதும் பொதி சுமந்தது.
அரனே ! என்னை ஆண்டுகொள் உடனே !
தலை சுழலுதே...தாகம், தாகம் !

**சுந்தரி**

கொண்டு வாடீ கூஜா வெந்நீர் !

**மங்களம்**

அன்பாற் கொணர்வேன் ; அழுகை நிறுத்து !

[செல்கிருள்]

**சுந்தரி**

பாரும் பேச்சைப் பதங்கெடு மூளி !
எடுத்து வளர்த்தேன், என்னை மீறினள்.
பெண்ணென நினைத்தேன், பேயாய் முடிந்தாள் !
ஆண்டி வனத்தில் அறுதலி யுடனே
சேர்ந்திவள் கெட்டாள்...சிறுமை நமக்கே !

[வெந்நீருடன் மங்களம் வருகிருள்]

**மங்களம்**

[வெந்நீர் கொடுத்து]

அறுதலி யில்லை; அன்பு வள்ளி
காத லித்துக் கண்ணலை மணந்தாள்.

**சுந்தரி**

சோதி உன்னைத் தொட்டுக் கெடுத்தான்,

**மங்களம்**

பொன்னு வுன்னைப்...புகழ்ந்து கெடுத்தான்.

[பொன்னு ஆத்திரமாக வந்து]

**பொன்னு**

யாது சொன்ன யடி?டாம் நான்ஸென்ஸ்!
மீறிப் பேசினல் விலக்கி வைப்பேன்.

[போகிறன்]

**மங்களம்**

அப்பா வணக்கம் ஆயிரந் தடவை!
இந்தவேங் கையிடம் என்னைத் தராதே!

**சிவம்**

பித்தமோ... சித்தப் பிழையோ? யாதோ?
வெந்நீர் தனையும் வெறுக்குதே நாக்கு.
நானினிப் பிழையேன்; நாடி தளர்ந்தது.
ஆசிவ! ஷண்முகா!

**சுந்தரி**

ஐயோ உடனே
கன்னியைப் பொன்னு கையிலே தாரும்!

**சிவம்**

திருத்தமு மில்லை...பொருத்தமு மில்லையே!

**சுந்தரி**

பொருத்த மிருப்பதைப் பொருந்த விளக்குவேன்.

[வருதல் அண்ணுவி]

சுபம், சுபம்! வாரும் சோதிட மணியே!

**அண்ணுவி**

அண்ணு சாஸ்திரி அறியாத துண்டோ?
காசியி லிருந்தே காஞ்சியை அறிவேன்;
பார்த்த வுடனே பலனைச் சொல்வேன்.

**சுந்தரி**

அண்ணு சாத்திரி அபூர்வச் சோதிடர்.
இரண்டுஜா தகமும் இவர்கைத் தாரும்

[சாதகங்களை வாங்கித் தருகிறள்]

**அண்ணுவி**

மேஷத் திற்கும் ரிஷபத் திற்கும்,
அசுவ னிக்கும் அவிட்டத் திற்கும்,
நல்ல பொருத்தம்...நாலிற் செவ்வாய்,
பத்தில் கேது, பனிரண்டில் ராகு,
ஒத்துப் போகும். ஒன்பதில் சுக்கிரன்
சகட யோக ஜாதகம் இதுவே.
சுபகா ரியத்தைச் சுருக்கென நடத்தும்!

**சுந்தரி**

பொருந்திய வுண்மை தெரிந்ததா...கேளும்!
ஆண்டிஜா தகத்தின் அழகையும் கேளும்!

[ஜோதி ஜாதகம் தந்து, கண்சாடை செய்தல்]

**அண்ணுவி**

ஜோதியா! ஜாதகம் சுத்த மோசம்.
ஐந்திற் சனியன், சந்ததி யிராது.
படித்த முட்டாள், பாத சக்கரன்.
மனையைக் கருதான். மகா ஞானிபோல்
வேடம் போடுவான். விடுங்கள் இவனை!

**சுந்தரி**

நன்ருய்ச் சொன்னீர்...நல்ல சோதிடர்!
பாரும், உமைத்தான்! பளிச்சென முடிவு
கூறும்! நாளையே கொட்டுவோம் மேளம்!

**சிவம்**

என்மனச் சாட்சி பொன்னுவை வெறுக்குதே!

**சுந்தரி**

எதற்கெடுத் தாலும் எதிரே பேசுவீர்;
நல்லது சொன்னல் அல்லது செய்வீர்.
முதுமையால் உமக்கு மூளை கழன்றது.
ஆண்டியைக் கொள்வீர், அரசனை யிகழ்வீர்;
வறுமையை விலைக்கு வாங்கி வளர்ப்பீர்;
செல்வத் துரையைச் சீயென வெறுப்பீர்.
சாத்திரம் பார்ப்பீர், சாமிக் கழுவீர்,
கோத்திரம் பார்ப்பீர், குடித்தனம் பாரீர்.
சொல்லிச் சொல்லித் தொண்டை வறண்டது.
அத்தை பிள்ளை...சொத்தும் உள்ளவன்,
நாலுந் தெரிந்தவன், நன்ருய்ப் படித்தவன்,
உலகத் துடனே பழகத் தெரிந்தவன்.
வானம் பார்க்கும் ஞானப் பித்தரே
பொருமை கொண்டு பொன்னுவை இகழ்வர்!
மகளைக் கொடுத்து மாப்பிள்ளையுடன்
வீட்டிலே வைத்துக் கொள்ள விரும்பினேன்,
கட்டிக் கொண்ட கடனுக் காவது
நயத்தைச் சொன்னல் நடத்தலா காதா?
நடுத்தினி என்னைப் பார்த்தலா காதா?
உண்மையே நம்பிய உத்தமி வார்த்தை
கேட்ட லாகாதா!

[தளுக்குப் பண்ணுகிறள்]

**சிவம்**

கேட்டேன்; சம்மதம்!

[மங்களம் ஆவேசமாக வந்து]

சம்மத மில்லை! என்மனம் வேறு.
மருந்து மயக்கால் மதியை யிழந்தாய்!
அப்பா நீயும் அன்பைத் துறந்தாய்
நடத்தையு மில்லை...ஞானமு மில்லை,
அடக்கமு மில்லை, அகங்காரப் பிண்டம்!
இவனுக் கென்னை ஈவதை நிறுத்து!
கிளியைப் பூனை கேட்டாற் கொடுப்பரோ?
ஜோதி இன்றேற் சும்மா இருப்பேன்;
கன்னியாய் வாழ்வேன் கல்வி வளர்ப்பேன்;
யோகம் புரிவேன் உலகிற் குதவுவேன்;
ஏழை எளியவர், என்னினப் பெண்டிர்
இன்புறுந் தொண்டுகள் இனிதே செய்வேன்;
வலுமணத் தளையில் வாழ மாட்டேன்.

**சுந்தரி**

அடிவா யாடீ...அடங்கி வாடீ!

**பொன்னு**

[ஆத்திரமாக வந்து]

அடிகொ டுத்தால் அடங்கிப் போவாள்.
போடீ உள்ளே!

இரண்டாம் அங்கம் முற்றிற்று

134127 600 008

# எண்ணச் சுடர்கள்

(மொழிபெயர்ப்பு : வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.)

### கடவுளின் நிழல்

என் அருகே உளது கடவுளின் காலடி. இதுகாறும் என்னை வருத்திய இன்னல், கடவுளின் கை நிழல்; அதுவே அன்பு நிழல், என்னை அன்புடன் தழுவிய நிழல்.

—பிரான்சிஸ் தாம்சன்.

* *

### விதி

விதிக்கோடு வலிது, வலிது; அதை மதியால் மாய்க்க முடியாது, கண்ணீர்க்கடலால் கரைக்க முடியாது.

—ஓமர்க்காயம்.

* *

### இலக்கிய நுட்பம்

மனதைத் திறந்து, பண்படுத்தி, அறிவை அளந்து அருந்தி ஜீரணித்து, தன் திறமையை உறுதி செய்து வழிநிறுவி, ஆராய்ச்சிக் கூர்மையை வளர்த்து, நுட்ப நடையைச் சிருஷ்டித்து அமைதியாய் அனுபவித்தலே இலக்கிய நோக்கம்.

—கார்டினல் நியூமன்.

* *

### வாழும் வகை

வாழ்க்கை உண்மை, வாழ்க்கை உறுதி; சுடலை அதன் முடிவல்ல. மண்ணிற் பிறந்து மண்ணில் மடிவது உடலேயன்றி, ஆத்மா வல்ல. சுகதுக்கமும் நமது குறிக்கோளல்ல. இன்றையப் பணியை இன்றே செய்து செயலை வளர்க்க வேண்டும்; நாளை யென்பது நஷ்டமே. காலம் பறக்கின்றது; நமது இதயத்தில் மரணக் குரல் ஒலிக்கின்றது. நமது வாழ்க்கைப் போரில், ஊமை ஜந்துவாய் ஓடித் திரியாமல், வீரச்செயல் புரிய வேண்டும். பழமையை மறந்து, எதிர்காலத்தை எதிர்த்து, உன் முழு இதயத்தோடும் தெய்வத்தை யுணர்ந்து, இன்று செய்வதை இன்றே செய்வாயாக! பெரியோர்கள் தம் வரலாற்றில் நமது வாழ்வை உயர்த்திப் புனிதப்படுத்த வழி கோலிக் காட்டி யிருக்கின்றனர். மரணத்துக்குப்பின், நமது செயல்கள் காலமணலில் ஆழப் பொறிக்கப்பட்டு, எதிர்கால மனித வாழ்வுக்குத் துணையாகும். ஆகவே, எவ்விதிக்கும் துணிந்து உழைத்து உயர்வோமாக!

—கவி லாங்பெலோ.

* *

### நம்பிக்கை முனையில்

நம்பிக்கை முனையிலே நமது வாழ்க்கை ஊசலாடுகின்றது; வறுமைச் சுழலிலும், நம்பிக்கையே நமக்கு நல்ல துணையாகின்றது. ஷேக்ஸ்பியரைப்போல் எழுதவோ, ஹனிபாலைப் போல் போர்முனையில் பட்டாளத்தைச் செலுத்தவோ, மார்க்கஸ் அரீலியஸைப்போல் அறநெறியில் பொலிந்து விளங்கவோ எனக்குத் திறமை யில்லாவிடினும், ஒவ்வோர் சமயத்தில் இம்மூவரின் விசேஷ அம்சங்களையும் நான் ஒருங்கே பெற்றுத் திகழ முடியும் என்ற நம்பிக்கை என் மனத்தில் உரமாய் வளர்கின்றது.

—ஆர். எல். ஸ்டீவன்சன்.

* *

### கவிஞன் கனவு

கரையற்ற கடலில், ஆண்டவன் செவிசாய்க்கும் புன்சிரிப்பில், என் கவி சர்வ சுதந்திரத்துடன் கீத அலையாக மாறிச் சொற்கட்டை உடைத்தெறிந்து களிநடம் பயில்கின்றது.

—தாகூரின் கீதாஞ்சலி.

* *

### மானிட வாழ்வு

நான் காலத்தின் சூது; பல நூற்றாண்டுகளின் சோதனைக்குறி; இரு அழகுச் சிகரங்களின் நடுவே அகப்பட்டதோர் குருடன் போன்றவன். நான் ஒரு திடீர்க் குரல்; துக்க சம்பவம்; இரு அறிவுச்சுனைகளின் மத்தியில் உறங்கும் அறிவிலி; முடிவற்ற விதியின் வீதியில், இருள் சூழ்ந்த சூழ்ச்சியிலே ஓர் பொடியாய்த் தூசியாய்ப் பிறந்திருக்கின்றேன்; ஆழ்கடல் இரண்டின் இடையிலே பசிப்பிணியின் அடையாளமாய்ப் பரதவிக்கின்றேன்!

—ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா.

* *

### சர்வகலாசாலை

இலக்கிய வளர்ச்சிக்கு, இலக்கியச்சுனைகள் அறிவு மலையினின்று எங்கும் பரவி வியாபிக்குமாறு, ஞான அருவிகளை வாய்க்கால் வெட்டித் திருப்பவேண்டும்; இதைச் செய்வதுதான் சர்வகலாசாலை.

—மார்லி.

* *

### காதலின் கேள்வி

அருவிகள் ஆற்றில் கலக்கின்றன; ஆறுகள் கடலில் கலக்கின்றன; வானில் வீசும் மென்காற்று இன்ப உணர்ச்சியுடன் கலக்கின்றது. உலகத்தில் ஒன்றும் தனிமையில் வருந்தவில்லை. தெய்வ நியதியால் சகல வஸ்துக்களுமே ஏதோ ஓர் உணர்ச்சியில் சந்தித்துக் கலக்கின்றன. நானும் ஏன் உன்னுடன் ஐக்கியமடைய லாகாது?

—ஷெல்லி.

* *

### இரவின் சாந்தி

இரவுத் தேவியின் அலையாடை பளிங்கு மண்டபம் தாண்டி ஓசையுடன் வரக் கேட்டேன். அவளுடைய கரும்போர்வையில் ஆகாச ஜோதி மின்னல் குஞ்சம் கட்டி அலங்கரித் திருக்கின்றது. அவள்தன் அருட்கரம் என்னை அணைந்துகொள்ளக் கண்டேன். அதுவே இருண்ட அழகிய காதலின் மின்னுருவம். இரவிலே, ஒலி அலைத் திரளின் சேர்க்கையில், சுகதுக்கம் புரண்டோட, வாழ்க்கையின் மணியோசை செவியுற உணர்ந்தேன். அவ்வோசையில், பழைய கவிகளின் உள்ளப் பிரளயத்தையும் அறிந்தேன். நள்ளிருளின் மோன அமைதியில், எனது ஆத்மா சாந்தியின் அமிழ்தத்தைப் பருகியது. ஓ சுத்த அமைதியின் திருவுருவான இருளே! கவலைக் குரலை இன்பமாய் மாற்றும் சாந்த சக்தியே! சாந்த சொரூபியே! வருக, வருக!

—கவி லாங்பெலோ.











'பிக்சர் போஸ்ட்' என்ற அமெரிக்கப் பத்திரிகையினின்றும் எடுத்தவை.

# ஐந்து முட்டைகள்

(குளவி)

(1) **சர்ச்சில் :**

தாக்கவந்த பொருள்களையே
    தத்தித் தள்ளிடும் முட்டையிது ;
பார்க்க ஒளியா முட்டையுமாம் ;
    பார்க்கும் நாஜியின் கைகளுக்கே
ஏக்கமுட்டி எதிர்த்திடுமோம் ;
    ஏங்குதிதனுல் ஹிட்லர் முட்டை.

(2) **ஹிட்லர் :**

நெடுநாள் காட்சி முட்டையிது ;
    நிரந்தர ஜம்ப முட்டையிது ;
கடினப் பேரம் இல்லையிதில்,
    கணத்தில் வாக்குப் பெற்றிடலாம் ;
வடுவில் உத்திரவாதமதை
    வழங்க மட்டில் முடியாது.

(3) **கோயரிங் :**

வானில் தூரப் பறந்திடவே
    வகையாம் புகைக் கூண்டேறியது.
வீணில் பறக்கப் புகைக்கூண்டும்
    விசையாய் முயன்று பார்த்ததையா ;
ஆனுல் முட்டையின் பட்டச்சுமை
    அதனை அமுக்கி விட்டதுகாண் !

(4) **ஸ்டாலின் :**

நகைத்திளிக்கு திந்த முட்டை ;
    நமக்குத் தோன்றுது பூதமென.
பகைத்த பின்லண்ட் நாட்டினிலே
    பட்டது பகராப் பாடதையே.
அதைத்த உலகம் கண்டதுவே
    அதனுடை லட்சணம் இதானென.

(5) **ரூஸ்வெல்ட் :**

"உலகம் குலுங்குது ஹா ! ஹா ! ஹா !
    உடனே என்னைத் தேர்ந்திடுவாய்.
கலகம் அடங்க வோர் செயலைக்
    கடிதினில் செய்திடுவேன்" என்றே
பலவும் சொல்லிப் பதவி பெற்றுப்
    படுத்துறங்கப் பார்க்கு முட்டை !

*குழந்தைகள் அறிவு:*

# தாய்நாடு: ராஜாங்கம்

(லியோ டால்ஸ்டாய்)

காவ்ரிலா: ஒரு வீட்டு வேலையாள்; ருஷிய சர்க்காரால் கட்டாயமாக ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருப்பவன்.

மிஷா: அந்த வேலையாளுடைய எஜமானின் மகன்.

காவ்ரிலா: நல்லது, மிஷங்கா! என் அருமைச் சின்ன எஜமானே! போய் வருகிறேன். கடவுள் மறுபடியும் ஒருநாள் நாம் சந்திக்கும்படி செய்வாரோ, என்னவோ! நான் அறியேன்.

மிஷா: நீ அசலூர் போகிருயா?

காவ்ரிலா: ஆமாம். மறுபடியும் யுத்தம் வந்து விட்டது. நான் ரிஸர்வ் படையைச் சேர்ந்தவன்.

மிஷா: யாரோடு யுத்தம்? யாருக்கும் யாருக்கும் சண்டை?

காவ்ரிலா: அதைக் கடவுளே அறிவார். எனக்கு அதெல்லாம் தெரியாது. நான் சண்டையைப்பற்றிப் பத்திரிகைகளில் படித்தேன். அதொன்றும் எனக்குப் புரியவில்லை. நாம் யாருக்கோ சலுகை காட்டியதில் ஆஸ்டிரிகா தேசத்தாருக்கு மனவருத்தமாம். அவர்கள் பெயர் என்னவோவாம்.........

மிஷா: ஆனல், நீ ஏன் போகிருய்?

காவ்ரிலா: நான் எப்படிப் போகாம விருக்க முடியும்? ஜாருக்காகவும் தாய் நாட்டுக்காகவும் மதத்துக் காகவுமே யன்ருே சண்டை நடக்கிறது?

மிஷா: ஆனல், போவதிலே உனக்கு இஷ்டமில்லையே?

காவ்ரிலா: ஆசை மனைவியையும் குழந்தை குட்டிகளையும் விட்டுப் போக, யாருக்குத் தான் இஷ்டமிருக்கும்? இந்த மாதிரி நல்ல இடத்தை விட்டுச் செல்ல, நான் ஏன் விரும்புவேன்?

மிஷா: பின்னே, நீ ஏன் போகிருய்? 'எனக்குப் போக இஷ்டமில்லை; நான் போக மாட்டேன்' என்று சொல்லி விடேன். அவர்கள் உன்னை என்ன செய்து விடுவார்கள்?

காவ்ரிலா: (நகைக்கிருன்) அவர்கள் என்ன செய்வார்களா! பலாத்காரமாய் என்னை இழுத்துக்கொண்டு போவார்கள்.

மிஷா: ஆனல், உன்னை யார் இழுப்பார்கள்?

காவ்ரிலா: என் மாதிரி மனிதர்களே என்னை இழுப்பார்கள்; அவர்களுக்கு வந்த கட்டளைப்படி இழுப்பார்கள்.

மிஷா: அவர்களும் உன் மாதிரியே மனிதர்களா யிருந்தால், அவர்கள் ஏன் உன்னை இழுக்கச் சம்மதிப்பார்கள்?

காவ்ரிலா: அது படை யதிகாரிகளின் கட்டளை. படை யதிகாரிகள் கட்டளை யிட்டால், ஒருவனை இழுத்துக்கொண்டு போகிருர்கள்.

மிஷா: அவர்களும் மறுத்தால்?

காவ்ரிலா: அவர்களால் மறுக்க முடியாது?

மிஷா: ஏன் முடியாது?

காவ்ரிலா: ஏனு? சட்டமில்லையா.........அதுதான் சட்டம்.

மிஷா: அதென்ன சட்டம்?

காவ்ரிலா: நீ என்னவோ விநோதமா யெல்லாம் பேசுகிருய்! நான் உன்னேடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டேன். பானம் தயாரிக்கப் பானையை அடுப்பிலே போட நாழிகையாகி விட்டது. போகிறேன்.

# காதல்

(ஆர். பி. மகாதேவ சிங்)

குறுகுறுத்த உன்விழியின்
கூரறிவாள் வீச்சினிலே
அறுபட்டுத் துடிக்குதடீ!
அங்கமெலாம் ஆரணங்கே!

எண்ணத்தில் நுழைந்துவிட்டாய்!
எரியுதடீ யுள்ளமெலாம்.
மண்ணெண்ணெய் டாங்கியிலே
மூண்டவொரு பெருநெருப்பாய்!

நீதியிது யில்லையடீ!
நெஞ்சமிக நோகுதடீ!
காதல்விளக் கெண்ணெய்மிகக்
கலக்குதடீ என்வயிற்றை!

# பறித்த பூக்கள்

## தெய்வத்தை அழைக்க வழி

மனிதன், தெய்வாம்சம் பெற்று தெய்வத்தின் கருவியாய், தெய்விகத்தோடு உலகில் வாழ, என்ன வழி? இதை ஸ்ரீ அரவிந்த கோஷின் வாக்கினின்றும் எடுத்து, 'யோகத்தின் அடிப்படை' என்ற மொழி பெயர்ப்புக் கட்டுரையில், சுவாமி சுத்தானந்த பாரதியார், 'ஹிந்துஸ்தா'னில் அழகாய் வரைந்திருக்கிறார்:—

தெய்வ சக்தியைக் கிரகித்து, உன் மூலம் அது பாஹ்ய ஜீவன வஸ்துக்களிற் செயல்புரிய இந்த மூன்று தன்மைகள் அவசியமாகும்:—

(1) **நிம்மதி, சமதை**—என்ன வந்தாலும் கலங்காமை; மனத்தை அமைதி, உறுதியாகக் காத்தல்; அதில் சக்தி களியாட்டத்தைச் சாட்சியாகக் காணல்; தானே பிரசாந்தமா யிருத்தல்.

(2) **முழு நம்பிக்கை**—வருவது நன்மைக்கே என்னும் நம்பிக்கை; அத்துடன், 'நம்மை நாம் உண்மையான ஆயுதமாக்கிக் கொள்ள முடிந்தால், நமது சங்கற்பத்தைத் தெய்வ வொளியே நடத்தும்; நாம் செய்யத் தக்க கருமத்தையே செய்வோம்' என்னும் நம்பிக்கை.

(3) **கிராஹ்யம்**: தெய்வ சக்தியைக் கிரகிக்கும் சக்தி. அதன் சாந்நித்யத்தையும் அதில் அன்னையின் சாந்நித்யத்தையும் உணர்தல்; நமது காட்சி, சங்கற்பம், செய்கை அனைத்தையும் வழி நடத்தி, அது காரியஞ் செய்யவிடல்; இந்தச்சக்தியும் சாந்நித்தியமும் உணர்ந்தால், இந்த இளக்கம் கிரியாசேதனத்தின் வழக்கமானல், முடிவான பலன் நிச்சயம். ஆனல் தெய்வ சக்திக்கே இளக்கமா யிருக்கவேண்டும்; வேறெந்த அன்னிய வஸ்துவையும் அதனுடன் கலக்கக்கூடாது.

## படிப்பும் பரீட்சையும்

வாலிபர்கள் படிக்கவேண்டிய படிப்பு வேறே; கொடுக்கவேண்டிய பரிட்சை வேறே. நிஜத்தை நையாண்டிபோல் கூறும் உலகப் பிரசித்திபெற்ற பெர்னர்ட்ஷா, மேற்கண்ட உண்மையை, லண்டனில் ஆறும் பாரம் படிக்கும் மாணவர்களுக்கு ரேடியோ மூலம் உபதேசித்திருக்கிறர். 'பாரததேவி' யிலுள்ள அந்தப் பிரசங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:—

எதிர்காலத்தில், உங்கள் உத்யோகத்தில் ஒழுங்காக வேலை செய்வதற்காகத்தான் நீங்கள் பரிட்சைகளில் தேற வேண்டும். உங்களைப் பரிட்சை செய்பவர்கள் வயதானவர்கள். அவர்களுடைய கேள்வி இந்த நாளுக்கு ஒவ்வாததாக விருக்கும். அதற்குத்தான் பழங் கதைகளைப் படிக்கவேண்டும்.

உங்களுக்கு இருபது வயது. உங்களைப் பரிட்சிப்பவர்களுக்கு வயது ஐம்பது. நீங்கள் பதில் சொல்லும்போது முப்பது ஆண்டுகளுக்குமுன் எதைச் சொல்லித் தந்தார்களோ, அதைச் சொல்லவேண்டுமே தவிர, இன்று கற்றதைச் சொல்லலாகாது.

நீங்கள் பரிட்சையில் தேறிவிட்டால், பின்பு உங்கள் கல்வியில் குறைபாடுகளிருப்பதை அறிவீர்கள். சாப்பிடுவது, குடிப்பது, மூச்சு விடுவது இவைபற்றியெல்லாம் உங்களுக்கு அவர்கள் சொல்லித்தா வில்லை. உங்கள் பலத்தைக் காப்பாற்றிக் கொள்வதென்றல், தேகப் பயிற்சி செய்வதுதான் என்று நினைப்பீர்கள். அந்தத் தேகப்பயிற்சி உங்கள் ஆயுளை இருபது வருஷகாலமாவது குறைத்துவிடும். நான் 60 வருஷ காலமாக என் வேலையைக்கொண்டே சம்பாதித்து வருகிறேன். அதனல் நீங்கள் என்னைக் கல்வி கற்றவனுகக் கருதலாம். என்னை எவை கல்வி கற்றவனுகச் செய்தனவோ, அவை பற்றி ஒருபோதும் நான் பள்ளிக்கூடத்தில் கேள்விப்பட்டதே யில்லை; அவற்றை எனது வாத்தியார்கள் அறிந்து மிருக்க மாட்டார்கள்.

## புதிய எமன்

இன்று புதிய புராணிகர் ஒருவர், தமது நகரப் படலத்தில் வீதி வர்ணனை செய்வதென்றல், முதன் முதலிலே மோட்டார்க்கார்களைத் தானே ஞாபகப்படுத்திக் கொள்வார்? அவர் மோட்டார்க்கார்களை எப்படி வர்ணிப்பார் என்று காட்டும் ஒரு பாடலும், அதன் வியாக்கியானமும் 'லோகோபகாரி' யில் வெளியாகி யிருக்கின்றன:—

"காதினுள் ஜவ்வை
இடியெனக் கிழித்துக்
காற்றெனக்
கூற்றென முடுகி,
எதிதென்றெண்ணிப்
பார்ப்பவர் தங்கள்
இரு செவி
முகம்எனும் இவற்றில்
ஒதுதற் கரிதாம்
வண்ணமாய்ப் புழுதி
உழக்கெனும்
படியதாய் நிறைத்து,
வேதனைப் படுத்தி
மீச்செலும் மோட்டார்
ரதம் பல
நெருங்கும் அவ்வீதி"

காதிற்குள், ஒலியைக் கேட்பதற்கு உதவியாக, 'ஜவ்வு' என்னும் உறுப்பு, பிரம்மத்தினுலோ, பிரம்மதேவனுலோ, இயற்கைத் தேவியாலோ படைக்கப்பட்டிருக்கிறது. இப்படைப்பு அநாவசியமென்றும், பரப்பிரம்மம் முழுமூடமென்றும், நமது மோட்டார்ப் பிரபுக்கள் கருதுகிருர்கள். எனவே, அவர்கள் தங்கள் மோட்டார் - யமனை எவி, நாய் நரிகள், பேய் பிசாசுகளைப்போல் குலைக்கவும், ஊளையிடவும், கதறவும், அலறவும், இடிபோல் இடிக்கவும் செய்து, நாம் உய்ந்துபோகும் பொருட்டு நமது காதிலுள்ள 'ஜவ்' வைக் கருணை கூர்ந்து கிழித்துவிடுகிருர்கள். இதனல் நாம் அவர்களுடைய மோட்டார் - முழக்கம் கேட்டு விலகவேண்டிய சிரமமில்லாமலே, இறைவனது இணையடி நீழலை அடைந்து இன்புறுதல் கூடுமன்றே?

மோட்டார் வருகிறதென்று முதல் முதல் பழைய நாட்டுப்புறத்தாருக்குத் தெரிந்த தில்லை. அவர்களுக்குக் காதும் ஜவ்வும் தேவைக் கதிகமாய்த் தொழில் செய்ததால், திடீரென்று இடிமுழக்கம் போல ஒரு முழக்கம் கேட்டது. உடனே காற்றைப்போல முடுகிவரும் வேகம் தெரிந்தது. இவ்வேகம் அதிவினேதமான—அதி பயங்கரமான—கனைப்புக்களோடு வந்ததால், 'இது காற்ரு? அல்லது கூற்ரு?' என்னும் சந்தேகம் உண்டாயிற்று.

'இது என்ன?' என்று கண்ணெடுத்துப் பார்க்கும்போதே, காருண்ய மோட்டார்க் கார், பாதசாரியின் கண்களிலும் காதுகளிலும் மூக்கிலும் மூஞ்சியிலும், வாயெடுத்து வருணிக்க முடியாதபடி, புழுதியை அடைத்து விடுகிறது. மோட்டார்ப் புழுதி யென்றல் சாமான்யமா? இரு செவிகளிலும் ஒரு

முகத்திலும் இருந்து மாத்திரம் திரட்டி எடுக்கும் புழுதி, குறைந்த அளவில் உழக்கு இருக்குமே!

## பிறப்பும் சாவும் கடனிலே!

துரதிர்ஷ்ட இந்தியாவின் மகத்தான துயரங்களில் ஒன்று, விவசாயிகளின் கடன் சுமையாகும். இது பற்றி ஸ்ரீ. ரஜனிகாந்த தாஸ் 'மாடர்ன் ரிவ்யூ'வில் எழுதிய ஒரு கட்டுரையின் மொழிபெயர்ப்பு, 'குமர'னில் வெளியாகி யிருக்கிறது. கட்டுரையாளர் கூறுகிறார்:—

பர்மா உள்பட பிரிட்டிஷ் இந்தியாவில் 1929-ஆம் வருஷ விவசாயிகள் கடனுக்கை மொத்தம் 900 கோடி ரூபா யிருந்ததாக மத்திய பாங்கி விசாரணைக் கமிட்டியார் கணக்கிட் டிருக்கிறார்கள். மாகாணவாரியான புள்ளி விவரம் வருமாறு:—

| மாகாணம் | விவசாயிகளின் கடன் | |
|---|---|---|
| அஸ்ஸாம் | 22 | கோடி |
| வங்காளம் | 100 | ,, |
| பீஹார், ஒரிஸ்ஸா | 155 | ,, |
| பம்பாய் | 61 | ,, |
| பர்மா | 60 | ,, |
| மத்திய மாகாணம் | 36 | ,, |
| மத்தியப் பிரதேசம் | 18 | ,, |
| சென்னை | 150 | ,, |
| பஞ்சாப் | 135 | ,, |
| ஐக்கிய மாகாணம் | 124 | ,, |
| மொத்தம் | 861 | ,, |

இன்னும் கடன் சுமை சிறிது சிறிதாக வளர்ந்தே வருகிறது. பஞ்சாபில் 1921-இல் 90 கோடியாயிருந்த கிராமக் கடன் 1929-இல் 135 கோடியாக அதிகரித்தது. அதுமுதல் விவசாயத்தில் பெரிய வீழ்ச்சி யேற்பட்டு, தற்சமயம் கடன் சுமை 50 சதம் முதல் 100 சதம் வரை வளர்ந்திருக்கிறது. ரிசர்வ் பாங்கியின் விவசாயக் கடன் இலாக்கா அறிக்கைப்படி 1937-இல் தற்போதுள்ள கடன் சுமையின் அளவு 1,800 கோடி ரூபாய்க்கு வருமென்று தெரிகிறது. விவசாயிகளில் சுமார் ஐந்தில் நான்கு பாகத்தினர் கடனில் ஆழ்ந்திருக்கின்றனர்.

வட்டி விகிதம் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டாலும், தேசம் முழுமையும் மிக உயர்ந்த விகிதமாகவே யிருந்து வருகிறது. வங்காளத்தில் 10 சதம் முதல் 37½ சதம் வரை; பம்பாயில் 12 சதம் முதல் 25 சதம் வரை; அஸ்ஸாமில் 12 சதம் முதல் 70 சதம் வரை; சென்னையில் 12 சதம் முதல் 25 சதம் வரை; பீஹார், ஒரிஸ்ஸாவில் 25 சதம் முதல் 50 சதம் வரை வட்டி விகிதங்கள் இருந்து வருகின்றன. இன்னும் பல கடன்களுக்கு வட்டிக்கு வட்டி கணக்கிடப்படுகிறது. ஒரு முறை கடன்பட்டு விட்டால், விவசாயி அதை விட்டு மீளுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுவது துர்லபம்; அவன் தன் கடனையே பிதிரார்ஜிதமாகத் தன் மகனுக்கு விட்டு வைத்துச் செல்கின்றான். எனவே, பல விவசாயிகள் கடனிலேயே பிறந்து கடனிலேயே தம் வாழ்க்கையை முடிக்கின்றனர்.

## பார்லிமெண்டில் இந்தியா

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே இந்தியாவைப்பற்றி விவாதம் வந்தால், அங்கே சில விநோதங்கள் நடைபெறும். பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்கு இந்தியாவைப்பற்றி வெகு அசட்டை. அதனால்தான் அந்த விநோதங்கள் நடக்கின்றன. 'ஹிந்து' இதைப்பற்றி ஒரு நாள் தலையங்கத்தில் மிகவும் ரஸமாக வர்ணித் திருக்கிறது:—

பார்லிமெண்டிலே இந்திய விவாதம் நடக்கப் போகிறது என்றவுடனே, அங்கத்தினரெல்லாம் ஒருவர் ஒருவராய்க் கம்பி நீட்டி விடுவார்கள். விவாதமோ காலம்போன கடைசியில் அன்றைய அலுவல் எல்லாம் முடிந்த இறுதி நேரத்தில் தான் ஆரம்பிக்கும். தொழிற் கட்சிக் குள்ளேயே பின்னல் உட்கார்ந்திருக்கும் அதி தீவிர வாதிகளான இரண்டொரு அங்கத்தினர்கள் எழுந்து அந்தரங்க சுத்தியாய்ப் பேசுவார்கள்; இந்திய விஷயத்தில் பார்லிமெண்டைச் சூழ்ந்திருக்கும் அறியாமைச் சுவரைத் தொளைத்து, தப்பபிப்பிராயத்தைத் தகர்த் தெறிய முயல்வார்கள்; பொருத்தமான உண்மைகளை எடுத்துச் சொல்லி, கோவையான நியாயங்களைத் தொகுத்துக் கூறி வாதிப்பார்கள். ஆனல், தொழிற் கட்சியின் பெரிய தலைவர்களோ வெகு அலட்சியமாய் இருப்பார்கள்; அல்லது, 'தொல்லை செய்கிறார்களே நமது இந்த ஆசாமிகள்! உறங்கும் நாய்களைச் சும்மாக்கிடக்க விடாமல் தட்டியெழுப்பி விடுவார்கள்போலிருக்கிறதே' என்று, இவர்களை வெறித்துக்கூடப் பார்ப்பார்கள். பிற்போக்காளரான ஒன்றிரண்டு டோரிகளும், லார்டு க்ரூ என்பவரைப் போன்ற சில கிழ லிபரல்களும், இந்தியாவை எப்படி ஆளவேண்டும் என்பது பற்றித் தங்கள் விசித்திரக் கருத்துக்களை உபதேசிப்பார்கள். பெரும்பாலும் உதவி இந்தியா மந்திரி எழுந்து, அவசா அவசரமாக விவாதத்துக்குப் பதில் கூறி முடிப்பார். அவருடைய பதில், ஒன்றிலும் பட்டுக்கொள்ளாததோர் சூத்திரமாயிருக்கும். 'இந்தியாவைப்பற்றி இங்கிலாந்து கவலைப் படவேண்டியதில்லை' யென்று உறுதி கூறி, படுக்கையில் கிடத்திய குழந்தையைத் தட்டிக் கொடுப்பது போல, பார்லிமெண்டை அவர் தட்டிக்கொடுத்து விடுவார்!

## பிரசங்க ஏமாற்றம்

பிரசங்கிகளைப் பற்றிக் கேலி செய்து, 'கொனஷ்டை' என்பவர், 'கலைமக'ளில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார். நமது அரசியல் வாதிகள் பலர் பிரசங்கமாரி பொழிகையில், வெறும் 'புகை'யை விட்டு நம்மை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை, நண்பர் 'கொனஷ்டை' பின்வருமாறு சித்தரிக்கிறார்:—

சில பிரசங்கிகள் சமயம் வாய்த்த போதெல்லாம் முன்னிருந்த இந்தியாவின் மகிமையைக் குறித்துப் புகழ்கிறார்கள். நம்மை அரசாளுகிற ஆங்கிலேயர் உள்பட ஐரோப்பிய ஜனங்கள் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்பு காட்டு மனிதராகத் திரிந்து கொண்டிருந்த காலத்திலேயே இந்தியர்கள் அடைந்திருந்த கல்வி, ஞானம், நாகரிகம் முதலியவற்றை வர்ணிக்கிறார்கள். இவ்விதம் பேசிவிட்டு, நம்முடைய கரகோஷத்தைப் பெற்றுக்கொண்டு போய் விடுகிறார்கள். அந்த இரைச்சலில் நம்முடைய கவனம் சரியான விஷயத்தினின்றும் சிதறிவிடுகிறது.

'நாம் ஏன்பின் வாங்கிவிட்டோம்? நம்மிடத்தில் என்ன தோஷங்கள் இருக்கின்றன? அவற்றை எப்படி நீக்குவது?' இவற்றை யல்லவா பிரசங்கிகள் எடுத்துச் சொல்லி நம்மைக் கவனிக்கச் செய்யவேண்டும்? இவ்விதம் எவராவது செய்கிறாரா? அதற்குப் பதிலாக அவர்கள் என்ன செய்கிறார்கள்? நம்முடைய ஜுரத்திற்குச் சிகிச்சை செய்ய வந்த வைத்தியன் வியாதியை நிர்ணயிக்காமல் மருந்தையும் கொடுக்காமல், "உங்களுடைய முன்னோர்கள் எல்லாம் நோயற்றவர்கள்" என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறமாதிரி, நம்முடைய முன்னோர்களை ஸ்துதிசெய்து விட்டுப் போய்விடுகிறார்கள். நாமும் திருப்தியடைந்து விடுகிறோம்!

# எதிரியைக் காட்டும் ஒலிக்கருவி

டாக்டர் ல. காமேசுவர சர்மா,

எம்.ஏ., என்.டி., கலிபோர்னியா.

போர் நடக்கும்போது, எதிரி நீர்மூழ்கி சமீபத்தில் வருவதைக் கண்டு பிடிக்க, ஆச்சர்யமான ஒலியறி கருவி ஒன்றிருப்பதைச் சென்ற மாதம் 'சக்தி'யில் விளக்கி யிருந்தோம். நீரலன்றி நிலத்திலும் வானிலும், அவ்வற்புதக் கருவி உபயோகிக்கப் படும், மற்றும் சில விந்தைகள் இங்கே விவரிக்கப்படுகின்றன.

எதிரி வரும் திசையைக் கண்டுபிடிக்க, ஒரே கருவியை உபயோகிப்பதற்குப் பதிலாக, இரண்டு கருவிகளை உபயோகிக்கும் ஓர் யுக்தி உண்டு.

## தரையில் வரும் ஒலி

1-வது படத்தைப் பாருங்கள். ஒரு மரப்பெட்டியினுள் இரண்டு 'மைக்கா'த் தகடுகள் இருக்கின்றன. அவற்றுக்கிடையில் பாதரஸம் இருக்கிறது. தகடுகளுக்கு வெளிப்புறம் காற்றுக்கொண்ட காலியிடம் இருக்கிறது. இக் காலியிடங்கள், குழாய்கள் மூலம் காதுகளுக்கு இணைக்கப்பட் டிருக்கின்றன. ஏதாவது ஒலி அதிர்ச்சிகள் பூமிமூலம் வந்தால், அவை கருவியை அதிர்ச்சியடையச் செய்கின்றன. பாதரஸம் அதிகக் கனமாக இருப்பதினுல், அது இவ்வதிர்ச்சிகளால் பாதிக்கப்படுவ தில்லை. மரப்பெட்டி மாத்திரம் பாதிக்கப்படுகிறது. இதனுல் பாதரஸத்திற்கு மேலும் கீழும் உள்ள காற்றிடங்கள், குறுகி விரிகின்றன. இந்தச் சத்தம் காதை அடைந்து, நமக்கு எதிரியின் வருகையைத் தெரிவிக்கிறது. இவ்வாருக, நிலைமைக்குத் தக்கவாறு எதிரியின் நடமாட்டத்தை 20, 50 அல்லது 100 அடி தூரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அதாவது, இதன் மூலம் தூரத்தைமட்டும் தான் தெரிந்துகொள்ள வியலும். ஆனுல், எதிரியிருக்கும் திசையையும் அறிய விரும்பினுல் இரண்டு கருவிகளைச் சேர்த்து உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு கருவியிலும் உள்ள இரண்டு குழாய்களில் ஒன்றைக் கார்க்கினுல் அடைத்துவிட்டு, இன்னொன்றை மாத்திரம் காதுக் குழாயுடன் இணைக்கவேண்டும். இதேமாதிரி இன்னொரு கருவியையும் மற்ருெரு காதுக்கு இணைக்க வேண்டும். இவ்விரண்டு கருவிகளையும் தரையில் எப்படி வைத்தால் இரண்டு காதுகளிலும் சத்தம் சமமாகக் கேட்கிறதென்று கவனிக்கவேண்டும். அப்படிச் சமமாகச் சத்தம் கேட்கும்போது இரு கருவிகளும் சேர்ந்து எத்திசையில் இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். இரு கருவிகளும் இருக்கு மிடங்களுக்கு நடுவே ஓர் நேர்க்கோடு இழுங்கள். அதற்குச் செங்குத்தான திசையிலிருந்து




படம் 1

தான் சத்தம்வருகிறதென்று தீர்மானிக்க வேண்டும். இம்மாதிரி இன்னொரு இடத்திலிருந்து இக்கருவிகளைக் கொண்டு எதிரியின் திசையை அறிந்து மற்ருேர் செங்குத்துக் கோட்டைக் கண்டு பிடியுங்கள். இந்த இரண்டு செங்குத்துக் கோடுகளும் ஒன்றையொன்று எங்கே சந்திக்கின்றனவோ, அந்த இடந்தான் எதிரியிருக்குமிடம் என்று நிச்சயமாகிவிடும்.

இந்த ஆச்சர்யமான கருவிகள் எப்படியெல்லாம் உபயோகமாகின்றன என்பதற்கு, சென்ற மகாயுத்த சம்பவம் ஒன்றை உதாரணமாகச் சொல்லலாம். ஒரு சமயம், எதிரியின் முள் கம்பியை பிரிட்டிஷ் படைகள் வெடி வைத்துத் தகர்த்தெறிய வேண்டிய அவசியம் நேர்ந்தது. அதற்காக, பூமிக்குள்ளாகவே சுரங்கம் தோண்டி, எதிரியின் முள் கம்பி வேலிக்கு அடியிலே பிரிட்டிஷ் படையினர் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே போய் வேலை செய்துகொண்டிருக்கும்போதே, பக்கத்திலே எதிரி நடமாடிக் கொண்டிருப்பது அடிக்கடி தெரிந்துகொண் டிருந்தது. வேலை முடியும் சமயத்தில் எதிரி, சுமார் 6 அடி தூரத்தில் இருப்பது இக்கருவிகள் மூலம் தெரியவந்தது. அவர்கள் சிரிப்பதும் பேசுவதும் கூடத் தெளிவாகக் கேட்டது. இதன்மேல் எதிரிகள் எந்தப் பக்கத்தில் நமது படையைத் தொளைத்துக் கொண்டு போவார்கள் என்பதை அறிந்து கொள்ளவேண்டியது அத்தியாவசிய மாயிற்று. பிரிட்டிஷ் படைகள் தங்களின் பற்பல ஒலி அறி கருவிகளைக் கொண்டும் அங்கங்கே எதிரி நடமாட்டத்தை அறிந்து எழுதிவைத்த குறிப்புகளிலிருந்து ஒன்று தெரிந்தது. அதாவது, எதிரிகள் நமக்கு மிகச் சமீபத்தி லிருந்தாலும் பிரிட்டிஷ் படை அணிவகுப்பை எந்த விடத்திலும் தொளைக்க அவர்கள் உத்தேசிக்கவில்லையென்றும் தங்களுக்குச் சமதூரத்திலே நேரே வேறெங்கேயோ போய்க்கொண்டிருக்கிருர்கள் என்றும் தங்களுக்கு ஆபத்து வாராதென்றும் பிரிட்டிஷ் படையினர் தீர்மானித்தார்கள். ஆதலால், தங்கள் வேலையைத் தடங்கலில்லாமல் செய்துமுடித்து வெற்றி பெற்ருர்கள்.

## பீரங்கித் திசை நிர்ணயம்

இனி, ஒலியைக் கொண்டு யுத்தத்தில் எதிரியின் பீரங்கிகள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்கும் விதத்தை ஆராய்வோம். முதன்முதலில் ஒலியை இவ்வழியில் பிரஞ்சுக்காரர்கள் உபயோகித்தார்கள். பின் ஒரு வருஷம் கழித்து, பிரிட்டிஷாரும் உபயோகிக்கத் தொடங்கினுர்கள்.

பீரங்கி இருக்கும் இடத்தை, குண்டு வெடிப்பதனு லுண்டாகும் சத்தத்திலிருந்தாவது அல்லது பீரங்கி உண்டு பண்ணும்சத்தத்திலிருந்தாவது தெரிந்து கொள்ளலாம். இவ்விரண்டு முறைகளில் இரண்டாவது முறையே அதிகப் பலன் தரக்கூடியதாகும். மேலும், அது எளிதாகவும் இருக்கிறது. இம்முறையை இங்கே விளக்குவோம்.

அடுத்த பக்கத்தில் காணப்படும் 2-வது படத்தில் காட்டியபடி ஜி என்னுமிடத்தில் பீரங்கி இருக்கிறது. ஏ, பி, ஸி என்ற மூன்று இடங்களில் மைக்ரபோன்களை வைத்துக் கொண்டு பீரங்கியின் சத்தம் வந்து சேரும் நேரங்களைத் தனித்தனியே குறித்துக் கொள்ளுகிருர்கள். பிறகு, கணிதத்தின் மூலம், பீரங்கி இருக்கும் சரியான இடத்தை நிச்சயமாய் நிர்ணயித்துவிட முடியும்.

ஜீ என்னுமிடத்தில் பீரங்கியிருப்பது, முதலில் நமக்குத் தெரியாது. ஏ, பி, ஸி மூன்றிடங்களுக்கும் வரும் சத்தத்தின் நேரத்தைக் கணக்கிட்ட பிறகுதான், படத்தி லிருக்கிறவாறு, பீரங்கி யிருக்கு மிடத்தை நாம் நிர்ணயிக்கிறோம். அது எவ்வாறெனில், ஏ என்னுமிடத்தில் முதலிலே சத்தம் வந்துவிடும். பி என்னுமிடத்துக்கு, சற்றுப் பொறுத்துத்தான் வரும். இந்த நேர வித்தியாசத்தில் சத்தம் எவ்வளவு தூரம் பிரயாணம் செய்யும் என்பதைக் கணக்கிட வேண்டும். அந்த தூரத்தை ஆரமாக வைத்து, பி என்னுமிடத்தி லிருந்து ஒரு வட்டம் போடுங்கள். பிறகு, ஏ, ஸி இந்த இரு இடங்களுக்கும் சத்தம் வரும் நேர வித்தியாசத்தைக் கொண்டு, ஸி என்னுமிடத்திலிருந்து இதேமாதிரி இன்னோர் வட்டம் போடுங்கள். பின்னர், இந்த இரு வட்டங்களையும் ஏ என்னுமிடத்தையும் தொடும்படி எதிர்ப்புறமிருந்து மற்றோர் வட்டம் கிழியுங்கள். அந்த எதிர்ப்புற வட்டத்தின் நடுமையமான இடந்தான் எதிரியின் பீரங்கி யிருக்கு மிடமாகும். க்ஷேத்திர கணிதத்தின் மூலம் இந்தக் கணக்கை வெகு சுலபமாய்ப் போட்டு விடலாம்.

நடைமுறையில் மூன்றுக்குமேல் ஆறு வரையிலும் மைக்ரபோன்களை நேசப் படையினர் உபயோகித்தார்கள். இவ்வளவு மைக்ரபோன்களையும் சேர்த்து ஒரு மத்திய ஸ்தலத்தோடு இணைத்திருந்தார்கள். இந்த மத்தியஸ்தலம் பூமியின் அடியில் இருந்தது. இங்கே எவ்வளவு மைக்ரபோன்கள் இருந்தனவோ அவ்வளவு எண்ணிக்கை, ஒலியைப் பதிவு செய்யும் கருவிகளும் இருந்தன. நேரங்களைச் சரியாகக் கவனிப்பதற்காக அதிநுட்பமான இயந்திரங்களும் அமைத்திருந்தார்கள். மைக்ரபோன் இருக்கும் மின்சார மண்டலத்தில், ஒளிதரக்கூடிய விளக்கை வைத்து, ஒளிக்கதிரை ஒரு சினிமா போட்டோ பிலிமில் விழும்படி செய்தார்கள். இந்த பிலிம் சுற்றிக்கொண்டே யிருந்தது. மைக்ரபோனில் சத்தம் விழாதிருக்கும் வரையில் இந்த பிலிமில் நேர்க்கோடு இருந்து கொண்டிருக்கும். மைக்ரபோனில் கலக்கம் ஏற்பட்ட கணமே பிலிமில் கோடு உடைபட்டு நெளிந்துவிடும். ஒரே பிலிமிலேயே சகல மைக்ரபோன்கள் அனுப்பும் கோடுகளும் விழும்படி செய்யலாம். அந்த பிலிம்தான் மையஸ்தலத்தில் இருக்கும். அதில் விழும் கோடுகள் உடைபட்டிருக்கும் இடங்களைக் கொண்டு, பீரங்கியின் சத்தம் பல மைக்ரபோன்களை வந்தடைந்த வெவ்வேறு நேரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

இந்த ஆறு மைக்ரபோன்களும் நமது படைகளுக்குப் பின்னே சுமார் 4,000



படம் 2

கஜம் இப்பாலே தள்ளி வைக்கப்பட்டன. அவை சுமார் 9,000 கஜதூரத்தைக் கவர்ந்தன. மத்தியஸ்தலம் சுமார் 6,000 கஜம் நமது படைக்குப் பின்னே இருந்தது. நமது படையின் முன்புறம் இருபுறத்திலும் இரண்டு காவலர் இருந்தனர். எதிரியின் பீரங்கி வெடித்தவுடன், அந்தக் காவலரில் ஒருவன், ஒரு பித்தானை அமுக்குவான். அதன் மின்சார சக்தியால், உடனே மத்திய ஸ்தலத்திலுள்ள எல்லா இயந்திரங்களும் வேலை செய்ய ஆரம்பிக்கும். சில நிமிஷங்களுக்குள் மத்தியஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் எதிரியிருக்கு மிடத்தைக் கணக்கிட்டு, டெலிபோன் மூலம், நமது பீரங்கிப் படையினருக்கு அதை அறிவிப்பார்கள். இம்முறையில் எற்படும் பிழை 10,000 கஜத்திற்கு, சுமார் 50 கஜத்துக்குமேல் போகாது. பீரங்கிகளை நோக்கிக் காற்று வீசிக்கொண் டிருந்தால் மட்டும், பிசகு இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாகும்.

## எதிரி விமான வருகை

தற்காலம் சண்டை தரையிலும் நீரிலும் மாத்திரம் அல்லாமல் ஆகாயத்திலும் பரவிவிட்டது. ஆகாய விமானங்களினால் உண்டாகும் ஆபத்து நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றது. ஆகவே எதிரியின் விமானம் இருக்கும் இடத்தை அறிவது மற்றெல்லாவற்றிலும் மிக்க அவசியமாகிறது. ஆகாய விமானம் எந்தத் திக்கில் வருகிறதென்பதைக் கண்டு கொள்ளவும் வழிகள் இருக்கின்றன. ஒளி எப்படி அலைகளாக வருகின்றதோ அதேமாதிரி ஒலியும் அலைகள் உருவிலேயே பரவுகிறது என்று உங்களுக்குத் தெரியும். ஒளி அலைகளைப் போலவே வளைந்த நிலைக்கண்ணாடியில் ஒலி அலைகளையும் குவியச் செய்யமுடியும். இம்மாதிரி இரண்டு வளைந்த நிலைக்கண்ணாடிக் கருவிகளை உபயோகிப்பதன் மூலம் எதிரி விமானத்தின் ஒலி வரும் திசையை அறிந்து கொள்ளலாம்.

ஆனால், இம்முறையில் அநேகம் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகாய விமானத்தினால் உண்டாகும் சத்தத்தின் சுருதி தாழ்ந்திருப்பதனால், ஒலி அலைகளின் நீளம் பெரிதாக இருக்கின்றது, இதனால் நிலைக்கண்ணாடி மிகப் பெரிதாக இருக்கவேண்டி யிருக்கிறது. என்ன யுக்தி செய்தாலும் ஒரு சிரமம் இருக்கிறது. அதாவது, ஆகாய விமானம் எப்பொழுதும் அதிவேகமாகப் பறந்துகொண்டே யிருக்கிறது. இதனால், விமானத்தின் ஒலி நம்மை வந்து அடைவதற்குமுன் விமானமே அதிக தூரம் நகர்ந்து விடுகிறது. விமானம் போய்க் கொண்டிருக்கும் பாதையை வேண்டுமானால் கண்டுபிடிக்கலாம். ஆனால் இன்ன சமயத்தில் இன்ன இடத்தில் விமானம் இருக்கிறதென்று நாம் குறிப்பாகச் சொல்ல முடியாது.

இந்த விவரங்களையெல்லாம் பார்க்கும்போது யுத்த அதிகாரிகள் எவ்வளவு தூரம் விஞ்ஞானிகளின் உதவியை நாட வேண்டியிருக்கிறதென்பது தெளிவாகும். ஒலி சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த லார்டு ராலே போன்ற பேரறிஞர்களின் வேலை வீண்போகவில்லை. ஆனால், தங்களுடைய ஆராய்ச்சிகளின் பயனை இந்தக் கருவிகளெல்லாம் தோன்றப் போகின்றன வென்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் கேவலம் உண்மையை அறியவேண்டும் என்ற ஒரு ஆர்வத்துடனேயே உழைத்து வந்தார்கள்.

தற்காலத்தில் யுத்த முறைகளே நுட்பமான பெருங்கலைகளாக விளங்கிக் கொண்டு வருகின்றன. யுத்த இலாக்காவில் இனி விஞ்ஞானப் பேரறிஞர்களே முதன்மை ஸ்தானம் பெறவுங்கூடும். ஆனால் இது மனித வர்க்கத்தின் நன்மைக்கு எதுவாகும் என்று சொல்லமுடியாது. விஞ்ஞானிகள் யுத்த வேலைகளில் மனதைச் செலுத்துவதைக் காட்டிலும், மனிதனது மனதைப் பக்குவப்படுத்தி, உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஈடுபடுவார்களானால், அதிக நன்மை உண்டாகும். ஆனால், அவ்வாறு செய்வார்களோ? செய்வதுதான், உலகம் இன்றுள்ள நிலையில் அவர்களுக்குச் சாத்தியமோ?

---

மிளகு இந்தியாவில் அதிகம். 2,000 வருஷங்களாக ஐரோப்பியர்கள் இதை உணவுடன் கலந்து உண்டுவருகிறார்கள். ஐரோப்பாவில் 1,500 வருஷங்களுக்கு முன் ஜயம்பெற்ற அரசன் ஒருவன் தோற்ற அரசனை நஷ்ட ஈடாக 1000 வீசை மிளகு கேட்டானாம்!

# பாரத சக்தி மஹாகாவியம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

## எ. தியானக் காட்சிப் படலம்

தேவி சக்தியின் அருளினாற் சிந்தையி லுதித்து,
நாவி லோடிய நற்கவி வெள்ளம்போற் செழித்த
காவி லோடிய வோடையிற் கனிநகை புரிந்தான்
பூவி லாருயிர் வளர்த்திடும் புண்ணியக் கதிரோன்!

தேவி பராசக்தியின் அருள் பெற்ற புலவர் சிந்தையில் உதித்து அவர் நாவில் வெள்ளம்போலத் தவழ்ந்தோடும் நல்ல கவிகள்போலே, மலரும் கனியும் செழித்த சத்தியராஜனது சோலையில், தெள்ளிய அருவி ஓடியது. ஒளி, வெப்பம், நிறம், மழை எல்லாந் தந்து, உலகில் ஆருயிர்களை வளர்த்திடும் புண்ணியனாகிய கதிரவன் எழுந்து அந்த ஓடையில் கனிந்த சாந்த நகை வீசினான். கதி ரொளி நீர்த்தடத்திற் பொன்னகை வீசியது. ௧௪௭

ஞால சுந்தரி நாண்மல ரணியுடன் பொலிந்தாள்.
கோல மாதவன் குழலெனக் கொஞ்சிட வசந்தம்,
காலை பூத்தது, கமலங்கள் பூத்தன, மன்னன்
வேலை பூத்தது, விழித்தது வினையுடல் வாழ்வே!

உலகமாகிய அழகி, பலவகையான புதிய மலர்களை அணிந்து விளங்கினாள். மந்தமாருதம் அழகிய கண்ணனது குழலோசைபோலப் பாட்டொலியாற் கொஞ்சுகிறது. காலை பளிச்சென மலர்ந்தது. தாமரைகள் பூத்தன. வினையினால் ஆகிய உடல்வாழ்க்கை விழித்தெழுந்தது. உலகமாந்தர் தத்தமக்குரிய வினைகளைச் செய்யத் தொடங்கினர். அவர்களுக்கு முன்பே மன்னன் எழுந்து தன் அனுஷ்டானங்களைச் செய்தான். அவனது வேலையும் தொடங்கியது. ௧௪௮

புனித மாதவர் உளமெனத் தெளிபுன லாடி,
இனிய புத்தணி யணிந்துநல் லியற்கையின் வனப்பில்,
பனிம லர்குலுங் கும்ஒரு பசுங்குடி லமர்ந்தே,
நினைவொ டுங்கியன் பிறைவனை நிருபனுந் தொழுதான்.

பரிசுத்தமான தவசிகளின் உள்ளம் அருளறிவால் தெளிந்திருக்கும். அதுபோலத் தெளிந்த நீரோடையில் அரசன் காலை நீராடி, தனது நிலைக்கேற்ற இனிய புதிய ஆடையாபரணங்களைப் பூண்டு, கண்ணுக்கும் கருத்திற்கும் நன்மையைச் செய்யும் இயற்கை வனப்பில், பனி தோய்ந்த புதிய மலர்கள் குலுங்கும் ஒரு பச்சைக்குடிலில் அமர்ந்தான்; வேறு நினைப்புகளை ஒருக்கி உட்குவிந்தான்; அன்புமயமான கடவுளை வணங்கினான். ௧௪௯

வான் சுடரில் வளர்ந்திடுஞ் சோதிநீ!
தேன் மலரிற் சிரிக்கும் பொலிவுநீ!
நானென் றுள்ள நடு, மழை மின்னென
மோன மாக நடஞ்செயு மூர்த்தியே!

எனது உள்ள நடுவே, கார்மேகத்தில் பளிச்சிட்டாடும் மின்னலைப்போலே, மோனமாக எழுந்து 'நான் நான்' என்று ஞானநடம் புரியும் சுத்த மூர்த்தியே! ஆகாசத்தில் எண்ணில்லா நட்சத்திரங்களாகவும் சூரிய சந்திரராகவும் வளர்ந்திடும் சோதி நீயே; உலகில் தேன்மலர்களில் புன்னகை புரியும் அழகும் திருவும் நீயே! ௧௫௦

மலை யருவி வளர்வதுன் மாமறை
கலை யருவி வளர்வதுன் கற்பனை
அலை யிலாடுவ துன்பர மானந்தம்
தலைவனே, யருள் பாலிக்குந் தந்தையே!

என்னுயிர்த் தலைவனே, அன்பருக்கு அருள்புரியும் உலகத் தந்தையே! மலையினின்று கம்பீரமாகப் பொழிந்துவரும் அருவியில் உனது வேதகானம் வளர்வதைக் காண்கின்றேன். மனித ஆயுள் இப்படி அருவிபோல ஓடுகிறது. "இறைவன் பெயரை முறையிட்டு ஓடுக!" என்று அருவி உபதேசிக்கிறது. அருவிபோல உலகிற் பெருகி முன்னேறும் அறுபத்து நான்கு கலைகளையும் ஆராய்ந்தேன். அவற்றில் வளரும் அறிவும் இன்பமும் எல்லாம் உனது சொரூபத்தின் கற்பனையேயாகும். கலைகள் தமது கற்பனையான அழகால் உன்னைத் தேடி முயலுகின்றன. நீ கலாதீதனா யிருக்கிறாய். கடல் பொங்கி வீசும் அலைகளி லெல்லாம் உனது பரமானந்த நடனத்தையே காண்கின்றேன். உலக வாழ்க்கையும், தோற்றமும் இந்த அலைகள் போன்றே எழும், விழும். அலைகளுக்கு ஆதாரமானது கடல். வாழ்வுக்கெல்லாம் ஆதாரம் அருளிறைவன். "அவனையே கலந்து வாழ்க!" என்று அலைகள் பாடியாடுகின்றன. ௧௫௧

உலகை மெல்லாம் ஒருகுல மாகவே
கலக மின்றி யுனைக்கலந் தோங்குக !
நலிக தீவினை ; நல்லன யாவுமே
பொலிக வுன்னருள் போற்றி இறைவனே !

இறைவனே! நீயே உலகமாக விரிந்தாய். இந்த உலக மெல்லாம் தந்தையாகிய உன்னடியில் ஒரு குலமாகச் சேர்ந்து, கலகமில்லாமல் உன்னை இரண்டறக் கலந்து, உன் இன்பத்தில் ஓங்கி வளரட்டும்! உலகைக் கெடுத்து உயிர்வாழ்வை நாக மாக்கும் பொய், கொலை, களவு, கள், சூது, விபசாரம், கொடுங் கோல் ஆகிய தீயசெயல்கள் நலிந்தொழிக! வாய்மை, தூய்மை அன்பு, அருள், இரக்கம், பொதுநலம், அறிவுவளர்ச்சி, தானம், தவம் ஆகிய நல்ல செயல்கள் மேன்மேலும் ஓங்கிப் பொலி யட்டும்! இவ்வுலகம் நலம்பெற உனது தண்ணருளைப் போற்றி செய்கிறேன். கருஉ

இன்னவா றிறைஞ் சும்புவி வேந்தனை,
மன்னர சிவ ணங்கிட மங்கலப்
புன்னகை பொலி யப்புனி தத்திரு
மின்ன மின்ன மிளிர்ந்து நெருங்கினள்.

இவ்வாறு தியானித்துத்தொழும் பார்வேந்தனாகிய தன் கணவனை வணங்கி ஆசிபெற, அவன் அரசி இந்திரை அருகே வந்தாள். அவள் முகத்தில் மங்களப் புன்னகை பொலிந்தது. கற்பும் வாய்மையும் சேர்ந்த அவளது பரிசுத்தமான அழகில் ஒரு தெய்வ தேஜஸ் மின்னி மின்னி ஒளிர்ந்தது. அவள் நடப்பதே கற்பின் சுடரொளி மின்னி வருவது போலிருந்தது. கருரு

மயில்க ளாடின மாங்கனி வாயிளங்
குயில்கள் பாடின கொஞ்சின கிள்ளைகள்.
பயிலும் பூவைகள் பாய்ந்தன ; பச்சிளம்
வெயி லுகந்து விலங்கினந் துள்ளின.

அச்சமயம் மாங்கனிகளை உண்டு அக்கனிபோற் சிவந்த வாயுடைய குயில்கள் பாடின. மயில்கள் தோகைவிரித்தாடின. கிளிகள் அரசியின் பெயரைச்சொல்லிக் கொஞ்சிப்பேசின. பூவைகள் இங்குமங்கும் பாய்ந்து விளையாடின. இளம்வெயிலை நுகர்ந்து மான் பசு முதலிய பல விலங்கினங்கள் துள்ளிக் குதித்தன. கருசா

அன்னக் கூட்டம் அணிநடை கற்றுற,
வன்ன மானினம் வாட்கண் வியந்திட,
பொன்வண் டூதிடப் பூமுகங் கண்டதும்,
மென்கை தொட்டதும் பன்மலர் மேவிட,

கொடிக ளோடிக் குளிர்பசும் பந்தலில்,
அடிவைத் துற்றனள் அன்புடன் இந்திரை.
“படியை யாளும் பராசக்தி யன்னையின்
வடிவமே” யென மன்னவன் போற்றினன்.

அன்னக் கூட்டங்கள் அவளிடம் அலங்காரநடை கற்றுப் பின்னே வருகின்றன. அழகான மான்களின் கூட்டம் வாள் போன்ற அவள் விழிகளைக்கண்டு வியந்து நிற்கின்றன. அவளது தாமரை முகத்தைக்கண்டு, ‘ஆ இதிலல்லவா தேன் பருக வேண்டும்!’ என்று பொன்வண்டுகள் களிப்புடன் ரீங்காரம் செய்கின்றன. அவளது மெல்லிய கை தொட்டதும் பல நிறப்பூக்கள் ‘இப்படிப்பட்ட கைமலரிலன்றோ சேரவேண்டும்!’ என்று தாமே அவள் கையில் மேவுகின்றன. இவ்வாறு சிறப்புற நடந்து, கொடிகள் அடர்ந்து குளிர்ச்சியாயிருக்கும் அந்தப் பசும்பந்தலில் அன்னை இந்திரை அன்புடன் அடிவைத்து உள்ளே புகுந்தாள். சத்தியன் தியானத்திலிருந்து எழுந்து “உலகை ஆளும் பராசக்தியின் வடிவான அரசியே, வருக!” என்று வரவேற்று இந்திரையை உபசரித்தான். கருகு, கருகூ

அருமை யாகும் உயிரதி னின்னிய
வுரிமை நாதனை யொண்சுடர்க் கற்பினள்,
ஒருமை யன்புடன் போற்றி யுளமிசை,
திருவ டியில் அருச்சனை செய்தனள்.

எல்லாருக்கும் அருமையான பொருள் தத்தம் உயிரே யாம். அதனினும், ஒரு பெண்ணுக்கு இனியபொருள் தனக்குரிய கணவனேயாவான். இந்திரை சுடரோங்கும் கற்பரசி. அவள் ஏகாக்கிரமான மனத்துடன் வைராக்கியமாக அன்புடன் கணவனைத் தன் உள்ளக்கோயிலில் போற்றினாள். உள்ளே தொழுவதுமட்டுமின்றி, புறத்தே கணவனது பதமலரிலும் மலர்தூவிப் பணிந்தாள்; கணவனே கடவுளென நம்பினாள். கருள

காதல் வாழ்விற் கடவுளைக் கண்டிடும்,
ஓத ரிய வுயர்தவ யோகத்தின்
சாதகர் சிவ சக்தியென் றோரணை
மீத மர்ந்துதி யானத்தின் மேவினர்.

சத்தியனும் இந்திரையும் ஆகமதாந்திர ரகசியங்களை அறிந்தவர்; தாராயோகம் என்னும் அரிய சக்திசாதனத்தைக் கற்றவர்; தமது காதல் வாழ்வில் கடவுளைக் காண்பவர்; அதாவது, ஆண் சிவம், பெண்சக்தி என்று மதித்தொழுகும் பண்பினர். சந்தந் வேண்டியபோதே கூடி மற்ற நாட்களில் இருவரும் தியானயோக சாதனங்களே செய்வர். இன்று அவர்கள் சிவனும் சக்தியும்போன்று ஒரே பீடத்தில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தனர். ௧௫௮

பத்தி யோங்கிடப் பார்வையுள் ளோங்கிடச்
சித்த மூன்றித் தியானம் நிலைத்திடச்
சுத்தசக்திச் சுடரை வணங்கினர்
நித்த நித்த நினைத்தது கூடவே.

பக்திமேலிட்டு, பார்வை முற்றிலும் உள்ளாகி, சித்தம் லைத்துச் சிவத்தில் தியானம் உறுதியானதும், சுத்தசக்திச் சுடரைத், தாம் தினந்தோறும் நினைத்து வேண்டிய வரம் கைகூட வணங்கினர். ௧௫௯

இதய மொன்றினர்; இன்னுயிர் ஒன்றினர்;
மதியு மொன்றினர் உச்சி மரைமிசை,
பதியை யொன்றினர் பாய்கடல் வெள்ளத்தை
நதிக ளொன்றிய நன்மையைப் போலவே.

சத்தியனும் இந்திரையும் இதயத்தில் ஒன்றுபட்டனர், உயிரிற்கலந்தனர். அவர் மதி உச்சித் தாமரையான சஹஸ்ராரத்தில் ஒன்றுபட்டது. அங்கே அமர்ந்த பசுபதியான இறைவனை அவர் கலந்தனர். அக்கலப்பு கடல்வெள்ளத்தை இரண்டு நதிகள் ஒன்றியதைப் போன்றது. ௧௬௦

அந்த வேளை யிறைவனிவ் வன்பரின்
சிந்தை யாகுந் திருக்குறிப் பீந்தனன்.
இந்தி ரையுள் இலங்குமக் காட்சியை
முந்த வள்முகங் கண்டனன் வேந்தனே.

தியானசாதனத்தால் அந்தர்யாமியான பரமாத்மனைக் கூடி ஒரு வரம் வேண்டினல் அது கட்டாயம் பலிக்கும். அந்த வரத்திலேயே உயிர் மனம் மதி எல்லாம் ஒன்றுபட்டிருந்தால், அது பலிக்கும் அறிகுறியான காட்சிகள் தியானத்தில் யோகிகளுக்கு அவசியம் தோன்றும். இது அனுபவ உண்மை. யோகசம்யமத்தால் மஹான்கள் எக்காரியத்தையும் சாதிப்பார்கள். சத்தியனும் இந்திரையும் நெடுநாள் தங்கள் மனக்குறையை இறைவனிடம் முறையிட்டுத் தியானித்து வந்தனர். உள்ளிருக்கும் இறைவன் இன்றே அவர் குறைதீர்க்க ஒரு காட்சியளித்தான். அக்காட்சி இந்திரையின் உள்ளத்தில் தோன்றியது. தியானம் ஆனதும், மன்னன் பத்தினியின் முகத்தைப் பார்த்தான் அதில் ஒரு புதிய ஒளி வீசியது. உடனே நடந்ததை வினவினன். ௧௬௧

"என்னுயிர்க் கமுதே, கற்பின் எழில்பெறும் அழகே, இன்றுன்
பொன்முகம் பூரிக்கின்ற பொருளுரை!" யென்ன வேந்தன்,
"மன்னவா! மனத்தினுள்ளே மங்கலக் காட்சி கண்டேன்;
உன்னரும் உவகையாலே யுற்றதப் பூரிப்" பென்றாள்.

"என் உயிருககு அமுதம்போல் இன்பமானவளே, கற்பின் ஒளிவீசும் அழகியே! இன்று உனது பொன்முகம் புதிய பூரிப்பை அடைந்திருக்கிறதே. அதன் பொருள் என்ன?" என்று மன்னவன் ஆவலாகக் கேட்டான். "என் மன்னவா! எனது மனத்தினுள்ளே ஒரு மங்கலமான காட்சியைக் கண்டேன். அந்தத் தியானக்காட்சி எண்ணரிய களிப்பைத்தந்தது. அந்தக் களிப்பாலே உள்ளம் பூரித்தது. அதனல் முகமும் பொலிவுற்றது" என்றாள் இந்திரை. ௧௬௨

"பங்கய முகமும் அன்பு பாய்ந்தொளிர் மனமும் பூத்த
மங்கலக் காட்சி யென்னே யென்"னென வினவ மன்னன்,
செங்கதிர் முகத்தை நோக்கித் தேன்மொழி தேர்ந்து நெஞ்சிற்
பொங்கிய மகிழ்வின் ஊற்று வாய்வழி பொழியச் சொன்னள்.

"உனது தாமரை போன்ற முகமும், அன்பருவி எழுந்து பாய்ந்து அருளொளி விளங்கும் மனமும், இவ்வளவு மலர்ச்சி பெற்றதே! அதன் காரணமான மங்கலக்காட்சி என்ன, என்ன?" என்று மன்னன் வினவினன். கணவனது செங்கதிர் முகத்தை நோக்கித், தேன் போன்று இனிய மொழிகளைத் தேர்ந்து, உள்ளத்தில் பொங்கிய இன்ப ஊற்று வாய்வழியாகப் பொழியத் தனது தியானக் காட்சியை இந்திரை சொன்னள். ௧௬௩

(தொடரும்)

*ஓர் அங்க நாடகம்:*

# கூண்டுக் கிளி

## ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா

[ஓர் ஏழையின் வீட்டு உட்புறம். மச்சிலிருந்து தொங்கும் ஓர் சங்கிலியில் ஊசலாடும் கூண்டிலே ஓர் கிளி காணப் படுகிறது. வீட்டுத் தலைவி, அந்தக் கிளியோடு பேசுகிறாள்.]

பெண்: கூண்டிலே அடைபட்ட துர்ப்பாக்கியப் பட்சியே!—உன்னை அவர் சந்தையிலே ஒரு ரூபாய்க்கு வாங்கினார். ஒரே ரூபாய்! அந்த மூடச் சிறு வெள்ளிக் காசினால், உன் சுதந்திரத்தையே இழந்து விட்டாய்! வானத்து நட்சத்திரங்களையும் பாய்ந்தோடும் அருவிகளின் நீலவெள்ளத்தையும் தளதளவென்று ஜொலிக்கும் கனிமரங்களையும் நீ இழந்து விட்டாய்!—உனக்கு என்ன துர்ப்பாக்கியம்! உன் ஆத்மாவின் பாஷையையும், அதோடு உன்னருந் துணைவனையும் இழந்துவிட்டாய்! அழகு சொட்டும் சோகப் பசுங்கிளியே! கூண்டுக் கம்பிகளைத் திக்கற்றுக் கொத்துகிறாய்! சுதந்திர வேட்கை உன்னிடம் பொங்கி நிற்கிறது. ஆனால், அது பயனில்லையே. உன்னைத்தான் ஒருவர் ஒரு ரூபாய்க் காசுக்கு வாங்கிவிட்டாரே!—என்ன—என்ன? நான் நீயா, துர்ப்பாக்கியக் கூண்டுப் பறவையே!

[மகன் பிரவேசிக்கிறான்]

மகன்: அம்மா, அம்மா!

பெண்: என் முத்தே! என் மோகனமே! என் ரகஸ்யக் களஞ்சியமே!

மகன்: அம்மா, நான் மேகமாய்ப் பறக்க ஆசையா யிருக்கம்மா. மேகமாய் மாறி, அதோ பார், அந்தக் கறுப்பு மலை மேலே மிதக்கணும் போலிருக்கு.

பெண்: (அவனைத் தட்டிக்கொடுத்துக் கொஞ்சிக் கொண்டே) சரி, சரி. நல்ல ஆசைதான்.

மகன்: நான் மழையாய் மாறி அந்த மரங்களின் இலையை யெல்லாம் அலம்பணும். வெள்ளைப் பனியும் மஞ்சள் குருவியும் செவந்த ரோஜாவும் ஆகணும். உன் பதக்கத்தின் சிவப்புக் கல்லுக்குள்ளேயுள்ள வர்ணமாய் மாறணும்; மின்னலாய் மின்னணும்—பளீர் என்று மின்னும் ஒரு மின்னல் கோடாகணும். பச்சைப் பசேலென்றிருக்கும் வயலாய் மாறவும் எனக்கு ஆசையா யிருக்கம்மா!

பெண்: ஆமாம், ஆருயிர்ச் செல்வமே! நாம் என்னென்னவோ வெல்லாந்தான் ஆக விரும்புகிறோம்! ஆனால் முடியவில்லையே, என்ன செய்வது!

மகன்: அம்மா, அம்மா! வான வில்லும் வண்ணாத்திப் பூச்சியும் காயும் நிலாவும் ஆகிவிட எனக்கு ஆசையாயிருக்கே. அது ஏன் அம்மா?

பெண்: என் கண்ணே! ஒருநாள் இந்த அழகையெல்லாம் ஒருக்கால் நீ பெற்றுவிடப் போகிறாயோ என்னவோ!

மகன்: நம்ம சின்ன நாய்க்குட்டியிருந்ததே, காலையிலே துப்பாக்கியால் அப்பா சுட்டுட்டாரே; அந்தமாதிரி அழகான கண்களுள்ள நாய்க்குட்டியாய் நான் ஆகிவிட்டால், என்ன ஜோராயிருக்கும்? வீட்டுக்கு வரச்சே பித்துக்குள்ளி மாதிரி நடந்துண்டு, குரூரமாய் முழிச்சுண்டு, அந்தக் குட்டியை அப்பா சுட்டுட்டாரே! ஏன் அம்மா, அப்பா கண், உன் கண்மாதிரி இல்லே? ஏரி ஜலம்மாதிரி 'குளு குளு'ன்னு இருக்கே உன் கண்; அப்பா கண் மாத்திரம் சுடுகாட்டிலே எரியற நெருப்புமாதிரி இருக்கே! பாவம்! ஏன் அம்மா அந்த நாய்க் குட்டியெ அப்பா சுட்டுட்டார்?

பெண்: அதையெல்லாம் மறந்து விடு, கண்ணு! எங்கே, கிட்ட வந்து ஒரு முத்தம் கொடு, பார்க்கலாம்.

மகன்: அம்மா! உன்னை அப்பா முத்தமிட்டாரே, அப்போ உன் வாய் வலிக்க வில்லே?

பெண்: உஷ்! உஷ்! இதைக் கேள். நாளைக்குத் தீபாலங்காரத் திருநாள். நாமிருவரும் ஒரு சின்ன மண் கோட்டை கட்டுவோம். கட்டி......

ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயாவின் கவிதா விலாஸம் உலகப் பிரஸித்தி யாகும்; ஆங்கிலேயரெல்லாம் புகழ்வது. இந்த அருமையான ஓரங்க நாடகம் புதுவை 'பாரதி சக்தி நிலயத்தா'ரின் அனுமதியின்மேல், அவர்களுடைய 'ஐந்து நாடகங்கள்' என்ற ஆங்கிலப் பிரசுரத்தினின்றும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.



ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா

மகன்: அம்மா! உன்கிட்ட எனக்கு ரொம்பப் பிரியமா யிருக்கு, அம்மா!

பெண்: அட என் கண்மணீ!

மகன்: ஆனால், அப்பாவை எனக்குப் பிடிக்கவே யில்லே.

பெண்: என் செல்வமே! நாளைக்கு நூறு தீபங்களை ஏற்றுவோமா?

[புருஷன் பூரண மதுவெறியுடன் பிரவேசிக்கிறான்]

புருஷன்: நாளைக்குத் தீபாலங்காரத் திருநாள் என்றா சொன்னாய்? ஹா! ஹா! அடி மூடமே.........குடித்து விட்டு உளறுகிறாய் போலிருக்கிறது; இன்றைக் கல்லவா தீபாலங்கார நாள்! ஏற்று வீட்டிலுள்ள அத்தனை லாந்தல்களையும்; அவை என் கண்ணை உறுத்தினால், நொறுக்கித் தள்ளிடுவேன்; அதை மாத்திரம் பார்த்துக் கொள்.

பெண்: ஏன் எப்பொழுது பார்த்தாலும் நீங்கள் இப்படிக் குடித்துவிட்டு வீட்டுக்கு வருகிறீர்கள்?

புருஷன்: நான் புத்தித் தெளிவோடிருக்க வேண்டாமா? அதற்காகவே குடிக்கிறேன். நான் குடித்திருக்கும் ஒரே சமயத்தில்தான் என் புத்தி தெளிந்திருக்கிறது. கடவுள் ஏன் என்னைப் படைத்தார்? பெண்ணைக் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்? என் கைகள் ஏன் வலுவாயிருக்கின்றன? உன் உதடு ஏன் மிருதுவாயிருக்கின்றது? இதை யெல்

லாம் நான் குடித்திருக்கும் இந்த ஒரே சமயத்தில்தான் அறிகிறேன்.

மகன்: அம்மா.........அம்மா! எனக்குத் தூக்கம் வருகிறது.

புருஷன்: (குழந்தையிடம் சென்று அதன் வாயை முகர்ந்து பார்க்கிறான்) முட்டாள் பயலே! உன் வாய் நாறுகிறதேடா! நாயே, நாய்க்குட்டியே! திருட்டுத்தனமாய்க் குடிக்கிறாய் போலிருக்கிறது! அதனால் தான் எப்பொழுது பார்த்தாலும் நீ இப்படி உளறுகிறாய்......வெட்டுக் கிளியாகணுமாம்; வண்ணாத்திப் பூச்சி யாகணுமாம்; பேரீச்ச மரம் ஆகணுமாம்; இதாகணுமாம் அதாகணுமாம்! இதெல்லாமா உன் ஆசை? குடிகாரப் பயலே இந்தப் பிதற்றலெல்லாம் கவிதை என்கிறாள் உன் அம்மாள்! நீ ஒரு கவிஞன் என்கிறாள் அவள்! ஏ குடிகார அற்பமே! உன் வாய் நாறுகிறதேடா.

பெண்: உங்கள் வாயன்றோ நாறுகிறது.

புருஷன்: நீ என்ன பேசுகிறாய் என்று உனக்கே தெரியவில்லை. தான் பேசுவது என்ன என்று எந்தப் பெண்ணுக்காவதுதான் தெரியுமோ? மகனே! இங்கே வா. உன் வாயை உப்பு நீரில் கழுவி விடுகிறேன்!

பெண்: இதை என்னால் சகிக்க முடியவில்லையே!

புருஷன்: (குழந்தையைச் சுட்டிக் காட்டி) இதை நீ எவ்வளவோ சகித்துக் கொண்டிருக்கவில்லையா?

பெண்: கண்ணே! உன் கண்கள் தூக்கத்தால் கெஞ்சுகின்றன. படுக்கப் போ, அப்பா! நேற்றிரவு பூராவும் நீ இமை கொட்டவில்லையே.

புருஷன்: ஏன் அந்தக் கழுதை நேற்றுத் தூங்கவில்லை? தூங்குவதற்குத் தானே இரவைக் கடவுள் படைத்திருக்கிறார். இந்த அயோக்கியப் பயல் ஏன் இருளை நிந்தித்து, எதிர்க்கிறான்; இரவு பூராவும் கண் விழித்துக் கொண்டிருப்பது இருளை அவமதிப்ப தல்லவா? மடப்பயல்! ஏனடா நேற்றிரவு நீ தூங்கவில்லை?

பெண்: நீங்கள் வெளியே போயிருந்ததால் தான். இரவு முழுதும் கண் விழித்து, உங்களுக்காக நாங்கள் காத்துக்கொண்டிருந்தோம். நடுராத்திரியில் பயங்கரமான ஓலங்களோடு நமது வாசல் வழியாய் ஒரு பிரேதத்தைக் கொண்டு சென்றார்கள். என் குழந்தை பயந்து விட்டான். நீங்களோ இன்று காலை வரையில் திரும்பி வரவில்லை.

மகன்: அம்மா, படுக்கப் போகிறேன்.

புருஷன்: சோம்பேறிப் பயலே! என்னோடு கடலுக்கு வா, குளிக்கலாம். மகனே, மகனே! அகண்ட ஆழமான கடலில் ஒரு முழுக்குப் போடுவோம். உன் மெல்லிய மேனியை அலைகள் ஆசையோடு தழுவும். மகனே! ஆழ்ந்த கருங்கடல் நீர் உன் ஆழ்ந்த கருவிழிகளை முத்தமிடும். (முரட்டுத் தனமாய்ச் சிறுவனை முத்தமிடுகிறான்.) வா, இன்று மாலை போய்க் குளிக்கலாம், சூரியன் மலைவாயில் விழும்போது—ஆமாம், அவன் மலைவாயில் விழும்போது: ஹா! ஹா! ஹா!

பெண்: இன்று மாலை வேண்டாம்; இன்று மாலை வேண்டாம். நாளைக்கு, தயவு பண்ணி நாளைக்குப் போங்கள்.

புருஷன்: நாளை என்று ஒன்று கிடையாது. நாளை என்பது வரசிப் போன, முட்டாள்தனமான தோர் பொய்! இன்று தான் உண்மை. இப்பொழுது, இதோ, இங்கே யிருப்பது இன்று தான்; அதை நீ பார்க்க வில்லையா, உணரவில்லையா? ஓ! மாலை வெயில் மதுவாய் இனிக்கிறது! ஆம், மதுதான்! இன்னும் கொஞ்சம் மதுக் குடிக்கிறேன்! (ஜேபியிலிருந்து மதுச்சீசாவை வெளியே எடுத்து, கொஞ்சம் குடிக்கிறான்)

பெண்: மறுபடியுமா? அட ஈசுவரா! இவர் ஏன் இப்படிக் குடிக்கிறார்?

புருஷன்: சகல பொருள்களுமே தான் குடித்திருக்கின்றன. மேஜை குடித்திருக்கிறது; சுவர் குடித்திருக்கிறது; தரை குடித்திருக்கிறது; மச்சு குடித்திருக்கிறது. சகலமும் குடித்திருக்கின்றன. ஏன்—உன் கருங் கூந்தல் குடித்திருக்கிறது. சொல்லப் போனால், கடவுளே குடித்திருக்கிறார்! கடவுள் குடித்திருப்பதால் தான், தேளும், தேரையும், பாம்பும், காண்டாமிருகமும், நீர்யானையும், வெள்ளமும், பஞ்சமும், கோயிலும், குருக்களும், கடன்காரரும், கடன் சுமையும் தோன்றியிருக்கின்றன. அந்தக் குடிகாரக் கோமாளி மேல்தான் குற்றம். ஆமாம், கடவுள் பெருங்குடியன்—மனித ரத்தத்தை உறிஞ்சும் குடியன்! (விம்மியழுகிறான்; பிறகு, பெரு நகை புரிகிறான்).

பெண்: இல்லை; குழந்தையை இன்று மாலை உங்களோடு கூட்டிக் கொண்டு போகாதீர்கள். கிருபை பண்ணி நான் சொல்வதைக் கேளுங்கள்; உங்களைக் கெஞ்சுகிறேன்! கடல் கொந்தளிப்பா யிருக்கிறது.

புருஷன்: மகனே! உனக்குக் கடலாக மாற ஆசைதானே! ஹா! ஹா! ஹா! அந்தக் கடல்தான் என்ன குளுமை, என்ன நீலம், என்ன அற்புதம்!

மகன்: அம்மா, எனக்கு ரொம்பத் தூக்கம் வருகிறதே.

புருஷன்: (மூர்க்கமாய்) வா என்னோடு; வா, வா! அப்புறம் தூங்கலாம்; அப்புறம், அப்ப (கடைசிச் சொட்டு மதுவையும் குடித்து, சீசாவை எறிந்துவிட்டு) புறம்.

மகன்: அம்மா, அம்மா!

பெண்: குழந்தைக்குத் தூக்கக் கலக்கம்.

புருஷன்: அலைகள் விழித்துக் கொண்டிருக்கின்றனவே! (குழந்தையை இழுத்துக்கொண்டு வெளியே போகிறான்).

பெண்: (கிளியை நோக்கி) துர்ப்பாக்கியக் கூண்டுப் பறவையே! உன்னைச் சூழ்ந்திருக்கிறது உன் கூண்டு; என்னைச் சூழ்ந்திருக்கிறது என் விதி. இரண்டு பேருமே அடைபட்டு நசுங்கிச் சோர்ந்து போயிருக்கிறோம். (யாரோ கதவை யிடிக்கும் சத்தம் கேட்கிறது) யார் அங்கே?

பரதேசி: கதவைத் திற.

பெண்: நீ யார்?

பரதேசி: நான் ஒரு பரதேசி.

பெண்: வீட்டெஜமான் வெளியே போயிருக்கிறார். அப்புறம் வா.

பரதேசி: நாம் அனைவருமே எஜமான்கள் தான், உலகம் என்று சொல்லுகிறோமே இதற்கு. திற கதவை.

பெண்: (விளக்கை ஏற்றச் செல்கிறாள்) நான் விளக்கேற்றும் வரையில் பொறுத்திரு. (விளக்கை ஏற்றுகிறாள்) அதென்ன கூச்சல்? விளக்கணைந்து போய் விட்டதா? இல்லை, அது வெறுங் கனவு. (கதவைத் திறக்கிறாள்) ஏழைப் பரதேசியே! உள்ளே வா. நரைத்துக் களைத்துப் பசித்து வாடுகிறாய்போல் தோன்றுகிறாயே?

பரதேசி: நான் நரைத்துக் களைத்து ஒடிந்துதான் போனேன்.

பெண்: பாவம்!

பரதேசி: நீ இன்னும் என்னிடம் இரங்குகிறாயா?

பெண்: இன்னும் உன்னிடமா இரங்குகிறேனா? நீ யார்?

பரதேசி: என்னை நீ அடையாளங் கண்டு கொள்ளவில்லையா?

பெண்: வெகு நாளைக்கு முன் உன்னை நான் எங்கேயோ பார்த்த ஞாபகமா யிருக்கிறது; உன் குரலும்

கேட்ட குரலாகவே தோன்றுகிறது. ஆனாலும் உன்னை எனக்குத் தெரியவில்லை.

பாரதேசி : தெரியவில்லையா ?

பெண் : இல்லை.

பாரதேசி : உன் மறதிக்கு உன்மேல் குற்றமில்லை. என் தலைமயிர் வெண்பனிபோல் நரைத்து விட்டது ; உன் கூந்தலோ, சூரியோதயம் வந்தே தீரும் என்ற முழு நம்பிக்கையோடு இருண்டிருக்கும் இரவுபோல் இன்னும் கறுத்திருக்கிறது. என் கண்கள் பஞ்சடைந்து, ஜீவனற்று, சோர்ந்திருக்கின்றன ; உன் கண்களோ, இன்னும் இளமை கொழித்து, வசந்தத்தின் பெருவேட்கை நிறைந்து பொலிகின்றன.

பெண் : நீ யார் ?

பாரதேசி : உன் பெண்மையின் வாயிற்படியிலே நின்று, உன்னை முதன் முதலில் வரவேற்ற காதலன் நான் ; உனது ரகஸ்ய விருந்தினனாய்ச் சில காலமிருந்து, பின்னால் பிரிந்த துர்ப்பாக்கியன் நான். உனது கூண்டுக் கம்பிகளைத் தகர்த்தெறியலா மென்ற நம்பிக்கையோடுதான் நான் திரும்பி வந்திருக்கின்றேன்.

பெண் : என் கூண்டுக் கம்பிகளையா ?

பாரதேசி : உனது புலம்பலை இரவு தோறும் இரவு தோறும் நான் கேட்டிருக்கிறேன். சட்டம் அவனை உன் கணவன் எனக் கூறுகிறது. அந்தக் கோழை, ஒரு சமயம் சமையல் அறையிலே, ஓர் கத்தியை உன்மீது விட்டெறிந்தான். ஆனால், அது உன் நெற்றியில் படாது தவறி, இன்னும் சில காலம் நீ அவனது விளையாட்டுப் பொம்மையாய் வாழ விட்டுவிட்டது ! உன் கை வளையலைக் கையோடு நொறுக்கி, அந்தக் கண்ணாடித்தூள் உன் கையைக் குத்திக் குருதி வழியும்படி அவன் செய்ததை நான் அறிவேன். அட ஈசுவரா ! இத்தனை காலமும் நான் உன்னைக் காதலித்துக்கொண்டே யிருக்கிறேன். இப்போது நான் வந்தது என் எனில், இனிப் பொறுக்க முடியாது என்றுதான். என் சுந்தரியே ! உன் கூண்டுக்கம்பிகளைத் தகர்த்தெறிந்து, திறந்த தூய வான வெளியிலே, உன்னை அழைத்துச் செல்வேன் ; அங்கே நீ ஒளியையும் விடுதலையையும் பாடித் துதிப்பாய் !

பெண் : நான் வர முடியாது—இன்னும் முடியாது—முடியாது, இல்லை, முடியாது.

பாரதேசி : எனக்கு நேரமாகி விட்டது, போகவேண்டும். ஆனால், உனக்கு எப்போதாவது தேவை ஏற்பட்டால் என்னை நினைவு கூர், என்னை அழை. நான் சாலையோரத்தில், அதோ அந்தக் குடிசையில் தான் வசிக்கிறேன்.

பெண் : போகாதே, போகாதே. உனக்கோர் ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன்.

பாரதேசி : நான் உடனே போக வேண்டும்.

பெண் : பொறு ; குழந்தையைப் பார். அவன் மகா அழகு, மகா பெரியவன். என்னவெல்லாம் ஆக ஆசைப்படுகிறான் ! மேகமாய் மிதக்க வேண்டுமாம் ; பட்சியாய்ப் பறக்க வேண்டுமாம்; அலைந்து, அலைந்து, பாரதேசியாய் வெகுதூரம் திரிய வேண்டுமாம் !

பாரதேசி : பெண்ணே ! அவனைக் கடவுள் காப்பாற்றுவாராக ! [வெளியேறுகிறான்.]

பெண் : (கதவடியில் நிற்கிறாள். புருஷன் உரத்த நகைப்புடன் பிரவேசிக்கிறான்) பையன் எங்கே ?

(புருஷன் வெறி பிடித்தவன்போல் சிரிக்கிறான்.)

பெண் : குழந்தை எங்கே ?

புருஷன் : கடலைக் கேள் !

பெண் : என்ன !

புருஷன் : பையனிடம் நீ கொண்ட அன்பைவிட அதிக அன்பைக் கடல் கொண்டுவிட்டது. பெண்ணே ! அது என்ன அற்புதக் காட்சியா யிருந்தது தெரியுமா ?

பெண் : எங்கே சிறுவன் ?

புருஷன் : கடலின் வெள்ளலைக் கைகள் அவனுடலைக் கட்டி யணைத்துக் கொட்டி முழக்கின ; காற்று பட்சிகளைப்போல் சிட்டி யடித்தது ; முத்துக்கள் கண்விழிகளைப்போல் துள்ளி எழும்பின—ஹா ! என்ன காட்சி !—பெண்ணே ! குளிர்ந்த ஜலத்திரள் தன் மேனியைச் சூழ்ந்திருக்க, பையன் ஆசை கொண்டான். "அப்பா, நீ வீட்டுக்குப் போ. நான் சமுத்ர ராஜ குமாரிகளோடு விளையாடப் போகிறேன்" என்று அவன் கூறினான். உடனே கடலரசன் துள்ளி எழும்பிச் சிறுவனைக் கரத்திலேந்தி யிழுத்துக் கொண்டு, கடலுக்குள்ளே மூழ்கி விட்டான். பெண்ணே ! அது என்ன அற்புதக் காட்சியா யிருந்தது தெரியுமா ?

பெண் : என்ன ! என்ன சொல்கிறீர் ? உண்மையிலே அவன் முழுகி விட்டானா ! மகனே ! என் மகனே ! நீ எங்கேயடா போனாய் ?

புருஷன் : அவன் நாளைக்குத் தீபாலங்காரத் திருநாளுக்கு வீட்டுக்குத் திரும்பி விடுவான். ஹா ! ஹா ! ஹா !

பெண் : அவன் முழுகி விட்டானா ?

புருஷன் : பெண்ணே ! இதைக் கேள். நான் உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன். அற்புதமான உண்மை; அபாரமான உண்மை ; உருக்கமான உண்மை ! அந்த முட்டாள் சிறுவன் தனக்குத் தானே பேசுவதை நானும் பல நாளாய்க் கேட்டு வந்தேன். அவன் பேச்செல்லாம் குடிகாரன் பேச்சுப்போலிருந்தது ; ஆமாம், குடிவெறி அவன் ரத்தத்திலே தோய்ந்திருக்கிறது. என் தாத்தாவின் தகப்பன் ஒரு குடிகாரர் ; என் தாத்தா ஒரு குடிகாரர் ; என் தந்தை ஒரு குடிகாரர் ; நானும் ஓர் குடிகாரன். பல தலைமுறைகளாய் எங்கள் ரத்தத்திலே குடிவெறி ஊறிக் கிடக்கிறது. என் மகனும் வளர்ந்து ஓர் குடிகாரனாய்ப் போக எனக்கு இஷ்டமில்லை. ஆதலால்—அவனைப் பிடித்திழுத்துக்கொண்டேன் ; நேரே கடலுக்குச் சென்றேன் ; ஜலத்திலே அமிழ்த்தி விட்டேன் !

பெண் : அட பாவி ! அவன் உன் மகன் அல்லவே !

[பாரதேசி மௌனமாய் உள்ளே பிரவேசிக்கிறான் ; புருஷனை வெறித்துப் பார்க்கிறான்.]

---

## வாசனையின் ஆயுள்

நல்ல வாசனையைச் சுலபமாக அறிய முடியும். அது இருக்கும் இடத்திலேயே நிலைத்து நிற்கும் குணமுடையது. ஆம்பன்கோர்ட் என்னும் இடத்திலுள்ள ஓர் அறையில் சென்ற 100 வருஷங்களாக ஓர் வாசனை நிலைத்துள்ளது. இந்த வாசனையை உபயோகித்தவர் யாரென இன்று கூறமுடியவில்லை. உபயோகித்தவரைக் காணோம். ஆனால் அவர் ஞாபகத்தை நிலை நிறுத்தி நிற்கிறது இந்த வாசனை.

# பெண்கள் பார்லிமெண்டு

(எஸ். விசாலாட்சி)

ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் பெண் குழந்தைகளுக்கு ஒரு புதிய விளையாட்டைக் கண்டு பிடித்திருக்கிறாள். அதுதான் **பெண்கள் பார்லிமெண்டு.** இதில் இருக்கும் அங்கத்தினரெல்லாம் தேர்ந்தெடுக்கப் படாதவர்கள். ஆகையால், அவர்கள் தங்கள் தொகுதியிலுள்ள வாக்காளர்களைத் திருப்தி செய்ய வேண்டுமே என்று கவலைப்படுவதில்லை. இது ஆரம்பித்து ஒரு வாரந்தான் ஆகிறது. இதில் குழந்தைகளுக் குள்ள உற்சாகத்தைச் சொல்லிமுடியாது.

பார்லிமெண்டு விதிகளெல்லாம் இந்தப் பார்லிமெண்டில் அனுஷ்டிக்கப் படுவதில்லை யென்பது உண்மைதான். ஆனால், கனம் 'ஸ்பீக்கர்' அவர்களின் கட்டளையை இதுவரையில் யாரும் மீறவில்லை.

பார்லிமெண்டு ஆரம்பித்து ஒரு வார மாகியும் இன்னும் கட்சிப் பிரதி கட்சிகள், மந்திரி சபை முதலியன ஏற்பாடாக வில்லை. காரணம் அங்கத்தினர்கள் அனைவரும் ஒருமனப் பட்டிருப்பது தான். எனினும் கூடிய சீக்கிரத்தில் சௌஜன்யமாகவே எதிர்க்கட்சியொன்று ஏற்படுவதற்கு அறிகுறிகள் இல்லாம லில்லை.

சென்ற சனிக்கிழமை பகல் இரண்டுமணிக்குப் பார்லிமெண்டின் சாதாரணக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. விவாதத்தில் பல அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர். விஷயம் பொதுவாக அட்டவணையில் "நம் பார்லிமெண்டின் நோக்கம் என்ன?" என்று கண்டிருந்தது. மிஸ் சுந்தரி சுப்பிரமணியம் எதிர்ப்பின்றி ஸ்பீக்கர் ஸ்தானத்தில், அதாவது மாமா நாற்காலியில், அமர்ந்தாள். மீனாட்சி மாமி, ரங்கநாயகி, சுப்புலட்சுமி, சரஸ்வதி முதலியவர்கள் விஸிட்டர் காலரியில் (அதாவது கூடத்தின் மூலை) உட்கார்ந்திருந்தனர். விவாதத்தைத் துவக்குவதற்கு மிஸ் சூடாமணி ராமசாமி எழுந்தாளோ இல்லையோ, சுமார் மூன்று நிமிஷம் வரையில் காது செவிடுபடும்படி அங்கத்தின ரெல்லாம் கைதட்டினர். மூன்று நிமிஷத்துக்குப் பிறகுகூட அவர்கள் ஓய்வதாயில்லை. ஸ்பீக்கர் கையமர்த்தி வாய்மேல் ஒரு விரலை வைத்து 'உஸ்' என்று அதட்டிய பிறகுதான் அமைதி நிலவிற்று.

மிஸ் சூடாமணி கூறியதாவது: "கனம் ஸ்பீக்கர் அவர்களே! கனம் அங்கத்தினர்களே! (மாமா நாற்காலியில் துளியிடம் காலிவிடாமல் பூர்த்தியாய் உட்கார்ந்திருந்த 'கனம்' ஸ்பீக்கரை அனைவரும் பார்த்துப் புன்னகை புரிகிறார்கள்.) நமது பார்லிமெண்டின் நோக்கம் இன்னதென்று சொல்லுவதற்கு முன் நம் நாட்டில் ஸ்திரீகள் எவ்வாறு வாக்குரிமை பெற்றனர் என்பதைக் குறித்து உங்களுக்கு ஒரு சிறிது கூற விரும்புகிறேன். இங்கிலாந்தில் சுமார் 400 ஆண்டுகள் விடாமல் கிளர்ச்சி செய்து, பலர் ஜெயிலுக்குச் சென்றும் கொடிய துன்பங்களை அனுபவித்தும் ஓட்டுரிமையை அடைந்தனர். நமக்கோ இந்த உரிமை மிக எளிதில் வந்திருக்கிறது. மிகவும் குறைந்த காலமாகிய பதினெட்டு வருஷங்களுக்குள், பெண்களின் ஓட்டுரிமை இயக்கம் ஆரம்பித்து வலுவடைந்து, பல பிரிட்டிஷ் மாகாணங்களிலும், நான்கு சுதேச சமஸ்தானங்களிலும் வெற்றிகரமாக வழங்கி வருகிறது.

"இவ்வளவு சீக்கிரம் நம் நாட்டில் மாத்திரம் பெண்களுக்கு வாக்குச் சுதந்திரம் கிட்டியதற்குக் காரணங்களை மூன்றாகப் பிரிக்கலாம். ஹிந்து, முஸ்லீம் பழக்க வழக்கங்களை நுணுக்கமாகக் கவனித்தால், பெண் மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்த ஸ்தானம் இருந்து வருகிறது என்பது புலனாகும்.

"ஹிந்துக்கள் தங்களுடைய புனித தெய்வங்களில் பெண்ணையும் பிரிக்கமுடியாதவாறு இணைத்து விட்டனர். சிருஷ்டி கர்த்தாவின் நாவில் கல்வித் தெய்வமான சரஸ்வதியையும், ஜீவராசிகளுக்குப் படியளப்பவனாகிய விஷ்ணுவின் இதய கமலத்திலே செல்வத் தேவியான லட்சுமியையும், சம்ஹார மூர்த்தியான சிவ பெருமானின் சரீரத்தில் ஒரு பகுதி முழுவதிலுமே சக்தி சொரூபமான உமையவளையும் ஸ்தாபித்துத் தியானிக்கிறோம். முஸ்லீம் சமூகத்திலும் பெண்களுக்கு இதேமாதிரி உயர்ந்த ஸ்தான முண்டு.

"இவ்வாறு உயர்ந்த கௌரவம் பெண்களுக்கு இருப்பதால், அரசியல் விவகாரங்களிலும் அவர்களுக்குப் பங்களிக்க, நமது சமூகம் கிளர்ச்சி ஆரம்பித்த அதிசீக்கிரத்திலேயே முடிவு செய்தது அதிசயப்படத் தக்கது.

"இரண்டாவதாக, இந்திய அரசியலிலேயே ஒரு மாறுதல் ஏற்படவிருந்த காலத்தில், இப் பெண்கள் கிளர்ச்சியும் ஆரம்பித்தது. இதன் வெற்றிக்கு மிகவும் அனுகூலமாயிருந்தது. சுய ஆட்சிக் கிளர்ச்சி முற்றிவரும்போது அரசாங்க விவகாரங்களில பெண்களை அனுமதிக்க மறுப்பது பைத்தியக்காரத்தனமாயிருக்கும்.

"மூன்றாவதாக, நான் ஏற்கனவே கூறியபடி, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பெண்கள் ஓட்டுரிமைக்காகச் செய்துவந்த கிளர்ச்சிகள் வெற்றியடைந்தது. இந்திய அரசாங்கத்தாருக்கு ஒரு தூண்டுகோலா யிருந்தது. உலகமெல்லாம் மாறும்போது தாங்கள் மட்டில் வீணாகக் காலதாமதம் செய்வது தவறு என்று கருதி என்றோ ஒரு நாள் தந்து தீரவேண்டிய உரிமைகளை இன்றே யளிக்க அவர்கள் எண்ணுவது சகஜந்தானே?

"பம்பாய், சென்னை மாகாணங்களில் முனிசிபல் தேர்தல்களுக்கு ஓட்டுக் கொடுக்கப் பெண் மக்களுக்கு உரிமை சுமார் இருபத்திரண்டு ஆண்டுகளாகவே உண்டு. இந்தத் தேர்தல்களில் கலந்து கொண்ட பெண்கள் தங்கள் உரி

மையைக் கௌரவமாகவும் புத்தி சாலித்தனத்தோடும் உபயோகித்த தாகத் தெரியவருகிறது. தேர்தல்களுக்கு நின்றவர்களும் பெரும் பான்மையான ஓட்டுகளைப் பெற்று வெற்றியடைந்தனர். 1914-ஆம் ஆண்டிலிருந்து 1917-ஆம் ஆண்டு வரையில், காலஞ் சென்ற ஸ்ரீ பெஸண்டம்மையார் தம் சகாக்களான விபினசந்திர பாலர் முதலியவர்களுடன் நடத்தி வந்த 'ஹோம் ரூல்' இயக்கமும் ஸ்திரீகளை விழிப்பூட்டுவதற்குகந்த சாதனமா யிருந்தது. 1917-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் 18-ஆம் தேதி முதன்முதலாக அகில இந்தியப் பெண்மக்களின் பிரதிநிதிகள் அப்பொழுது இந்தியா மந்திரியாக இருந்த ஸ்ரீ இ. எஸ். மண்டேகுவுக்கு அனுப்பிய அறிக்கை, ஸ்திரீகளின் உரிமைகளை வற்புறுத்தியது. "நாங்கள் இந்தியாவின் ஜனசங்கியையில் பாதிக்கு அதிகமாகவே யிருக்கிறோம். எங்களையும் ஜனங்களாகவே மதித்து ஓட்டுரிமை வழங்கவேண்டும். **அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபைக்கு, அச் சபை ஏற்பட்டதிலிருந்தே, பெண்கள் ஓட்டுக் கொடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றனர்.** காங்கிரஸ் மகா சபையின் அக்கிராசனர் பதவியையும் பெண்கள் வகித்திருக்கின்றனர். இந்திய மக்கள் பெண்களுக்குச் சம அந்தஸ்து அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?" என்று அவ்வறிக்கை இடித்துக் காட்டியது. 1919-ஆம் ஆண்டு பார்லிமெண்டில் இந்திய அரசியல் மசோதா விவாதத்திற்கு வந்தது. அப்பொழுது சாட்சி கொடுப்பதற்காகப் பல ஸ்தாபனங்கள் தங்கள் பிரதிநிதிகளைப் பார்லிமெண்ட் கமிட்டியின் முன் அனுப்பின. அன்னி பெஸண்டம்மையார், சரோஜினி தேவி, ஸ்ரீ ஹீராபாய் டாட்டா இம் மூவரும் இந்தியப் பெண்களின் சார்பாகப் பார்லிமெண்ட் கமிட்டியால் விசாரிக்கப் பட்டனர்.

"இந்தியப் பெண்களின் ஓட்டுச் சுதந்திரம் இந்தியாவிலேயே நிர்ணயிக்கப் படவேண்டுமென்று காமன்ஸ் சபையால் தீர்மானிக்கப் பட்டது. அந்த இந்திய அரசியல் மசோதா சட்டமாக்கப் பட்ட இருபது ஆண்டுகளுக்குள் நாம் அரசியல் உரிமைகளில் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிறோம் என்பதற்குச் சான்றாக இரண்டே உதாரணங்கள் சொல்வது போதும். டாக்டர் முத்துலட்சுமியம்மை சென்னை அரசாங்க சபைக்கு உப அத்யட்சகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதும், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதை ஐக்கிய மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகளுள் ஒருவராக விளங்கியதும், அவர்களுக்கு முன்னால் பெண்கள் முன்னேற்றத்திற் காகத் தங்கள் வாழ்க்கையையே சமர்ப்பணம் செய்தவர்களுக்கு ஆறுத லளிக்கும். இத்துடன் என் சிறிய பிரசங்கத்தை முடித்துக் கொள்கிறேன்."

அக்கிராசனர், பலத்த கரகோஷத்திற் கிடையே எழுந்து, "அடுத்த கூட்டத்தில் ஸ்ரீமதி சரோஜனி ஸ்ரீனிவாசன் இந்திய சுதேச சமஸ்தானங்களில் பெண்கள் ஓட்டுரிமை பெற்றதைக் குறித்துப் பேசியபின் கட்சிப் பிரதிகட்சிகளும் இதர ஏற்பாடுகளும் நிறுவப்படும்" என்று அறிவித்ததோடு, சபை கலைந்தது.

---

## பல பயன்படும் நிக்கல்

இரும்புக்கு அடுத்த படியாகத் தொழில்களுக்கு உபயோகமானது நிக்கல். பார்வைக்கு இரும்பை ஒத்திருக்கும். இதை இரும்புடன் கலந்து உருக்கினால் இரும்பின் உறுதி அதிகப்படுகிறது.

ஆகாய விமானம், கப்பல், ரெயில், என்ஜின், போர்க் கருவிகள் முதலிய பல யந்திரங்களுக்கும் இது தேவை. துருப்பிடிக்காத குணமுடையதாதலால் மற்ற உலோகங்களுடன், இதைக் கலந்து கத்தி கோப்பை முதலான பல வீட்டுச் சாமான்களையும் செய்கின்றனர்.

1938-ஆம் ஆண்டு உலகத்தில் உலக முழுவதும் தோண்டி எடுக்கப்பட்ட நிக்கலின் மொத்த எடை 112000 டன்கள். அதில் கானடா 95000 டன்களையும் சோவியத் 3000 டன்களையும் வெட்டி எடுத்தன.

பின்லந்தில் இந்த நிக்கல் இருப்பதை அறிந்து 20 லக்ஷம் பவுன் செலவு செய்து ஆங்கிலக் கம்பெனி ஒன்று 1738-ஆம் ஆண்டு வேலை செய்ய ஆரம்பித்தது. இவ்விடத்தில் வருஷம் ஒன்றுக்கு 5000 டன் நிக்கல் தோண்டி எடுக்கலாம் என உத்தேசித்தனர். இதை இங்கிலாந்துக்கு அனுப்பிச் சுத்தம் செய்ய எண்ணினார்கள். உலகத்தில் அதிக நிக்கல் கிடைக்கும் நாடுகளில் பின்லந்து மூன்றாவது ஸ்தானம் வகிக்கின்றது. இந் நாட்டின்மீது ருஷியா கண் போட்டிருப்பதன் காரணங்களில் இதுவு மொன்றா யிருக்கலா மல்லவா?

# அவதார மூர்த்தியின் படம்

(சங்கு சுப்ரஹ்மணியன்)

“ சபர்மதி முனிவர் தமது சீடர்களோடு ஆமதாபாத் நகரை விட்டுத் தண்டி யாத்திரையாகப் புறப்பட்ட அந்தக் காட்சி, அன்று ராமசந்திரன் சீதா லட்சுமணர்களோடு அயோத்திமாநகர் விட்டுப் புறப்பட்ட காவிய நிகழ்ச்சிக்கு நிகராகும்” என்று ஒரு பத்திரிகை நிருபர் வெகு உருக்கமாக 1930-ஆம் வருஷத்தில் தந்தி அடித்தார்.

“ எதுவானாலும் சரி, பதினான்காண்டு வனம் போந்திருந்தே தீருவேன்” என்று அன்று ஸ்ரீராகவன் புறப்பட்டதே போல, “ தேசத்துக்குச் சுயராஜ்யம் பெறாமல் இந்தச் சபர்மதி ஆசிரமத்தில் இனி நுழையேன்” என்று வீர சபதம் பூண்டு மகாத்மாஜி புறப்பட்டாரென்பதை நாமறிவோம்.

அயோத்தியை விட்டுப் புறப்பட்ட ஸ்ரீராமன் எப்படிப் போனார்? வெகு வேகமாகப் போனாரா? மெதுவாகப் போனாரா? தாம் பிறந்து வளர்ந்து பெருமை பெற்ற அந்த அணிநகரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாரா? அல்லது லட்சியமே குறியாகக் கடிந்து நடந்தாரா? வால்மீகியும் கம்பனும் தங்கள் கற்பனையில் உதித்தவாறு அதைப் பலவிதம் வர்ணிக்கிறார்கள். நாம் கவிஹ்ருதயம் கொண்டு பார்ப்போமானால் ராகவனின் புறப்பாடு நமக்கு மற்றொருவிதக் காட்சியாகத் தோன்றலாம். ஆனால் யாவும் கற்பனைகளே.

இதோ மகாத்மாஜி தண்டி யாத்திரை போகிறார். அவர் நடையே ஓட்டமாக இருக்கின்றது. “ எனது சவம் சமுத்திரத்தில் மிதந்தாலும் சரி; உப்பெடுத்தே தீருவேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டுள்ள நடையல்லவா? அந்த ஆவேச நடையை நேருக்கு நேரே திரையில் காணும் சந்தர்ப்பம் தமிழருக்குக் கிடைக்கிறது. அஹிம்சா தர்மமே கோதண்டமாகவும் சத்தியமே அம்பறாத் தூணியாகவும் கொண்டு இந்த அவதாரமூர்த்தி யுத்தக் கோலத்தில் செல்லும் வீரக் காட்சியை நேருக்கு நேரே காணும் பாக்கியத்தை டாக்குமெண்டரி பிலிம்லார் உலகுக்கு அளித்திருக்கிறார்கள்.

இந்தத் தலைமுறையில் பிறந்துள்ளவர்கள் மட்டுமன்றி, இனிப் பிற்காலத்தில் வரும் பாரத சந்ததியாருக்கும் சாசுவத



சாஸனமாக இந்த அவதார மூர்த்தியின் லீலைகளடங்கிய இந்தப் படம் இருக்கப் போகின்றது.

ஒரு தடவை நான் எனது ஆப்த நண்பரொருவரோடு எரவாடாச் சிறைச்சாலைக்கு மகாத்மாவைக் காணுமாறு செல்ல நேரிட்டது. மகாத்மாவின் ‘ஹரிஜன் ’ பத்திரிகையைச் சென்னையில் அச்சுப் போட்டுத் தர விரும்பி மகாத்மாவிடம் சென்றிருந்தோம். எரவாடாச் சிறையில் ஒரு முற்றத்தில் கட்டிலில் மகாத்மா வெளியில் படுத்திருந்த திருக்கோலம், தூரத்தில் மாஞ்செடி, அதனருகே இரண்டு சிறிய அறைகள், ராட்டை—அந்தக் காட்சி ஒரு காவியக் காட்சியாக இருந்தது. “ இதைப் படமெடுக்க வசதியில்லையே! இந்தப் புனிதனின் வாழ்விலே பளிச்சிடும் பல சம்பவங்கள் வருங்கால சந்ததிக்கு உற்சாக மூட்டுவன வாயிற்றே” என்றெல்லாம் நான் நினைத்தேன். நான் நினைத்ததெல்லாம் போட்டோப் படம் எடுப்பதைப் பற்றியேதான். ஆனால் இந்த மகானின் வாழ்க்கையின் பல சம்பவங்களை ஆங்காங்கு பக்தர்கள் பிலிம்களாகவே எடுத்து மூலைக்கு மூலை வைத்திருந்தார்கள். அந்தப் பிலிம்களை எல்லாம் வாங்க நாடுநாடாகப் போய் ஏராளமாகப் பொருள்கள் கொடுத்து அவற்றைத் திரட்டித் தொகுத்து இப்பொழுது உலகுக்கே ஒரு பொக்கிஷமாகத் தந்திருக்கிறார் ஸ்ரீ ஏ. கே. செட்டியார் என்ற தமிழர். என்ன உழைப்பு! காந்திஜீயிடத்தில் எத்தகைய பக்தி! ஸ்ரீ செட்டியார் தந்துள்ள இந்த மகத்தான படத்தைப் பார்க்கும்போது தமிழர் அனைவருமே பெருமிதமடைகின்றோம்.

மகாத்மாவோடும் மகாத்மாவின் இயக்கங்களோடும் தமிழர்களுக்கு எப்போதுமே நெருங்கிய உறவு இருந்து வந்திருக்கிறது. தென்னாப்பிரிக்காவிலே மகாத்மாஜி சத்தியாக்கிரக ஆயுதத்தை, முதன் முதலாகப் பரீட்சை செய்தாரே அப்போது அவருடன் நின்று சேவை செய்தவர்களில் பெரும்பாலோர் தமிழ் மக்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். ஆனால் இந்தப் பிலிம் படத்திலே அந்தச் சத்தியாக்கிரக மகா சம்பவத்தைப் பற்றிய காட்சிகள் சிலவற்றையும் பார்க்குமாறு கிடைத்திருக்கிறதே இதை எதிர்பாராத பாக்கியமென்றே சொல்ல வேண்டும். அங்கு சத்தியாக்கிரகத்துக்கு முதற்பலியாக ஆகிய வீரத்தமிழ்ப் பெண்மணி வள்ளியம்மையின் உருவத்தை இந்தப் பிலிமில் பார்க்கும்போது நமக்கு மயிர்க் கூச்செறிகிறது.

இந்த ‘ மகாத்மா ’ என்ற படத்தை ஆங்கிலப் படமாக ஆக்கி மேனாடுகளுக்கு அனுப்புவதோடு மட்டும் நின்றுவிடாமல், தமிழ் மக்களும் காணவேண்டுமென்று நினைத்து, தமிழிலே பேச்சு, தமிழிலே பாட்டு, தமிழிலே வர்ணனை சகிதம் தமிழ்ப்படமாகவும் ஆக்கியிருக்கின்றார்களே அதற்காக டாகுமெண்டரி பிலிம்லாருக்குத் தமிழர் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்.

இப்போது நாம் பார்த்துவரும் பல சினிமாப் படங்களுக்கும் ‘ மகாத்மா காந்தி ’ என்ற இந்தச் சாஸனப் படத்துக்கும் முக்கியமான வித்தியாசமொன்றை நாம் உணர்வோம். அரிச்சந்திரன் கதையையோ அருந்ததி கதையையோ ஒரு பிலிமில் பார்க்கப் போனால், அங்கு அரிச்சந்திரனாகவும் அருந்ததியாகவும் தோன்றுகின்றவர்

கள் செயற்கையாக நடிக்கத் தான் நடிக்கின்றார்கள். அவ்வளவு தான்; அவ்வளவேதான். அவர்கள் விஸ்தரித்துக் காட்டும் உன்னத லட்சியவாழ்வுகளுக்கும் அந்தப் பாத்திரங்களை யேற்றுத் தோன்றும் ஜடசரீரிகளின் வாழ்க்கைக்கும் நாம் ஒட்டுப் போட்டுப் பார்ப்பதேயில்லை; பார்க்கவேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், நாம் திரையில் காண்பது வெறும் நடிப்புத்தானே?

ஆனால் இந்த "மகாத்மா காந்தி" என்ற படத்திலே கதாநாயகன் நடிக்கவே யில்லை; இயற்கையாகவே வாழ்கிறான்! எந்த லட்சியங்களை உலகுக்குப் போதிக்கிறாரோ அதைத் தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுகிறார் காந்திஜீ. கண்ணுக்கு நேரே காணும் அதே ஜட சரீரம்தான் அந்தச் சூட்சும லட்சியங்களையும் போதித்து வருகிறது; சந்தேகமே யில்லை. அவரது புனித வாழ்க்கையில் சில பாகங்களை அமரத்தன்மை வாய்ந்தனவாக ஆக்குகின்றன காமிராக்கள்.

சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்துக்கு முன் தொடங்கி இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தகாலம் வரை 26 வருஷங்களில் நடந்துள்ள சில முக்கிய சம்பவங்களை இந்தப் படத்தில் தொகுத்திருக்கிறார்கள். இரண்டு யுத்த காலங்களை எல்லைக் கற்களாகப் போட்டு இந்தப் படத்தை ஆக்கியிருக்கின்றார்களே அது இந்த உலகத்தில் பலாக்கார தாண்டவத்தை மெய்ப்பிக்கின்றது. இந்த அமளியினிடையே உன்னதமான அஹிம்சாதர்மத்தை உலகுக்கு உபதேசிக்கும் ஒரு புண்ணிய மூர்த்தி இருக்கின்றார் என்று உலகையே சுட்டிக்காட்ட ஏற்பாடு செய்ததுபோலவும் இருக்கின்றது இந்தச் சாஸனப் படம்.

இந்தப் படம் அமெரிக்காவில் காட்டப்பட ஏற்பாடாகி விட்டதாம். ஆஸ்திரேலியாவுக்குப் போகப்போகிறதாம். ஜப்பானுக்கும் போகும். அமளி அடங்கிய பின்பு ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. இந்த உலகத்துக்கு ஒரு புதிய வாழ்வைப் போதிக்கப் புறப்பட்டுள்ள நமது அவதார மூர்த்தியின் வாழ்வைக் கண்ட பின்னராவது உலகு ஓரளவு திருந்துவதற்கு, மறத்திமிர் மடிவதற்கு, வழியுண்டா என்று சோதித்து விடலாம். அத்தகைய பெருஞ்சோதனைக் கருவியாக வாய்த்திருப்பது இந்த மகாத்மா காந்தி என்ற படம்.

இது இந்திய நாட்டின் சுதந்திர சமுதாய வளர்ச்சியைக் காட்டும் படம் மட்டுமன்றி, பிலிம் தொழில் எப்படி வரவர முன்னேறி வந்திருக்கிறது என்பதையும் காட்டுகின்றதை ரஸிகர்கள் கவனிப்பார்கள். கோபால கிருஷ்ண கோகலே காலத்தில் எப்படி ஸினிமாப் படம் எடுக்கும் தொழி லிருந்தது என்பதிலிருந்து இன்றைக்கு எவ்வளவு அழகாகப் படம் எடுக்க முடிகிறது என்பது வரை, இந்த ஒரு படத்திலிருந்தே கவனித்து விடலாம். இது பிலிம் தொழிலுக்கும் ஒரு சாஸனப் படம் என்பது மிகை யன்று.

இந்தத் தேசத்தின் கைங்கரியத்துக்காகவே வாழ்ந்து உயிர்நீத்த புனித புருஷர்களான பால கங்காதர திலகர், சித்தரஞ்சன தாஸர் முதலியவர்களின் சுதந்திர யாத்திரைகளை இப்படத்தில் காணும்போது தேசபக்தன் மனது உருகுகின்றது. அந்நிய நாட்டுக்குச் சென்று அக்கிராசனர் வித்தல்பாய் பட்டேல் செய்த அரிய பிரசாரக் காட்சிகளை இந்தப் படத்திலே காட்டுகின்றார்கள்.

மகாத்மாவோடு இப்பொழுது நம்மிடை வாழ்ந்து வரும் வீரசிகாமணிகளான பண்டித நேரு, ஆஸாத், வல்லபாய் பட்டேல், கிருபளானி முதலிய தேச பக்தர்கள் வருவதையம் போவதையும் காணும்போதும் நமக்கு உணர்ச்சி ஊறுகின்றது.

மகாத்மா எப்படி வாழ்கின்றார், எப்படிக் குழந்தைகளோடு விளையாடுகிறார், அவரை இங்கிலாந்தில் எப்படி வரவேற்றார்கள் முதலிய பல காட்சிகளும் இந்த படத்திலே தொடர்ச்சியாக வருகின்றன. இவை நமது சரித்திர ஞானத்தைக் கிளறும் காட்சிகளாகும்.

இவ்வாறு பல்வேறு சிறப்புக்கள் கொண்ட இந்தப் புனித சாஸனத்தை, முதன் முதலிலே பார்க்கும் பாக்கியமும் தமிழனுக்கே கிடைத்திருப்பது அவனது பேரதிர்ஷ்ட மல்லவா?

---

## நடைக் கணக்கு

ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டவர்கள் ஒருநாளில் எவ்வளவு தூரம் நடக்கிறார்கள் என்ற கணக்கை ஒரு ஆங்கிலப் பத்திரிகை எடுத்திருக்கிறது அதைக் கீழே பாருங்கள் :—

| தொழில் | நாள் ஒன்றுக்கு | |
|---|---|---|
| செருப்புத் தைப்போன் | 20 | மைல் |
| கிராமத் தபால்காரன் | 18 | ,, |
| நர்சு | 13 | ,, |
| உழவன் | 12 | ,, |
| போலீஸ்காரன் | 9 | ,, |
| தோட்டக்காரன் | 6 | ,, |
| பஸ் கண்டக்டர் | 5 | ,, |
| வீட்டுவேலை செய்கிற பெண் | 4 | ,, |
| வியாபார ஸ்தல முதலாளி | ½ | ,, |
| மந்திரி | 800 | கஜம் |

# ஆபீஸில் யுத்தம்

(போத்தன் ஜோஸப்)

பண்டித ஜவஹர்லாலின் ஏகபோக ராஜ்யத்தில் நான் கொஞ்சம் ஆக்ரமணம் செய்யத் துணிந்தேன்; சர்வ தேச நிலைமை பற்றி எழுதலாமென்று மேஜைமுன் உட்கார்ந்தேன். அச்சமயம் அடுத்த அறையிலிருந்து ஒரு வெடிச் சத்தம் கேட்டது; பல குரல்களின் வெடி. தற்போதைய யுத்த தந்திரங்களைப் பற்றி இரண்டு சகாக்கள் வாதித்துக் கொண்டிருந்தார்கள். அது ராஜத்துவேஷமில்லாத நட்பு முறை விவாதமாயிருந்ததால், மேலே நடத்துங்கள் என்று அவர்களை நான் உற்சாகமூட்டினேன். நண்பர் ஏ, நண்பர் பி இருவருக்கும் நடந்த மகா விறுவிறுப்பான விவாதம் அது.

ஏ : பிரஞ்சுக் காலனிகளை நான் நம்பமுடியவில்லை. அதனால் தான் இந்தத் தந்திரத்தை நான் வற்புறுத்துகிறேன்.

பி : ஆனால், ருஷியா கூடிய சீக்கிரம் யுத்தத்தில் கலந்துவிடப் போகிறதே? அதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

இப்படிச் சொல்லிய பி, ருஷியாவின் பிரமாத வலிமையை விளக்கிக் காட்டுவதற்காக ஒரு கட்டுக் காகிதங்களை நெட்டித் தள்ளினார்.

“கொஞ்சம் மன்னியுங்கள்” என்று சொல்லிய ஏ, தமது பவுண்டன் பேனாவை மேஜைமீது பணயம் வைத்து, “இதுதான் பெஸ்ஸரேபியா. பாஸ்பரஸை நான் சூழ்ந்து கொள்ளும் போது, நடு நிலைமை நாடுகள் என்னோடு சேர்ந்து கொள்ளும்” என்று முடித்தார். பாஸ்பரஸுக்கு அடையாளமாக ஒரு தீப் பெட்டியையும் அவர் எடுத்துவைத்தார்.

அவர்களின் விவாதம் அதிதீவிரமாகி வந்தது. எனக்கோ, விவாதமென்றால் ரொம்பப் பிரியம். அது உண்மை விவாதமோ, பொய் விவாதமோ எப்படியிருந்தாலும் சரிதான்; ஆத்திரமாய் நடக்குமானால் எனக்குப் போதும்.

நானும் மெள்ளக் குறுக்கே புகுந்து, “எல்லாம் எஸ்தோனியா என்னவாகிறது என்பதையே பொறுத்திருக்கிறது” என்றேன்.

“எஸ்தோனியாவைத்தான் எற்கனவே ஸ்டாலின் கைப்பற்றி விட்டாரே!” என்று பதிலளித்த பி, பவுண்டன் பேனாவை நகர்த்த முயன்றார்.

ஏ-க்கும் பி-க்கும் வார்த்தை தடித்து, அதன் பலனாகப் பவுண்டன் பேனா தனது பழைய ஸ்தானத்தைத் திரும்பவும் அடைந்தது.

ஏ-சந்தோஷ முற்றார்; கூடிய நண்பர்கள் எல்லோரையும் பார்த்து, “சென்ற யுத்தத்தின் போது கபாரெட்டோவில் நடந்த நிகழ்ச்சி மாதிரி இல்லையா இது?” என்று கேட்டார். தங்கள் யுத்தத்தை ஏ-யும் பி-யும் தொடர்ந்து நடத்தட்டும் என்று நாங்கள் சம்மதம் கொடுத்தோம்.

பி : ருஷ்யாவின் போக்குத்தான் இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்போகிறது என்று நான் மீண்டும் சொல்லுகிறேன்.

ஏ : ருஷியாவுக்கும் இந்த யுத்தத்துக்கும் என்ன சம்பந்தம் என்றுதான் எனக்குத் தெரியவில்லை.

“இந்தச் சம்பந்தந்தான்” என்று சொல்லிய பி, மசிக் கூட்டை மேஜையின் ஒரு மூலையிலே நாட்டினார்.

ஏ : ஆனால், பல்கேரியாவின் சாமணப் பிடிப்பை நீங்கள் மறந்து விடுகிறீர்களே!

இவ்விதம் சொல்லிய ஏ, ஒரு கத்தரிக்கோலை எடுத்து, மேஜையின் குறுக்கே போட்டார்.

பி : பல்கேரியா வளைக்குமானால், ருமேனியா பாய்ந்து பிளக்க முயற்சிக்கிறது.

இப்படியுரைத்த பி, கரோல் மன்னரின் அடையாளமாக ஒரு பென்ஸிலை எடுத்து, கத்தரியின் பிளவுக்கு நடுவே நீட்டினார். ஏ-க்குக் கோபம் வந்து, மேஜை மீது ஒரு குத்துக் குத்தினார். நாங்களெல்லாம் திகிலுற்றோம்.

ஏ: அப்படியானால், நான் பின்புறமாய் வந்து தாக்குகிறேன். பிரென்னர்க் கணவாய்ப் பேட்டியிலே நடந்த ஒப்பந்தப்படி ஹிட்லர் அதிக விமானங்களை அனுப்புமட்டும் இந்தத் தந்திரத்தைக் கையாளுகிறேன். ஹிட்லர் முட்டாள் அல்ல.

பி-யினால் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் விழிப்பார் என்று, ஏ-பூரிப்புற்றார்.

பி : நீங்கள் எதிர்பாராதபடி இதைக் (ஒரு அரக்குத் துண்டு) கொண்டு உங்களைத் திடீரென்று தாக்கினேனானால், என்ன செய்வீர்கள்?

ஏ : உங்களை நாலாபுறமும் சூழ்ந்து, ‘பிளாக்கேடு’ செய்து விடுகிறேன்.

இந்தச் சூழ்ச்சியைக் காட்ட, ஏ ஒரு கயிற்றை எடுத்து வளைத்தார். ஆனால் இதற்குள் சகல தளவாடங்களும் காலியாகிவிட்டதால் இரு தாப்புமே சளைத்து விடும் என்று, நாங்களெல்லாம் பொதுவாக அபிப்பிராயப் பட்டோம். எனினும், ஆழ்ந்த யோசனைக்குப் பின், பி மீண்டும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தலானார்.

“இங்கே ஒரு மாஷினோ லயன் கோட்டை கட்டி, உங்களை நான் எதிர்க்கிறேன்” என்று சொல்லிய பி, மற்றொருவருடைய மூக்குப் பொடி டப்பியை எடுத்து மேஜையின் நடுமத்தியில் வைத்தார்.

“அதை நான் இந்தப் பதில் கோட்டையால் சமாளிக்கிறேன்” என்ற ஏ, சிக்பிரீட் லயனுக்கு அடையாளமாக இரண்டு சிகரெட்டுகளை எடுத்துவைத்தார்.

இதனால் இரண்டு நிமிஷநேரம் ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டது. இச்சமயம் நான் தேநீர் கொண்டுவரச் சொன்னேன்.

“தேநீர் குடித்து முடிந்ததும், போரைத் தொடர்ந்து நடத்துவோம்” என்றார் ஏ.

“சரணாகதி என்கிற பேச்சே நம்மிடம் கிடையாது” என்று கண்டிப்பாய்ச் சொன்னார் பி.

மேஜை மீது பரப்பிக் கிடந்த யுத்த அணிவகுப்புக்களைக் கலைக்க வேண்டாமென்று சொல்லி, நண்பர்களை மற்றோர் அறைக்கு அழைத்துச் சென்றேன். தேநீர் பருகியாயிற்று.

ஆறு நிமிஷங்களுக்குப் பின், பி ஐந்தாம் பட்டாளம் வைத்து வேலை செய்வதாக, ஏ குற்றம் சாட்டினார். இதற்குள் எல்லாரும் யுத்த களத்துக்குத் திரும்பினோம். “எந்தக் கட்சியுமே ஜயிக்கக் காணோமே” என்று நான் சொன்னேன்.

அப்போது பி, மிக ஆத்திரமாக “ஸிரியாவிலுள்ள குழாய் லயனைப் பற்றி பி-க்கு ஒன்றுமே தெரியாது” என்று சொன்னார்.

ஏ : உங்கள் குழாய் லயனை நான் ஹைபாவில் பிடித்துக் கொள்கிறேன்.

பி : யுத்தத்தைப் பல விடங்களிலும் நீங்கள் பரப்பிக் கொண்டு போவதானால், எனக்குப் பயமே யில்லை. உங்களிடமோ டாங்கிகள் கிடையாது. ஆகையால், நீங்கள் கச்சிதமாய்ப் பின்வாங்கியே தீரவேண்டும்.

ஏ : மடகாஸ்கரில் எனது ஸப்மரின்கள் இருக்கின்றனவே, அதற்கென்ன பண்ணுவீர்கள்? (தமது கைக்குட்டையை விரிக்கிறார்.)

பி : உங்களை நான் நசுக்கித் துவைத்துவிடுவேன். (பிரம்மாண்டமான பேரகராதிப் புஸ்தகமொன்றை எடுத்துப் 'பொத்' தென்று போடுகிறார்.)

நாங்கள் அனைவரும் நடுநடுங்கி விட்டோம். எங்கள் பத்திரிகையின் ஜூனியர் நிருபர், யுத்தக் கமிட்டிக்கு டெலிபோன் செய்து, அதன் ஆலோசனையைக் கேட்க விரும்பினார்.

ஏ : ஆனால், உங்களிடம் உணவுப் பொருள் கிடையாதே?

பி : எங்களிடம் ஏராளமான ரொட்டிகள் இருக்கின்றன ; ஐந்து வருஷத்துக்குத் தாங்கும் பெட்ரோலியத்தைக் கட்டுப்பாடு செய்து சிக்கனமாய்ச் செலவழிக்கிறோமாதலால், கவலையே யில்லை.

அவர் ஒரு ஜாடி தண்ணீரை எடுத்து வைத்தார். "இது வெறும் பீர்" என்று வெறுப்போடு கூவினார் ஏ. மத்தியஸ்தனாகிய நான் அந்த வார்த்தையை ஆட்சேபித்தேன். "பீர் சாராயத்தை முஸ்லீம்களும் சரி, காங்கிரஸும் சரி ஆட்சேபிக்கின்றன. பீரை யுத்தத்திலே நுழைத்தால், இந்தியாவின் யுத்த முயற்சிகளுக்குப் பங்கம் வந்து விடும்" என்று நான் தெரிவித்தேன்.

நீண்ட நேரம் விவாதம் நடந்த பின்னர், பி திடீரென்று ஒரு கோந்துக் கொட்டாங்கச்சியை எடுத்து மேஜையின் ஒரு மூலையில் வைத்தார்.

ஏ : சமரசமா?

பி : இல்லவே யில்லை ; முடிவுவரையில் போராடியே தீருவேன். அதோ உங்கள் அணிவகுப்புக்குப் பின்னால், பறக்கும் குடைவீரன் ஒருவன் வருகிறான். உங்கள் தந்தி, தபால் பாதைகளை அவன் சீர்குலைக்கப் போகிறான். 60-க்கும் 80-க்கும் இடைப்பட்ட வயதுள்ள கிழவரை யெல்லாம் ரிஸர்வ் பட்டாளத்துக்குக் கட்டாய ராணுவ சேவையில் நான் சேர்க்கப் போகிறேன். (இந்தியன் வருஷ அகராதியைத் தமது மூலபலப் பட்டாளமாக மேஜை மீது வைக்கிறார்.)

ஏ : இதோ உங்கள் மீது விமானப் படையெடுப்பு நடக்கிறது. (முஷ்டியைத் தூக்குகிறார்.)

பி : இதோ விமான எதிர்ப்பு பீரங்கிகள். (கட்டை விரலை நீட்டுகிறார்.)

மீண்டும் தேநீர் தருவிக்கப்பட்டது. யுத்த வீரர்களுக்குக் கொஞ்சம் ஓய்வு வேண்டாமா, அதற்காகத்தான் தேநீர். அந்த ஓய்வு நேரத்திலே "இந்தோ—சைனா விஷயத்தில் ஜப்பானின் நோக்கம் என்ன என்றால்—" என்ற ஏ, "அது இதுதான்" என்று சொல்லி, ஒரு பிஸ்கோத்தை 'லபக்' கென்று விழுங்கினார்.

மேஜை பூராவும் யுத்த தளவாடங்கள் நிறைந்துவிட்டன. ஏ-யும் பி-யும் மகா சூரராமாய்த் தோன்றினார்கள்.

"நீங்கள் இருவரும் இந்திய சர்க்காரின் பாதுகாப்புத் தொண்டர் படையில் ஏன் சேரலாகாது?" என்று நான் கேட்டேன். தங்கள் சண்டையைக் கடைசி வரையில் அந்த மேஜை மீது போட்டுத்தான் விடுவோம் என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

இன்னும் அவ்விருவரும் சண்டை போட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள். இந்த உலக யுத்தத்தை நடத்துவதற்காக, மேலும் மேலும் "பென்ஸிலைக் கொண்டா, ரப்பரைக் கொண்டா" என்றுகேட்டு வாங்கிக்கொண்டே யிருக்கிறார்கள் ; இருவரும் தர்ம சம்ரக்ஷணார்த்தமாகவே போடுகிறார்கள் சண்டை ; இருவரும் ஆபீஸிலே பெரிய 'நியூஸென்ஸ்' செய்துகொண்டிருக்கிறார்கள். ஒருவரை யொருவர் கொலை செய்து கொள்ளுகிறார்கள், வார்த்தை அம்புகளின்மூலம். இந்தச் சந்தையிரைச்சலை விட்டு, நான் என் தனியறைக்குள்ளே ஓடி வந்து புகுந்து கொண்டேன், இந்தக் கட்டுரையைப் பூர்த்திசெய்ய.

['ஓரியன்ட் இல்லஸ்டிரேட்டட் வீக்லி' யிலிருந்து மொழிபெயர்ப்பு.

---

## அறிந்தவனும் அறியாதவனும்

ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். தகுந்த வயது வந்ததும் அவன் அவ்விரு குமாரர்க்கும் உபநயனம் செய்து வைத்து, வேதாத்தியயனம் செய்யும்படி ஒரு குருவினிடம் ஒப்புவித்தான். நெடுநாள் கழித்து, அக் குமாரர்கள் அத்தியயனத்தை முடித்த பின் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். தகப்பனார், அவர்களைப் பார்த்து, "நீங்கள் வேதாந்தம் கற்றிருக்கிறீர்களா?" என்று கேட்டார். குமாரர்கள், "படித்திருக்கிறோம்" என்றனர். "அப்படியானால் பிரம்மம் எப்படிப்பட்டதென்பதைச் சொல்லுங்கள்," என்றார் பிதா. மூத்தகுமாரன், வேதங்களினின்றும், வேறு சாஸ்திரங்களினின்றும் அநேக மேற்கோள்களை எடுத்துக் கூறி. "அப்பா! அது மனோவாக்குக்கு எட்டாதது. இன்னின்ன மாதிரி இருப்பது. அதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று மேலும் பல ஆதாரங்களைச் சொல்லி முடித்தான். "குழந்தாய்! நீ பிரம்மத்தை நன்றாகத் தெரிந்துகொண்டவன் போலத்தான் இருக்கிறாய். இனி நீ உன் காரியங்களைக் கவனிக்கலாம்" என்று பிதா சொல்லிவிட்டு, இளையவனைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார். ஆனால் அவன் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லப் பிரயத்தனப்படவு மில்லை. உடனே அவனுடைய பிதா, அப்பா! நீ அறிவிப்பதுதான் சரியானது. அதீத ஸ்வரூபியைப் பற்றி ஒன்றும் விவரித்துச் சொல்ல முடியாது. சொல்லத் தொடங்கினால் அளவற்றதற்கு அளவையும், நித்யத்துக்கு அநித்யத்தையும், ஸம்பந்தமற்றதற்கு ஸம்பந்தத்தையும் ஸங்கல்பிக்கவேண்டி யிருக்கிறது. நீ ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்ததே அனேகமாயிரம் ஆதாரங்களை எடுத்துக் காட்டியதற்கு மேலாகும்" என்றார்.

— ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

'ஹரிஜ'னிலிருந்து :

## பாவியின் பணதர்மம் :
## ஒற்றை சத்யாக்ரகி : :
## சரித்திரங் காட்டும் வழி :

—காந்தி வாக்கு

### யார் மிஞ்சுவர் ?

ஆகாயத்திலிருந்து விமானக் குண்டுகள் சொரிவோரிடம் சத்தியாக்கிரகம் எப்படிச் செய்வது என்று கேட்டாள் ஒரு சிறுமி.

"சரணடையாமல், அஹிம்சா தர்மத்தை அனுஷ்டித்துச் சாவதுதான் வழி" என்று பதிலளித்தார் மகாத்மாஜி.

"அப்படியானால், சுதந்திரத்தை யனுபவிக்க யார் மிஞ்சி யிருப்பார்கள் ?" என்று வினவினாள் அந்தப் பிடிவாதச் சிறுமி.

**காந்திஜி :** "யாராவது உயிரோடு மிஞ்சியிருந்தால் அவர்கள் தான். ஆனால், நான் உன்னை ஓர் பதில் கேள்வி கேட்கட்டுமா? அணியணியாய் ஆயுதம் தாங்கிய போர் வீரர்களின் பெரும் பெரும் படையினர் முன்னே பாயும்போது, கதிர் அறுப்பதுபோல் அப்படியே சுட்டு வீழ்த்தப் படுகின்றனரே ; அங்கே சுதந்திரத்தை யார் அனுபவிக்கிறார்கள்? அவர்களின் பிரேதக் குவியலை மிதித்துக் கடந்து எதிரியின் கோட்டையைப் பிடிப்பவர்கள் தானே சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள்.

"பலாத்காரப் போரிலே, போரிடும் போர்வீரன் வெற்றியின் கனிகளைத் தானே அனுபவிக்கலாமென்று எதிர்பார்ப்பதே யில்லை. ஆனால், சத்தியாக்கிரகத்தில் மாத்திரம், வெற்றியின் பலனைத் தானே அனுபவிக்க உயிர்த்திருக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அது தோல்வியே என்றும் ஒவ்வொருவரும் எண்ணுகிறாப் போலிருக்கிறது! இது தர்க்கரீதிக்கொத்ததல்ல ; கேவல எண்ணமுமாகும். நாம் உயிரை இழப்பதன் மூலமே உயிரைக் காக்கிறோம்—சத்தியாக்கிரகம், பலாத்காரப் போர் இரண்டிலும் இப்படித் தான்."

### ஒரு விடுகதை

**கேள்வி :** "கோடிக் கணக்கான ஏழைச் சகோதரர்களைச் சுரண்டும் ஒரு மனிதன், ஜீவகாருண்யத் துறையில் செலவழிக்குமாறு அந்தப் பணத்தை உங்களைப் போன்ற ஒரு மகாத்மாவுக்கு நன்கொடை யளிப்பதாக வைத்துக் கொள்வோம். அவனுடைய பாவம் விடுமா ? உங்களையும் அவன் பாவம் சாராதா ?

**காந்திஜி பதில் :** "இந்த விடுகதைக்குப் பதிலளிப்பதற்காக, நான் ஒரு மகாத்மா என்றே வைத்துக் கொள்வோம். தீயவழியில் சம்பாதித்த பணத்தைத் தானம் கொடுப்பதால், கொடுப்பவரின் குற்றம் குறைந்து விடாது. அந்தப் பணத்தை அவர் தம்மிடமே வைத்துக் கொண்டால், மற்றோர் குற்றமும் அவர்மீது சாரும். ஆனால், பரிசுத்தமான நோக்கத்தோடு அந்தப் பணத்தை அவர் என்னிடம் நன்கொடை யளித்தால், அந்த அதிகப்படிக் குற்றத்துக்கு அவர் தப்பித்துக் கொள்ளுவார். அந்தப் பணத்தை நான் நல்ல வழியில் செலவழிப்பதால், அவரைக் கெட்ட வழியினின்று திருப்பவும் கூடும். அது எவ்வாறாயினும், அவர் பணத்தை நான் வாங்கிக் கொண்டதற்காக, என்மீது எவ்விதக் குற்றமும் சாராது. சாக்கடை ஜலம் சமுத்திரத்திலே விழுந்தால், சமுத்திரத்தின் பரிசுத்தத்தை அதுவும் அடைந்துவிடுகிறது. அதேபோல, கறைபட்ட பணமும் பரிசுத்த காரியங்களுக்கு உபயோகிக்கப்படும்போது, தானும் பரிசுத்த மாகி விடுகிறது."

* *

### ஒற்றை சத்தியாக்கிரகி

**கேள்வி :** "எங்கள் கிராமம் ஒன்றில் ஒரே ஒரு சத்தியாக்கிரகி இருக்கிறார். மற்றவர், ஹிம்சை அஹிம்சைகளைப் பற்றிக் கவலைப் படவேயில்லை. அந்த ஒற்றை சத்தியாக்கிரகி என்ன பயிற்சி பெற வேண்டும் ?"

**காந்திஜி பதில் :** "நல்ல கேள்வி. அந்த ஏகாங்கியான சத்தியாக்கிரகி தம்மைத் தாமே பரிசோதித்துக் கொள்ளவேண்டும். அவருக்குச் சர்வ ஜீவன்களிடத்திலும் அன்பு இருக்குமானால், அந்த அன்பு அவரது தினசரி நடத்தையிலே வெளிப்படவேண்டும். கிராமத்திலே யுள்ள மகா ஏழைகளிடம், தமது சேவையின் மூலம் அவர் உறவு பெற்றிருக்க வேண்டும். தோட்டிவேலை, தாதிகள் பணிவிடை, சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் பஞ்சாயத்து வேலை, கிராமத்துக் குழந்தைகளுக்குப் போதனைபுரியும் உபாத்தியாயர் வேலை இத்தனையையும் அவர் செய்ய வேண்டும். கிராமத்திலுள்ள கிழவர், குமரர் அனைவரும் அவரை அறிந்திருப்பார்கள். குடும்பியாயினும் அவர் புலனடக்கம் அனுஷ்டிப்பார். தம் குழந்தைகளுக்கும் அயல் வீட்டுக் குழந்தைகளுக்கும் அவர் வேற்றுமை யறியார். தமக்கென்று சொத்தெதுவும் அவர் வைத்திருக்கமாட்டார். தம்மிடம் இருக்கக்கூடிய சொத்தை, பிறர் உபகாரத்துக்கான தர்ம சொத்தென அவர் பாவித்து, தமது ஜீவனத்துக்கு அத்தியாவசியமான சொற்பத் தொகையையே அதிலிருந்து தாம் செலவழித்துக் கொள்ளுவார். மிக ஏழையின் தேவை எவ்வளவோ, அவ்வளவு தான் அவர் தேவைகளு மிருக்கும். அவர் தீண்டாமை அனுஷ்டியார் ; சகல ஜாதி, மதங்களைச் சேர்ந்தோரும் அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை அணுகுவார்கள். இத்தகைய சத்தியாக்கிரகி, நெடுநாள் வரையில் ஒண்டியா யிருக்கமாட்டார். தன்னை யறியாமலே, அந்தக் கிராமமே அவரைப் பின் பற்றத் தொடங்கிவிடும். அது அப்படிப் பின் பற்றினாலும் சரி, பின் பற்றாவிட்டாலும் சரி ; அவசர நெருக்கடி வரும்போது, அவர் ஒண்டியாகவே அதைச் சமாளித்து விடுவார் ; அல்லது அந்த முயற்சியில் தம் உயிரையே தியாகம் செய்வார்."

மேலும், தற்போது சேவாக் கிராமத்தில் தாம் இந்த லட்சியத்

தோடேயே சேவை புரிவதாக, மகாத்மாஜி குறிப்பிட்டுள்ளார்.

* *

### சரித்திரங் காட்டும் வழி

'அஹிம்சை அசாத்தியமா?' என்ற ஒரு கட்டுரையினிடையே மகாத்மா காந்தி பின் வருமாறு எழுதியுள்ளார்:—

"சரித்திரத்துக்கெட்டிய காலம் முதல் இன்று வரையில் நோக்கினோமானல், மனிதன் இடைவிடாமல் அஹிம்ஸை லட்சியத்தை நோக்கியே வந்துகொண் டிருப்பதைக் காண்போம். நமது மிகப் புராதன மூதாதையர், மனிதனை மனிதன் தின்று வாழ்ந்தார்கள். பிறகு, அது பிடிக்காமல் வேட்டையாடி ஜீவிக்கத் தொடங்கினர். அதற்கப்பால், வேட்டையாடி அலைந்து திரியும் வாழ்விலே மனிதனுக்கு வெட்க மேற்பட்டது. ஆதலால், விவசாயத்தி லீடுபட்டு, தன் உணவுக்குப் பூமாதேவியையே முக்கியமாய் நம்பி வாழலானன். இவ்வாருக, நாடோடி வாழ்விலிருந்து, நிலைத்த நாகரிக வாழ்வுக்கு மனிதன் வந்து சேர்ந்தான். கிராமங்களையும் நகரங்களையும் அமைத்தான். ஒரு குடும்ப அங்கத்தினனு யிருப்பதை விட்டு, சமூகத்திலும் தேசத்திலுமே அங்கத்தின ணுனன். இவையெல்லாம் அஹிம்சையின் முன்னேற்றத்தையும் ஹிம்சையின் நலிவையும் காட்டும் குறிகளாகும். இப்படி நிகழ்ந்திராவிட்டால், பல கீழ்த்தர ஜீவன்கள் மறைந்ததுபோலவே மனிதப் பூண்டும் உலகிலே அற்றெழிந் திருக்கும்.

"மனித குலம் இடைவிடாமல், அஹிம்சையை நோக்கி முன்னேறி வருகிறதென நாம் நம்பினோமானல், அது இன்னும் மேலே முன்னேற வேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது. இவ்வுலகத்திலே எதுவுமே இயக்கமின்றி நிலைத்திருப்பதில்லை. ஒவ்வொன்றும் இயங்கிக் கொண்டே யிருக்கிறது. முன்னேற்ற மில்லாது போனல், பிற்போக்கு நிச்சயம். ஆதியந்தமற்ற காலச் சக்கரத்தின் சுழற்சிக்குத் தப்ப, கடவுளையன்றி, வேறு யாராலும் முடியாது."

---

# துணுக்குகள்

ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 18,000 தியேட்டர்கள் இருக்கின்றன. மெட்ரோ கோல்டுவின் கம்பெனிக்கும், பாரமவுண்டு கம்பெனிக்கும் மட்டும் தனித் தனியே 400க்கு மேற்பட்ட தியேட்டர்கள் இருக்கின்றனவாம்.

* * *

இங்கிலாந்தில் புரோவின்ஷியல் சினிமாட்டோகிராப் கம்பெனிக்கு மட்டும் 120 சொந்தத் தியேட்டர்கள் இருக்கின்றன.

* * *

இந்தியாவில் இன்று காகிதம் செய்யும் இயந்திரசாலைகளின் கணக்கு வருமாறு:—

| வருடம் | மில்கள் | உற்பத்தி டன்கள் | மதிப்பு லக்ஷம் ரூ. |
|---|---|---|---|
| 1930 | 10 | 40,000 | 175 |
| 1935 | 10 | 47,000 | 189 |
| 1936 | 10 | 48,000 | 192 |

* * *

பின்வரும் இந்திய நகரங்களில் ஒவ்வொரு ஆயிரம் ஆண்களுக்கு எவ்வளவு பெண்கள் இருக்கிருர்கள் என்ற எண்ணிக்கை வருமாறு:—

| | பெண் |
|---|---|
| கல்கத்தா | 468 |
| பம்பாய் | 554 |
| சென்னை | 897 |
| ரங்கூன் | 477 |
| காராச்சி | 688 |
| அமிர்தசரஸ் | 666 |
| நாகபுரி | 848. |

* * *

ஆறுகள் ஓடும் வேகத்தில் மண்ணைப் பறித்துப் பள்ளம் செய்கின்றன. சிந்து நதி ஓடிவரும் வழியில் நங்க பிரபாத் என்னும் இடத்தில் 14,000 அடி ஆழமுள்ள பள்ளம் பறித்துள்ளது.

* * *

அக்பர் இந்தியாவின் மொகலாய அரசர்களில் சிறந்தவர். இவரிடம் சங்கீதத்தில் புகழ்பெற்ற தான்சேன் இருந்தார். இவர் சமாதி குவாலியரில் இருக்கிறது. அங்கு இன்றும் பல பாடகர்கள் தரிசனம் செய்யச் செல்லுகிருர்கள். இங்குள்ள புளிய மரத்தின் இலைகளைப் பாடகர்கள் மெல்லுகின்றனர். அப்படி மென்ருல், குரல் நன்ருக அமையும் என்று அவர்கள் நம்புகிருர்கள்.

* * *

சணல் வங்காளத்தில் விளைகிறது. கல்கத்தாவின் வியாபாரத்தில் அரைப்பங்கு சணல். 1928-29-ஆம் வருஷங்களில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி வியாபாரத்தில் காலேயரைக்கால் பங்கு சணல்.

| வருஷம் | சணல் ஏற்றுமதி மதிப்பு ரூ. |
|---|---|
| 1928-29 | 8925 லக்ஷம் |
| 1934-35 | 3234 லக்ஷம் |

* * *

மனிதன் சாதாரணமாக ஒரு நாளைக்கு 200 ரூ. எடை உணவும் நீரும் உட்கொள்ளுகிறுன். இதை வருஷத்திற்குக் கணக்கு செய்தால் 94 மணங்கு ஆகிறது.

* * *

"மருந்துகளின் கசப்பைத் தவிர்க்க அதை உண்டபின் நாக்கின்மேல் பனிக்கட்டியைத் தடவு என்கிருர்" ஹரால்டு டான்கில் என்ற டாக்டர்.

* * *

மிக அதிகமாய்ப் பரவியுள்ள வியாதி டல்நோய் தான். ஆஸ்திரேலியாக் கண்டத்தில் உள்ளவர்களில் நூற்றுக்கு 90 பேர் பல்வியாதி யுடையவர்கள். ரோம் சாம்ராஜ்யத்தில் நூற்றுக்கு 80 பேர் பல்வியாதி யுடையவர்களாக வாழ்ந்தனர். ஏழைகளில் நூற்றுக்கு 50 பேரையே பல் வியாதி பீடிக்கிறது. பணக்காரர்கள் அதிகமாகப் பீடிக்கப்படுவதன் காரணம், அவர்கள் அதிகமாக வேக வைத்த உணவுகளை உண்பதும், ஆகாரத்தில் அதிகச் சர்க்கரை சேர்த்துக் கொள்வதும், புளிப்பை உண்டாக்கக் கூடிய கிருமிகளைச் சேரவிடுவதுமே என்கிருர்கள் வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள்.

* * *

யானைக்குட்டி பிறந்தவுடன் 175 பவுண்டு எடை இருக்கிறது. பெரிய யானை 8,000 பவுண்டு எடை இருக்கிறது.

திமிங்கிலக்குட்டி 14,000 பவுண்டு. பெரிய திமிங்கிலம் 80,000 பவுண்டு.

யானை கர்ப்பத்தில் 2 வருடங்கள் வளர்கிறது.

ஒபாசம் என்ற ஊரும்பூச்சி 13 நாட்களே கர்ப்பத்தில் வளர்கிறது.

வெகு நாட்கள் ஜீவித்திருக்கும் பிராணி, வெகுநாள் கர்ப்பத்திலும் வளர்ந்து வருகிறது.

* * *

செருப்பு, பூட்சு கடித்த இடங்களில் கொப்புளங்கள் உண்டாகின்றன. இவற்றை ஸோப்பைக்கொண்டு சுத்த நீரினல் கழுவி, பின் சாராயத்தை அதன்மேல் தடவி ஒரு சிறு ஊசியினல் குத்திவிடவும். நீர் வெளிவந்தவுடன் சுத்தமான துணியைக் கட்டி மூடிவிடவும். ஆனல், நெருப்புக் கொப்புளங்களைக் குத்திவிடக் கூடாது என்கிருர் ஒரு டாக்டர்.

# புத்தக உலகம்

## கம்பன் கவிதை :

தமிழ் நாட்டின் கவிச்சக்கிரவர்த்தி கம்பனைப் பற்றியும், அவன் கவிதை நயங்களைப் பற்றியும் பதினேழு அருங் கட்டுரைகளைக் கொண்டது இந்நூல். கட்டுரைகள் பலரால் எழுதப்பெற்றவை. அனைவரும் நல்ல அறிஞர்கள். ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு நடை; ஒவ்வொரு அழகான மலர். தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் கம்பனைப் படித்தாக வேண்டும். தவறினால், கம்பனைப் பற்றியும் அவனது கவிதையைப் பற்றியும் பிறர் மூலமாவது கொஞ்சம், தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு நாட்டிலும் சிரஞ்சீவிக் காவியங்கள் இயற்றும் கவிஞர் சிலர்தான் தோன்றுவர். தமிழ் நாட்டின் சிரஞ்சீவிக் காவியம் கம்ப ராமாயணம். கம்பனை யறியாத, அறிந்துகொள்ள முடியாத குறையைத் தீர்த்துவைக்க ஒரு வெற்றிகரமான முயற்சி, இந்தக் 'கம்பன் கவிதை' என்ற நூலாகும். இரு தொகுதி கட்டுரைகள் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. ஒரு தொகுதி, கம்பனைப் பற்றியும் கம்பராமாயணத்தைப் பற்றியும் பொதுக் கட்டுரைகள், மறு தொகுதி, கம்ப ராமாயணத்திலுள்ள சில அருங்காட்சிகளையும், பாத்திர வர்ணனைகளையும் எடுத்து ஆராய்ந்து அவற்றின் சுவையை நாமறிய விளக்கும் கட்டுரைகள். யாவும் முதல்தர அறிஞர்கள் வரைந்தவை. இந்நூலின் முகப்புப் படமும் அமைப்பும் வசீகரமானவை. அருமையான தாளில் சுத்தமாக அச்சிடப் பெற்றுள்ளது. இதனைப் பிரசுரித்தோர் : —நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., மதராஸ். விலை : ரூ. 1-8-0.

## சக்கர வாகம் :

**சக்கரவாகம்** முதலிய பதின்மூன்று சிறு கதைகள் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. கதைகள் வெவ்வேறு ரூபமும் வெவ்வேறு உணர்ச்சிகளும் பெற்றிருக்கின்றன. அயல்நாட்டுக் கதைகளை நகல் செய்து, தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்கள் என்று பெயர் வாங்க முயலும் சிலரைப்போல் எழுதிய கதைகள் அல்ல இவை. அத்தனையும் தமிழ் நாட்டுக்கே சொந்தம் ; தமிழன் கற்பனையிலே உதித்தவை. 'என்று வருவானோ?' என்ற கதையின் உருக்கத்தையும், 'ஜாகை மாற்ற'த்தின் நகைச் சுவையையும் 'அமர'னின் கற்பனையையும் 'விஷ கன்னிகை'யின் வர்ண சௌந்தர்யத்தையும் எண்ண எண்ண மனம் பூரிக்கும். மற்ற ஒவ்வொரு கதையும் இவ்வாறே சுவை நிரம்பியிருக்கிறது. நடை அணி நிறைந்த நடை. வடமொழியின் அலங்கார அழகுகள் அங்கங்கே திகழ்கின்றன. சில இடங்களில் சற்று அதிக வர்ணனையால் ஓட்டம் குறைவதுபோல் தோன்றுகிறது. செதுக்கிய சிற்பத்துக்கு நகாசும் செய்வதுண் டல்லவா ; அதுபோல் செய்திருந்தால், கதைகள் மேலும் இனிப்பா யிருக்கும். பாதக மில்லை. பாலைக் கொடுத்தால், அதற்குமேலே கற்கண்டும் வேண்டுவது போல, ருசி மேலும் மேலும் கேட்கும். கிடைத்த அளவிலே சந்தோஷப்படுவோமே என்று இருப்பதில்லை. இதுபோல்தான் நாம் இங்கே குறிப்பிட்டது. இக்கதைகளின் ஆசிரியர் : ந. சிதம்பர சுப்பிரமணியம். பிரசுரித்தோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை : ரூ. 0-12-0.

## கட்ட பொம்மு :

"ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்
—அதைக்
காசுக் கிரண்டு விற்கச் சொல்லிக்
காகிதம் போட்டாண்டி வெள்ளைக்
காரன்"

என்ற பாட்டை, சின்ன வயதிலே கிராமாந்திரங்களிலே வாழ்ந்தவர் அனைவரும் கேட்டிருப்பார்கள். பாஞ்சாலங் குறிச்சியிலே ஊமைத்துரை என்ற ஒரு பாளையக்காரர், கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் நடத்திய வீரப் போரைப் பற்றிய இத்தகைய பாட்டுக்கள், கிராமத்துக்குக் கிராமம் இன்னும் வழங்கி வருகின்றன. பாஞ்சாலங் குறிச்சியில் நடந்த போர், மயிர் சிலிர்க்கச் செய்யும் ஓர் சரித்திர சம்பவமாகும். சிவாஜியின் வீரம், ஜான்ஸி ராணியின் தீரம் முதலியவற்றை யெல்லாம் அறிய விரும்பும் நாம் நம் தமிழ் நாட்டின் வீரன் ஒருவனைப் பற்றி நன்கறிந்து கொள்ளாதிருப்பது விநோதமே யாகும். அந்தக் குறையை நிவர்த்திக்கும் ஓர் அருமையான நூல் இந்தக் 'கட்ட பொம்மு'. சரித்திர ஆதாரங்களைத் தேடிப் பிடித்து, எளிய நடையில் கோவையாக ஒரு நாவலைப் போல் எழுதப்பட்டிருக்கிறது இது. அங்கங்கே உணர்ச்சியைக் கிளறும் சம்பவங்கள் வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. ஆசிரியர் : தி. நா. சுப்பிரமணியன். பிரசுரித்தோர் : நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை : ரூ 1-8-0.

## கனகாம்பரம் :

தமிழ் நாட்டுச் சிறுகதைகளின் மற்றோர் மலர்க் கொத்து இது. இருபத்தொரு கதைகள் இதில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதையும் ஓர் உணர்ச்சிச் சித்திரம். மிக இளகிய உணர்ச்சிகளை, வீணையின் நாதம்போல் எழுப்பி, நம் உள்ளத்தைக் கிளர்வதில் வல்லவர் இதன் ஆசிரியர். கதைகளில் எவ்விதப் பின்னலும் கிடையாது. ஆனால், கதா சுவாரஸ்யம் என்னவோ நிரம்பி யிருக்கிறது. படிக்கப் படிக்க மேலே படிக்கத் தூண்டுகின்றன இக்கதைகள். தமிழ நாட்டின் பல்வேறு விதமான பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு, ஜீவசித்திரங்களாக அவர்களை வர்ணித்திருக்கிறார். 'கனகாம்பரம்' என்ற கதை, கனகாம்பர மலரைப் போலவே மென்மை கொண்டது. 'நூர் உன்னிஸா' ஓர் அற்புதக் காதல் சித்திரம். இவ்வாறே மற்றக் கதைகளும் இன்ப ரஸமா யிருக்கின்றன. இந் நூலின் ஆசிரியர் : கு. ப. ராஜகோபாலன். பிரசுரித்தோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை : ரூ. 0-12-0.

## சங்கநாதம் :

இந்த மாதப் பத்திரிக்கையின் ஆனி-ஆடி மலர் வரப்பெற்றோம். 'சங்கநாதம்' தொடங்கி ஒரு வருஷம் பூர்த்தியாகிறது. அதனோடு, 'சங்கநாதம்' புதிய ஒளியும் புதிய அழகும் பெற்று வளர்ச்சியுற்றிருக்கிறது. தேச சேவை வாழ்வையன்றிச் சொந்த வாழ்வொன் றிருப்பதாக அறியாத கோஷ்டி யொன்று தமிழ் நாட்டிலே உண்டு. அதில் ஒருவரான ஸ்ரீ ரா. கிருஷ்ணசாமியை ஆசிரியராகக் கொண்டது 'சங்கநாதம்'. பற்பல ராஜீயக் கட்டுரைகள், இனிய கதை, நாடகம் முதலிய பல அங்கங்களையும் பெற்றுப் பொலிகிறது 'சங்கநாதம்.' எளிமையிலே நேர்த்தி யிணைந்த அமைப்பு; கம்பீரமான தொனி — இவை 'சங்கநாத'த்தின் பெருமையைப் அதிகரிக்கின்றன. புதிய பத்திரிகைகளுக்குப் பாலாரிஷ்டம் முதல் ஆண்டிலேதான். அந்தக் கண்டத்தைச் 'சங்கநாதம்' தாண்டி விட்டது. இனி அது நீடூழி வாழ்ந்து சேவை புரியு மென்பது நமது நம்பிக்கையும் வாழ்த்து மாகும். பிரசுரிப்போர் : ரா. கிருஷ்ணசாமி, 36, பெருமாள் முதலித் தெரு, ராயப்பேட்டை, சென்னை. தனிப் பிரதி விலை அணா 2. சந்தா ஒரு வருஷத்துக்கு ரூ. 1-8-0.

பாலர் பாட்டு:



# முத்தம் தா

(தே. வி.)

1. கண்ணே மணியே முத்தந்தா
   கட்டிக் கரும்பே முத்தந்தா
   வண்ணக் கிளியே முத்தந்தா
   வாசகக் கொழுந்தே முத்தந்தா

2. தேனே பாலே முத்தந்தா
   தெவிட்டாக் கனியே முத்தந்தா
   மானே மயிலே முத்தந்தா
   மடியில் வந்து முத்தந்தா

பாலர் கதை :

# மூன்று மிட்டாய்

(மாமி)



பச்சை மிட்டாய், சூடவில்லை, நார்த்தஞ் சுளை மூன்று மிட்டாய்களும் ஒரு கூடையிலே இருந்தன.

மூன்று மிட்டாய்களுக்கும் சண்டை வந்தது. "யார் ரொம்ப உயர்த்தி?" என்று சண்டை போட்டன.

"அதில் என்ன சந்தேகம்? நான் தான் உயர்வு. என் வர்ணத்தைப் பார். ரோஜாப்பூ மாதிரி செக்கச்செவேல் என்று இருக்கிறேன். எங்கள் குடும்பம் எப்போதும் கண்ணடிக் குப்பியிலேதான் சவாரி செய்யும். நீங்களெல்லாம் தகர டப்பாவில் அல்லவா போகிறீர்கள். உங்களோடு நான் சேர்ந்ததே தவறு. என் குடும்பத்தார் கண்டால், பரிகாசம் செய்வார்கள்" என்று, நார்த்தஞ்சுளை ஜம்பம் பேசியது.

"அடே யப்பா! உன் பவிஷு எங்களுக்குத் தெரியாதா? உன்னை வாயிலே போட்டால், ஒரு காரமுண்டா; ஒரு சாரமுண்டா? கொஞ்சம் புளிப்பாய்க்கூட இருக்கிறாய். நான் தங்கம் மாதிரி மஞ்சள் மசேலென்று இருக்கிறேன். என்னிடம் ஒரு காரம் உண்டு. கேட்கவா வேணும். நான்தான் உயர்த்தி" என்று டம்ப மடித்துக்கொண்டது சூடவில்லை.



"நீங்கள் இரண்டுபேர் சொல்வதும் தப்பு. எங்கள் பரம்பரைதான் ரொம்பப் பழமையானது. என் நிறத்தைப் பாருங்கள். நான் பசுங்கிளி மாதிரி பச்சைப்பசேல் என்று இருக்கிறேன். என்னிடம் புளிப்பு, காரம் இதெல்லாம் கிடையாது. நான் ஒரே இனிப்பு. வர்ணத்திலும் சரி; ரூபத்திலும் சரி; குணத்திலும் சரி; ருசியிலும் சரி—எல்லாவற்றிலும் நான்தான் உயர்வு" என்று பெருமை பேசியது பச்சை மிட்டாய்.

இப்படியே மூன்று மிட்டாய்களும் வெகு நேரம் வரை வாதமிட்டுக் கொண்டிருந்தன. கடைசியாக, அந்தப் பக்கத்தில் ஒரு சிறு பையன் வந்தான்.

அவனைப் பார்த்ததும், மூன்று மிட்டாய்களும் ஒரு யோசனை செய்தன. "இந்தப் பையன் முதலிலே யாரைத் தூக்கியெடுக்கிறானோ, அந்த மிட்டாய்தான் உயர்த்தி" என்றது சூடவில்லை. மற்ற இரண்டு மிட்டாய்களும் சம்மதித்தன.

பையன் கூடையின் கிட்ட வந்தான்.

"என்னைத்தான் பார்க்கிறான்" என்றது நார்த்தஞ்சுளை.

"என்னைத்தான் எடுக்கப் போகிறான்" என்றது சூடவில்லை.

"அவன் பார்ப்பதும் என்னை; எடுக்கப் போவதும் என்னைத்தான்" என்று சொல்லியது பச்சை மிட்டாய்.

பையன் கூடையிலே கையை விட்டான். மூன்று மிட்டாய்களையும் சேர்ந்தாற்போல் எடுத்தான். சிறிது நேரம் வரையில் மூன்றையும் கையிலே வைத்துக் கொண்டு அழகு பார்த்தான்.

"எது உயர்ந்தது?" என்று பையன் ஒத்துப் பார்ப்பதாய் நினைத்து, மிட்டாய்கள் சந்தோஷப்பட்டன.

பையனின் வாயிலே, ஜலம் ஊறியது. 'ஆ! அபக்' என்று மூன்றையும் சேர்ந்தாற்போலவே வாயில் போட்டுக்கொண்டு கடித்து விழுங்கினான்.

மிட்டாய்களின் தர்க்கமும் முடிந்தது. மிட்டாய்கள் இருந்தால் தானே தர்க்கம் செய்ய? அவைதான் உடைந்து கரைந்து பையன் வயிற்றுக்குள்ளே போய் விட்டனவே!

# இந்த இதழில்—

ஸ்ரீ. நாராயணன் (பக்கம் 55)

'ஹிந்துஸ்தான்' வாரப் பத்திரிகையின் ஆசிரியர். தமிழ் நாட்டில் மிக நல்ல அரசியல் ஞானம் உடையவர்களில் ஒருவர். தேசசேவைத் தீயில் ஸ்புடமிட்ட தியாகி. அவரிடமுள்ள அமைதியையும் இளக்கத்தையும் அவர் எழுத்திலும் காணலாம்.

ஆர். பி. மகாதேவ சிங் (பக்கம் 74)

வட நாட்டுக்காரர்தான். ஆனால், இரண்டு மூன்று தலைமுறைகளாகத் தென்னாட்டில் வந்து குடியேறிய வம்சம். மதுரை வாசம். இவருடைய தமிழ்ப்பற்றைக் கண்டு, பிறவித் தமிழர் நாணிக் கவிழ வேண்டும். பிழையற மிக அழகான தமிழ் எழுதுவார். சில கவிகளும் புனைந்து வைத்திருக்கிறார். இந்தப் பாட்டில்தான் என்ன குத்தல்! என்ன நகைச்சுவை!

ஆர். திருஞானசம்பந்தம் (பக்கம் 67)

தமிழ் நாட்டிலே இன்று சுயமாய் நல்ல கதைகள் எழுதுவோருக்குள்ளே வயதில் சிறிய வாலிபர் இவராய்த் தானிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கனிவும் உருக்கமும் நிறைந்த நடை எழுதுவார். இலக்கியம் ஒன்றுதான் வாழ்வின் லட்சியம் என்ற உள்ள எழுச்சி கொண்டவர்.

'உல்லாஸி' (பக்கம் 61)

ஓர் ருஷியக் கதையைத் தமிழ்ப் படுத்தியது இந்த 'ரகஸ்ய ஆயுதம்.' இவர் புனைபெயருக்குள் ஒளிந்து கொண்டது நியாயந்தானே. நமக்கென்ன அதைப்பற்றி? சுவாரஸ்யமான கதை நமக்குக் கிடைத்திருக்கிறது; அது போதும் நமக்கு.

பண்டித முத்துசாமி (பக்கம் 65)

'விடுதலை' யின் ஆசிரியரா யிருந்த அதே முதியவர்தான் இவர். வயசு எவ்வளவானா லென்ன? வாலிபக் குதூகலம் பொங்கித் ததும்புகிறது இவர் எழுத்தில்.

து. ப. ராஜகோபாலன் (பக்கம் 53)

தமிழ் நாட்டில் கதைகள், கட்டுரைகள் எழுதும் எழுத்தாளர்களில் முன்னணியில் ஸ்தானம் வகிக்கும் ஒருவர். நிறைந்த படிப்பாளி. வங்காளி பாஷா ஞானம் உள்ளவர்.

தி. ஜ. ர. (பக்கம் 54)

போன மாதம் என் இவரைப் பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை என்று ஒரு கேள்வி வந்தது. இன்று இவர் நமது காரியாலயத்திலேயே சேர்ந்திருக்கிறார். நம்மைப் பற்றி நாமே என்ன எழுதிக் கொள்வது?

# அல்லயன்ஸ் வெளியீடுகள்

(புதியவை)

## 1. மாதவீ கங்கணம்

ரோமேஷ் சந்திர தத்தர் இயற்றியது.
வெ. கா. ராமநாதன், பி.எ., பி.எல். மொழிபெயர்த்தது

| | |
|---|---|
| தொகுதி I | 2 0 0 |
| தொகுதி II | 1 4 0 |

## 2. தீனபந்து ஆண்ட்ரூஸ்

தி. ஜ. ர. எழுதியது. 0 10 0

## 3. எஸ். வி. வி. சிறுகதைகள்

(தமிழில்)

21-வாழ்க்கைச் சித்திரங்கள் ரூ. 1-0-0, 30-11-40 வரை குறைக்கப்

(தபால், வி. பி. செலவு தனி) [பட்ட விலை 0 8 0

**அல்லயன்ஸ் கம்பெனி**

மயிலாப்பூர், சென்னை

## முக்கிய அறிவிப்பு

லியோ டால்ஸ்டாயின் 'இனி நாம் செய்ய வேண்டுவது யாது?' என்ற சக்தி மலர் 1, ஆங்கிலத்தில் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ்காரர் பிரசுரித்ததும் ஆய்மெர் மாட் என்பவரின் ஆங்கில மொழிபெயர்ப்புமான "What then Must we do?" என்ற புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும் என்பதை இதன் மூலம் சந்தோஷத்துடன் பொது மக்களுக்கு அறிவிக்கிறோம்.

**சக்தி காரியாலயம்,**
51 C. 52 அரமனைக்காரத் தெரு,
சென்னை.

**THREE COLOUR**
**Process Blocks**



M.C. APPASAWMY CHETTY & Co.
COLOUR HALFTONE & LINE
BLOCK MAKERS
14, Jone's St., Mannady,
MADRAS

## ஸ்ரீ பழநி பஞ்சாமிர்தம்

தமிழர்கள் குலதெய்வமும் கலியுகப் பிரத்தியக்ஷ தெய்வமுமான ஸ்ரீ பழனி ஆண்டவர் அபிஷேக பஞ்சாமிர்த சந்தன விபூதி பிரசாதங்களடங்கிய செட் 1-க்கு ரூ. 3-8-0.

பக்தர்கள் நாமநக்ஷத்திரத்தால் விசேடமாக முறையே ஆண்டவர் பாதாரவிந்தத்தில் அர்ச்சனை ஆராதனை செய்து பிரசாதமனுப்ப ரூ. 1-0-0.

மாதக் கார்த்திகைதோறும் வருடக் கட்டளையாக அர்ச்சனை செய்து பிரசாத மனுப்ப ரூ. 7-0-0.

P. நடராஜ பண்டாரம்,
மலைக்கோவில்,
அயன் மிருஸ், பழனி, S. I

# எங்களிடம் கிடைக்கும் நூல்கள்

### சக்தி காரியாலய வெளியீடுகள்

**சக்தி மலர்**

| | | |
|---|---|---|
| இனி நாம் செய்ய வேண்டியது யாது? | 0 | 12 |
| உலகம் சுற்றும் தமிழன் | 0 | 12 |
| நிர்மல குமாரி | அச்சில் | |

### அன்பு நிலைய வெளியீடுகள்

**சுவாமி சுத்தானந்த பாரதியார்**

| | | |
|---|---|---|
| பைந்தமிழ்ச் சோலை | 0 | 4 |
| இன்ப மாலை | 0 | 6 |
| உடலுறுதி | 1 | 0 |
| பொது நெறி | 0 | 2 |
| திருக்குற ளின்பம் | 1 | 4 |
| ,, கலிக்கோ | 1 | 12 |
| இன்று மனிதனும் இனிவரும் மனிதனும் | 0 | 6 |
| வரகவி தாகூர் | 0 | 3 |
| தியானமாலை | 1 | 0 |
| புதுமையும் பழமையும் (நாடகம்) | 0 | 8 |
| வசந்த சுந்தரி | 0 | 10 |
| சிவாஸ்திரம் | 0 | 8 |
| புத்தர் கருணை | 0 | 8 |
| அன்பின் அற்புதம் | 0 | 10 |
| திருநூல் அல்லது தூயவாழ்வு | 1 | 0 |
| தமிழுணர்ச்சி | 1 | 0 |
| யோகசித்தி | 2 | 8 |
| அரவிந்த யோக தீபிகை | 0 | 8 |
| மஹா கவி காளிதாசன் | 1 | 4 |
| நாடகக் கலை | 0 | 3 |
| மஹரிஷி தாயுமானுர் | 0 | 4 |
| ஏழை படும் பாடு | 1 | 8 |
| இளிச்சவாயன் | 1 | 0 |
| பக்திப் பரவசம் (பாமலர்-க) | 0 | 10 |
| குழந்தை யின்பம் ( ,, -உ) | 0 | 3 |
| பேரின்பம் ( ,, -ந) | 0 | 4 |
| திருமணப் பாட்டு ( ,, -ச) | 0 | 4 |
| அன்னை | 0 | 4 |
| சிலம்புச் செல்வம் | 1 | 12 |
| ஹிந்தி அவசியமா? | 0 | 4 |
| அருட்சுடர் | 0 | 12 |
| மகா கவி தாந்தே | 1 | 0 |

### பாரதி பிரசுராலய வெளியீடுகள்

**சி. சுப்பிரமணிய பாரதியார்**

| | | |
|---|---|---|
| தேசிய கீதங்கள் | 0 | 5 |
| தோத்திரப் பாடல்கள் | 0 | 5 |
| வேதாந்தப் பாடல்கள் | 0 | 3 |
| விநாயகர் நான்மணி மாலை | 0 | 2 |
| கண்ணன் பாட்டு | 0 | 3 |
| புதிய ஆத்திச்சூடி முரசு, பாப்பா பாட்டு | 0 | 1 |
| பாரதி அறுபத்தாறு | 0 | 1½ |
| குயில் | 0 | 2½ |
| பாஞ்சாலி சபதம் | 0 | 8 |
| ஸ்வசரிதையும் பிறபாடல்களும் | 0 | 10 |
| ஞான ரதம் | 0 | 4 |
| பதஞ்சலியோக ஸூத்ரம் | 0 | 3 |
| வேத ரிஷிகளின் கவிதை | 0 | 2 |
| கீதை முன்னுரை | 0 | 2 |
| சந்திரிகையின் கதை | 0 | 8 |
| நவதந்திரக் கதைகள் | 0 | 6 |
| கதைக் கொத்து | 0 | 8 |
| தராசு, சித்தக்கடல் | 0 | 4 |
| கட்டுரைகள் தத்துவம் | 0 | 10 |
| ,, மாதர் | 0 | 8 |
| ,, கலைகள் | 0 | 8 |
| ,, சமூகம் | 0 | 12 |
| Agni & Other Poems | 1 | 0 |
| Essays and other prose fragments | 1 | 0 |
| பாரதி விளக்கம் | 0 | 4 |

### நவயுகப் பிரசுராலய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கம்பன் கவிதை | 1 | 8 |
| புதுமைப் பித்தன் கதைகள் | 2 | 0 |
| கட்ட பொம்மு | 1 | 8 |
| பேஸிஸ்ட் ஜடாமுனி | 1 | 8 |
| தேவதாஸ் | 1 | 0 |
| உலகத்துச் சிறு கதைகள் | 1 | 0 |
| மாகாண சுயாட்சி | 0 | 8 |
| தேய்ந்த கனவு | 0 | 8 |
| சீன—ஜப்பான் | 0 | 8 |
| மைக்கேல் காலின்ஸ் | 0 | 8 |
| எல்லோரும் ஓர் குலம் | 0 | 8 |
| வார்தா திட்டம் | 0 | 8 |
| இரட்டை மனிதன் | 0 | 8 |
| பொம்மையா, மனைவியா? | 0 | 8 |
| லெனின் | 0 | 8 |
| திரிபுரி காங்கிரஸ் | 0 | 6 |
| நாம் எங்கிருக்கிறோம் | 0 | 4 |
| கப்சிப் தர்பார் | 0 | 8 |
| மதனி | 0 | 4 |
| ஆறு கதைகள் | 0 | 4 |
| பக்த குசேலா | 0 | 3 |
| நாசகாரக் கும்பல் | 0 | 3 |
| அடிமைத்தாய் | 0 | 3 |
| சுகாதாரச் சட்ட விளக்கம் | 0 | 1 |

### Nature Cure Publishing House

| | | |
|---|---|---|
| Practical nature cure | 4 | 0 |
| Drugless healing | 0 | 6 |
| Fasting cure | 0 | 6 |
| Defective sight—its cause and cure | 0 | 3 |
| Mental healing | 0 | 2 |
| Pranayama | 0 | 2 |
| Maha Yoga | 1 | 0 |
| மருந்தில்லா வைத்தியம் | 0 | 4 |
| வாயு பலம் | 0 | 2 |
| உபவாச தத்துவம் | 0 | 4 |
| பூர்ண சக்தி அல்லது நோயற்ற இன்பவாழ்வு | 0 | 4 |
| பத்திய உணவு | 0 | 2 |

### புதுச்சேரி பாரத சக்தி நிலைய வெளியீடு

**சுவாமி சுத்தானந்த பாரதியார்**

| | | |
|---|---|---|
| பாரத சக்தி | 1 | 8 |
| ,, (கலிகோ) | 2 | 0 |
| அரவிந்தப் பிரகாசம் | 0 | 12 |
| Mahatma Ramalingam | 1 | 0 |
| கீதை காட்டும் பாதை | 0 | 10 |
| The Yoga of Sri Aurabindo | 2 | 0 |
| பரமஹம்ச லீலை | 2 | 4 |
| ஞானத்திருமலை | 0 | 2 |
| வைராக்கிய கீதம் | 0 | 2 |
| அரவிந்த வாசகம் | 0 | 1 |

### சக்தி தாசன்

| | | |
|---|---|---|
| தமிழ் வெறி | 0 | 4 |
| பாரதி லீலை | 0 | 5 |

### Harindranath Chattopadhyaya

| | | |
|---|---|---|
| Five plays | 1 | 8 |
| Strange Journey | 3 | 0 |

### T. Lakshmana Pillai

| | | |
|---|---|---|
| இசைநூல் (சங்கீதம்) | 5 | 0 |

### மயிலை சீனி. வெங்கிடசாமி

| | | |
|---|---|---|
| பௌத்தமும் தமிழும் | 1 | 8 |
| கிருஸ்தவமும் தமிழும் | 1 | 0 |

### வெ. சாமிநாத சர்மா

**'பிரபஞ்ச ஜோதி பிரசுரம்'**

| | | |
|---|---|---|
| அபிமன்யு வீரநாடகம் | 0 | 8 |
| பண்டித மோதிலால் நேரு | 0 | 12 |
| முஸோலினி | 1 | 4 |
| அபிசீனிய சக்ரவர்த்தி | 0 | 8 |
| ஹிட்லர் | 2 | 4 |
| ஸ்பெயின் குழப்பம் | 0 | 10 |
| ஜெக்கோ | 1 | 0 |

### மின்னொளிப் பிரசுரம்

பிரிக்கப்பட்ட பர்மா
பெடரல் இந்தியா
சமஸ்தான இந்தியா
இந்தியாவின் தேவை
உலகக் கண்ணாடி
காந்தியும் ஜவஹரும்
சார்லஸ் டார்வின்
ஐஸக் நியூடன்
பிரபுல்ல சந்திர ரே
தாமஸ் எடிசன்
ஜகதீச சந்திரபோஸ்
சி. வி. இராமன்

(ஒவ்வொன்றும் 2 அணா)

### சைவ எல்லப்ப நாவலர்

| | | |
|---|---|---|
| திருவருணைக் கலம்பகம் மூலமும் (உரையும்) | 1 | 0 |

### இதர வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| திருப்பெரு வடிவம் | 0 | 3 |
| உயிரின் உண்மை | 0 | 8 |
| Rupee Interest ready reckoner | 1 | 4 |
| English parallelr proverbs | 0 | 8 |

### ஸ்ரீ ப. கோதண்டராமன், M.A., B.L.

| | | |
|---|---|---|
| யோகம் செய்ய வேண்டுமா? | 1 | 0 |
| அரவிந்தரும் அவரது யோகமும் | 0 | 9 |
| உபாசினி பாபா | 0 | 6 |

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், அலையன்ஸ் கம்பெனி, இதர பிரசுரங்களும் கிடைக்கும்.

**சக்தி காரியாலயம், 51/C, 52, அரமனைக்காரத் தெரு, சென்னை.**